# தமிழரசு

16-10-1978 50 காசு.



சென்னை, அண்ணா மேம்பாலம்

# அரசு சிமெண்ட்

உபயோகித்துக் கட்டப்பட்டது!




- கண்கவர் வண்ணம்
- துல்லியமான பூச்சு
- அதிகப்படி மணல் கலந்து உபயோகிக்கக் கூடியது.
- காங்க்ரீட் சுண்ணாம்புக் கலவை வேலைக்குகந்தது.
- அதிக உழைப்பு உறுதி
- கந்தக நீர் மற்றும் அமில மண்ணால் பாதிப்பு ஏற்படாது.

IS தர நிர்ணயங்களின் படி தரமேன்மையுடன் தயாரிக்கப்பட்டது.

ARASU CEMENT
TIDCO

**தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பொரேஷன் லிமிடெட்**
ஆலங்குளம் தொழிற்சாலை,
இராமநாதபுரம் மாவட்டம்

TIDCO

*மேற்கண்ட சார்பு நிறுவனத்தின் முழு உரிமையாளர்கள்:*
**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்,**
150-A அண்ணாசாலை, சென்னை — 600 002.

## பெரியார் பேசுகிறார்!



# சிறு குடும்பமே சீரான வாழ்வு

ஒவ்வொருவருக்கும் ஒரு வீடு—சோறு—வேலை வாய்ப்பு ஆகியவை தேவை. இதற்கெல்லாம் பரிகாரம் பிறப்பை நிறுத்துவதுதான். பிறப்பை நிறுத்துவோமானால் பிறந்த பிள்ளைகளும் நன்றாக இருக்கும். நான்கு பிள்ளைகள், எட்டு பிள்ளைகள் என்றில்லாமல், இரண்டு பிள்ளை மூன்று பிள்ளை என்றிருந்தால் பிள்ளைகளை, தாயும் நன்றாக நடத்துவாள். படிக்க வைப்பதும் இலகு. சர்க்காருக்கும் அதிக தொல்லை இருக்காது. எதற்காக இந்த சர்க்கார் இவ்வளவு பாடுபடுகிறது?

அன்றைக்கெல்லாம் ஏன் பண்ணவில்லையென்றால், அப்போது கவலை இல்லை. உள்ளபடியே கொஞ்சம் எனக்குத்தான் தோன்றியது. ஒரு 30 ஆண்டுகளுக்கு முன்னே 'கர்ப்ப ஆட்சி' என்ற புத்தகம் போட்டேன். வெளிநாடுகளில் நடப்பதை அறிந்ததாலே அப்படி ஒரு புத்தகம் வெளியிட்டேன்.

### நான் எச்சரிக்கை செய்தது யாருக்கும் புரியவில்லை

அப்பொழுதுதான் இந்த கணக்குப் போட்டேன். எதிர்காலம் நமக்குப் பெரும் வேதனையானதாக இருக்கப் போகிறது—நாம் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று சொன்னேன். யாருக்கும் புரியவே இல்லை. 1945—50-லேதான் மக்கள் நமது பேச்சுக்குக் காது கொடுத்தார்கள். அதுவரை அரசாங்கமும் காது கொடுக்கவில்லை. அப்புறம் கொஞ்சங் கொஞ்சமாக இதன் அவசியத்தை உணர்ந்து, குழந்தைகளை அதிகமாகப் பெறுவதைக் குறைக்க வேண்டுமென இப்போதுதான் தீவிரமாகச் செயல்படுகிறார்கள்.

குறைக்காவிட்டால் நாம்தான் எதிர்காலத்தில் கஷ்டப்படுவோம், உலகத்திலும் பெரிய கஷ்டம் ஏற்படும். மனிதனும் ஒழுக்கமாய், நாணயமாய் வாழ முடியாது. நாட்டிலே ஒழுக்கம் மிஞ்சாது. எல்லாம் பாழாய்ப்போய் விடும். மனிதனால் என்ன செய்ய முடியும்? பிள்ளைகள் அதிகமானால் வறுமையின்றி வாழ முடியுமா? பிள்ளைகளுடைய எண்ணிக்கைக்குத் தகுந்தாற் போல் சம்பளம் தான் பெருகுமா? எல்லாம் கணக்காகத்தான் இருக்கும். இரண்டு பிள்ளைகளுக்குச் செலவு செய்பவனும் அதே வரும்படியிலே தான் இருப்பான். எட்டுப் பிள்ளைகளுக்குச் செய்பவனும் அதே வரும்படியிலே தான் இருப்பான்.

மக்கள் பெருக்கத்தினாலே மனித சமுதாயத்துக்கு ஏதாவது நன்மையுண்டா? மக்கள் பெருக்கத்தால் உலக சமுதாய முன்னேற்றத்திற்கான புதிய புதிய முயற்சிகள் ஏதாவது வளர்ந்ததா? பெருகிக் கொண்டே இருக்கிற மக்கள் தொகையால் வேதனையும், தொல்லையும்தான் வளர்ந்து கொண்டிருக்கிறது.

ஆகவே மனித சமுதாயம் கவலையற்றதாக இருக்க வேண்டுமானால்—மக்கள் எல்லாம் சுதந்தரமாக இருக்க வேண்டுமானால்—கூடுமான வரையில் ஒழுங்காக வாழ முயற்சிக்க வேண்டுமென்றால், குழந்தைகுட்டிகளால் உண்டாகும் கவலை இருக்கக் கூடாது. மனிதனுக்கு இந்தக் கவலை இல்லாது போனால் தவறு பண்ண வேண்டிய அவசியமே வராது. அதைப்பற்றி யாரும் சொல்லவில்லை; காரண காரியங்களை யாரும் எடுத்துச் சொல்வதில்லை. அவன் பண்ணுகிறான்—இவன் பண்ணுகிறான் — நாமும் அப்படித்தான் இருக்கவேண்டுமெனச் செய்து கொண்டிருக்கிறோம்.

பொது ஒழுக்கம், பொது வாழ்வு, பொது நலம் எல்லாம் பாழாகி விட்டது. அதிகமாய்க் கஷ்டப்பட்டுச் சொல்ல வேண்டியிருக்கிறது.

ஒவ்வொருவனும் அவனுடைய குடும்பத்துடன் நின்று விடுகிறான். பிள்ளை இல்லையென்றால் — கவலை இல்லையென்றால் அந்த மனிதன் ஏதாவது வேலை செய்துதானே தீர வேண்டும். புதுமையைக் கண்டு பிடிப்பான். மனித சமுதாய வளர்ச்சிக்கேற்ற காரியங்களைச் செய்வதில் அவன் பயன்படுவான். இப்பொழுது அவனவன் தன் குடும்பத்தைப் பார்த்துக்கொள்வது தவிர எவனும் எதற்கும் பயன்படுவதில்லையே! பிள்ளைகளைப் பெற்றுக் கொள்வதாலே அத்தனை பேரும் காசுக்கு உதவாத மனிதர்களாகி விட்டார்களே. பெண்கள் யாரும் சமுதாயத்துக்கு உபயோகமாயில்லையே ஏன்? குடும்பத்தை—புருஷனை—பிள்ளை குட்டிகளைப் பாதுகாக்கிற வேலையைத் தவிர வேறு எதிலும் ஈடுபடுவதில்லை. இதனால் எத்தனைக் கோடி பேர் வீணாகி விட்டார்கள்! பிள்ளை பெறுவதும், புருஷனுக்குக் கால் கை பிடித்து விடுவதும் தவிர நமது பெண்கள் சமுதாயப் பணிகளில் ஈடுபடுவதில்லை.

ஏன் நாம் முன்னேறவில்லை? உலகம் முன்னேறினாலும் நாம் ஏன் இன்னும் முட்டாள்களாகவே இருக்கின்றோம்? உலகத்தைத் தெரிந்து கொள்ள நமக்கு வாய்ப்புஇல்லையே. வாழ்க்கையில் வேறு ஒன்றும் இருக்கிறது என்பது புரியவில்லையே. எனவே மனித சமுதாயம் புதிய வாழ்வுக்குப் பயன்பட வேண்டுமானால் ஒரேவழிதான் இருக்கிறது. இதற்கெல்லாம் காரணமாய் இருப்பது—அதிகமாகப் பிள்ளைகளைப் பெற்றுக் கொள்வதுதான். அது ஒரு பெரிய முட்டாள்தனம், அறிவீனம்.

பொதுவாக நம்முடைய முன்னேற்றமே, நாம் பிள்ளை பெறுவதை எவ்வளவு குறைத்துக்கொள்கிறோமோ அதிலேதான் இருக்கிறது. அதை ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டும். திருமணத்திலேயும் அதைத்தான் எடுத்துச் சொல்ல வேண்டும். ஒவ்வொரு பெண்ணுக்கும் புரியும்படியாக எடுத்துச் சொல்ல வேண்டும்.

அதற்கு யாரும் முட்டுக்கட்டையாக இருக்கக்கூடாது. ஆதரவு அளிக்க வேண்டுமென்பதுதான் என் வேண்டுகோளாகும்.

தமிழரசு

மலர்: 9 இதழ்: 8

16-10-1978



# மறைந்து வரும் செல்வத்தை காப்போம்!

## முதல்வரின் வேண்டுகோள்

எவ்வுயிரிடத்தும் அன்பு செலுத்துவது தமிழகப் பண்பாடு. பயிர்வாடக் கண்டபோது தான் வாடிய உள்ளங்கொண்ட வள்ளலார் பிறந்தது தமிழகம். மனுநீதிச் சோழனும், முல்லைக்குத் தேர் ஈந்த பாரியும், மயிலுக்குப் போர்வை அளித்த பேகனும், இவ்வாறு உயிர்களிடத்தில் அன்பு செலுத்திய இலக்கிய வரலாற்றுப் பெருந்தகைகளின் பட்டியல், கொடுத்தால் விரியும்.

சங்ககாலப் புலவர்களிலிருந்து புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வரை இயற்கையை வியந்து பாடாத தமிழ்ப் புலவர்கள் இல்லை என்றே சொல்லி விடலாம். நிலவளம், நீர்வளம், தாவர வளம், ஜீவராசிகளின் வாழ்க்கைச் செழிப்பு இவை அனைத்தும் தனித்தனியானவை போல் தோன்றினாலும், இவை ஒன்றுக்கொன்று சமநிலையில் இருந்தால்தான், இயற்கையின் போக்கு செவ்வனே அமைய முடியும் என்பது ஆராய்ச்சி நிபுணர்கள் கண்டு தெளிந்து உலகுக்கு அறிவித்துள்ள உண்மை.

இயற்கை ஏற்படுத்திக் கொடுத்துள்ள இந்தச் சமன்பாட்டை ஏற்காத நாகரிகங்கள் அழிந்து போனதற்கு வரலாற்றில் சான்றுகள் நிறைய உண்டு. பாபிலோன், அஸ்ரியா போன்ற நாகரிகங்கள் ஒரு சில எடுத்துக்காட்டுகள்!

உலகத்தில் எத்தனையோ உயிர் இனங்கள் வாழ்ந்து பரிணாம வளர்ச்சி பெற்று இருக்கின்றன. காலப்போக்கில் சில உயிரினங்கள் அருகி வந்து, முடிவில் இல்லாது மறைந்துபோயும் இருக்கின்றன.

மடகாஸ்கர் தீவில் 'டோடோ' என்ற ஒரு பெரிய பறவை 15, 16 ஆம் நூற்றாண்டில் அபரிதமான எண்ணிக்கையில் இருந்தது. இந்த மடகாஸ்கர் மார்க்கமாகத் தான் வாஸ்கோடகாமா ஆப்பிரிக்கக் கண்டத்தைச் சுற்றி, தென்னிந்தியாவை வந்து அடைந்தார். அந்தப் பறவையினை உணவுக்காக கப்பல் பயணிகள் தொடர்ந்து வேட்டையாடி வந்ததால் கடந்த ஓரிரு நூற்றாண்டுகளில் அந்தப் பறவை இனமே இல்லாது போயிற்று.

உலகின் சகல இயக்கத்திற்கும் சூரியனே காரணம். சூரியனுடைய ஒளியின் உதவி கொண்டு தாவரங்கள் தங்களுக்கு வேண்டிய உணவை உற்பத்தி செய்து கொள்கின்றன. இந்தத் தாவரங்கள் பிராணிகளுக்கு உணவாகின்றன. ஏன், மனிதர்களுக்கும் உணவாகின்றன. பிராணிகள் ஒன்றை ஒன்று புசித்தும் உயிர் வாழ்கின்றன. ஆக இந்தச் சுற்று (Cycle) சரிவர நடைபெற்றுக்கொண்டு இருப்பது மனித வாழ்க்கையும் இயற்கை அமைப்பும் செம்மையாகச் செயல்பட அவசியமாகிறது. காடுகள் அழிந்தாலும், சில உயிரினங்கள் இல்லாது ஒழிந்தாலும் இந்தச் சுற்றில் தேக்கம் ஏற்பட்டுவிடக் கூடும்.



இறந்தவர்களை இயற்கை எய்தினார் என்று சொல்வது தமிழ் மரபு. அதாவது பொருள்களை ஆக்கவும் முடியாது; அழிக்கவும் முடியாது என்பது ஒரு விஞ்ஞானக் கோட்பாடு. ஆக உயிர்கள் இறக்கின்ற போதும், இயற்கையின் சமநிலை காப்பாற்றப்படுவதை 'இயற்கை எய்தினார்' என்கிற சொற்றொடர் அழகாக எடுத்துக் காட்டுகிறது.

மடகாஸ்கர் 'டோடோ'வுக்கு ஏற்பட்ட கதி, தமிழ்நாட்டில் வேங்கைக்கும், நதி முக முதலைக்கும் இன்று ஏற்பட்டு இருக்கிறது. புலி, சிறுத்தை, சிங்காளம் என்கிற சிங்க வால் குரங்கு வரையாடு போன்ற விலங்கினங்களும் மறையக்கூடிய அபாயம் ஏற்பட்டு இருக்கிறது. இந்த இனங்களைக் காப்பாற்றிடும் பெருமுயற்சியில் வனத் துறையினர் ஈடுபட்டிருக்கிறார்கள், பொது மக்களின் விழிப்பு உணர்ச்சியும் ஒத்துழைப்பும் இந்த முயற்சிக்கு மிகவும் இன்றியமையாதது.

''மனித நாகரிகத்தின் அடித்தளமாக அமைந்துள்ள இயற்கைச் சூழலைப் பேணிக் காக்கும் அடிப்படைத் தேவையை உணர்ந்து நமது தலைமுறையினர் வருங்காலச் சந்ததியினருக்காக விட்டுச் செல்லும் செல்வமாக மறைந்துவரும் நமது வனவிலங்குகளையும் குன்றிவரும் நமது காட்டுப் பகுதிகளையும் பாதுகாக்க எல்லா முயற்சிகளையும் மேற் கொள்ளுவேன்'' என்ற உறுதி மொழியை இந்த நன்னாளில் நாம் அனைவரும் ஏற்றுக் கொண்டு கடைப்பிடிக்க வேண்டுகிறேன்.

(வன விலங்கு வார விழாவை முன்னிட்டு முதல்வர் அவர்கள் விடுத்த வேண்டுகோள்)

# தாயன்போடு அணைத்துச் செல்லும் அரசு

“மூன்றுவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள்மீது அரசு அறிவித்துள்ள முடிவுகளை அலுவலர்களும், பொதுமக்களும் வரவேற்றுள்ள இந்த நேரத்தில் அவற்றில் உள்ள சிறப்பான சில அம்சங்களைப் பற்றி விளக்க விரும்புகிறேன்.

தமிழ்நாட்டிலேயே முதன் முறையாக ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் அமைக்கப்பட்ட மூன்றுவது ஊதியக் குழு 1,300க்கும் அதிகமான அலுவலர்கள் சங்கங்களுடன் கலந்து உரையாடியது. மாவட்ட ரீதியிலும், மாநில ரீதியிலும் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் அல்லது மற்றவை என்று பாகுபாடு இல்லாமல், அனைத்து அலுவலர் சங்கங்களின் கருத்துக்களையும் அது கேட்டறிந்தது.

குறைந்த அளவு ஊதியம் மாதம் ரூ.250 ஆகவும், அதிக அளவு ரூ. 2,500 ஆகவும் இருக்கும்.

இனிமேல் மத்திய அரசு அதன் அலுவலர்களுக்கு அகவிலைப்படி அளிக்கும் முறையைப் பின்பற்றி மாநில அரசு அலுவலர்களுக்கு அகவிலைப்படி அளிக்கப்பட வேண்டும் என்ற ஊதியக் குழுவின் பரிந்துரையை அரசு முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ளது.

விலைவாசி உயர்வுக் குறியீட்டு எண்ணின் 12 மாத சராசரி 8 புள்ளிகள் உயரும்போது மத்திய அரசு அலுவலர்களுக்கு ஊதியத்தின் குறிப்பிட்ட சதவீதமாக அகவிலைப்படி அளிக்கப்படுகிறது. மாநில அரசும் இனி இம்முறையைக் கையாளும்.

புதிய சம்பளம் நிர்ணயிக்கப்படும் போது அலுவலர்களுக்கு அவர்கள் மார்ச் 31ஆம் நாளன்று பெற்ற ஊதியத்தை விட குறைந்த அளவு ரூ. 15 ஆவது அதிக ஊதியம் கிட்ட வேண்டும் என ஊதியக் குழு பரிந்துரை செய்துள்ளது. அரசு இப்பரிந்துரையைப் பரிசீலித்தது. குறைந்த வருமானமுள்ள அலுவலர்களுக்குக் கிட்ட இருக்கும் நன்மையை அதிகமாக்கும் எண்ணத்துடன் குறைந்த அளவு பயனை ரூ. 15 லிருந்து ரூ. 20 ஆகவும் உயர்த்த முடிவு எடுத்துள்ளது. அதிக அளவு பயன் ஊதியக் குழு பரிந்துரைத்த வண்ணம் ரூ. 130 ஆக இருக்கும்.

ஏப்ரல் திங்கள் முதல் நாளில் இருந்து புதிய ஊதிய விகிதங்கள் செயலாக்கப்பட வேண்டும் என அரசு ஏற்கெனவே முடிவு எடுத்துள்ளது.

ஏப்ரல் திங்கள் முதல் நாளில் இருந்து அலுவலர்களுக்குச் சேர வேண்டிய பாக்கித் தொகை ரொக்கமாக விரைவில் அளிக்கப்படும்.

புதிய ஊதிய விகிதங்களைச் செயலாக்குவதனுல் அலுவலர்கள் ஆண்டு ஊதிய உயர்வு பெறும் நாட்களில் எவ்வித மாற்றமும் ஏற்படாது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, 1978ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாள் ஆண்டு உயர்வு பெறும் அலுவலர்கள் புதிய ஊதிய விகிதங்களில் ஆண்டு ஊதிய உயர்வு பெறுவர்.

அரசு ஏற்றுக் கொண்டுள்ள மற்றொரு முன்னேற்ற முறை புரட்சிகரமான பரிந்



மாண்புமிகு நிதியமைச்சர்

திரு. கி. மனேகரன்

துறை அலுவலர்களின் பதவி உயர்வு பற்றியதாகும். தற்போதுள்ள முறையின்கீழ் காலியிடங்கள் ஏற்படுவதைப் பொறுத்தே அலுவலர்கள் மேல் பதவிகளுக்கோ தேர்வு நிலைகளுக்கோ செல்ல முடிகிறது. அலுவலர்கள் பதவி உயர்வதற்கான வாய்ப்புகள் இலாகாக்களிடையே மிகவும் வேறுபடுகின்றன. இந்நிலையை மாற்றி அலுவலர்களுக்குச் சீரான முன்னேற்றம் அளிக்கும் வகையில் வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. நடுநிலை வரையுள்ள பதவிகளிலுள்ள அலுவலர்களில் பெரும்பாலோர் பத்து ஆண்டுகள் பணியாற்றிய பின் மேல் பதவிகளுக்கோ, தேர்வு நிலைகளுக்கோ செல்வதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன.

பள்ளி ஆசிரியர்களின் நிலையைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்குத் தேர்வு நிலைக்கு மேல் சிறப்பு நிலையென்றும் அமைக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற சீரான பதவி உயர்வு வாய்ப்புக்கள் இவ்வளவு பரவலான முறையில் இதுவரை வேறு எந்த அரசு அமைப்பிலும் செயலாக்கப்படவில்லை. இப் புதிய முறையைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடியாக இருக்கிறது என்பதைப் பெருமிதத்துடன் குறிப்பிட விரும்புகிறேன்.

கிராமப் புறங்களில் அரசுப் பணியை ஊக்குவிக்கும் பொருட்டு அங்கு அரசு வீடுகளில் வசிக்கும் அலுவலர்களுக்கு வாடகைப் பிடித்தம் ஊதியத்தில் 10 சதவீதத்திலிருந்து ஐந்து சதவீதமாகக் குறைக்கப்படுகின்றது.

வேலை வாய்ப்புகளைப் பெருக்க வேண்டிய அவசியம் மிகுந்துள்ள இந்த நேரத்தில் புதிய வேலை வாய்ப்புகள் உருவாவதைக் குறைக்கவல்ல ஓய்வு பெறும் வயதை உயர்த்தும் பரிந்துரையை அரசு ஏற்க இயலாமைக்கு வருந்துகிறது.

பென்ஷன் தொகை ஐந்து சதவீதம் உயர்த்தப்படும். அவ்வாறு உயர்த்தப்படும்போது கிடைக்கும் நன்மை குறைந்த அளவு பத்து ரூபாயாகவும், அதிக அளவு ரூபாய் 25 ஆகவும் இருக்கும். அகவிலைப்படி உட்பட மொத்த பென்ஷன் தொகை 100 ரூபாய்க்குக் குறையாமல் இருக்கும்.

சென்னை மாநகராட்சி உட்பட உள்ளாட்சி அலுவலர்களுக்கு அரசு அலுவலர்களுக்கு ஈடான ஊதிய அமைப்பும் குறிப்பாக அவர்களுக்குத் தேர்வு நிலைகளும் மேல் பதவிகளுக்குச் செல்வதற்கான அதிகரிக்கப்பட்டுள்ள வாய்ப்புகளும் அளிக்கப்பட வேண்டியதில்லை என ஊதியக் குழு பரிந்துரை செய்திருந்தது.

உள்ளாட்சித்துறை அலுவலர்களின் பணி நிலைமைகளைக் கருத்தில் கொண்டு அரசு இப்பரிந்துரையை ஏற்கவில்லை. அவர்களுக்கும் பொதுவாக அரசு அலுவலர்களை யொட்டிய ஊதிய அமைப்பும் மேல் பதவிகளுக்கும், தேர்வு நிலைகளுககும் உயர்வதற்கான வாய்ப்புகள் இருக்க வேண்டும் என்றும் அரசு முடிவு எடுத்து உள்ளது.

ஊதியக் குழுவின் பரிந்துரைகளும் அவற்றின்மீது அரசு எடுத்துள்ள முடிவுகளும் அரசு அலுவலர்கள் அனைவருக்கும் மிக்க பயன் அளிக்கும் வகையில் அமைந்து உள்ளன. இந்த முடிவுகளையொட்டி விளக்கமான ஆணைகள் விரைவில் வெளியிடப்பட்டு எல்லா அரசு அலுவலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட இருக்கிறது. உடனே நிர்ணயிப்பதற்கு ஏற்ற வகையில் இந்த ஆணைகள் விரிவாக இருக்கும். ஊதியக் குழுவின் அறிக்கை அச்சிடப்பட்டு வருகின்றது. அறிக்கை அச்சிட்ட பின் வெளியிடப்படும் அறிக்கையில் கண்டுள்ள பொருட்களின்மீது ஐயம் ஏதும் எழுமேயானால் அதுபற்றி அரசிடம் விளக்கம் பெறலாம். கதவுகள் திறந்தேயிருக்கின்றன.

ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் மேல், அரசு வெளியிட்டு இருக்கும் அறிவிப்பில் நியாய உணர்வையும், மேல் மட்டத்தில் இருந்து அடித்தளம் வரை பணிபுரியும் அரசு அலுவலர்களை எந்த அளவிற்குத் தாயன்போடு அணைத்துச் செல்கிறது என்ற நல்லுணர்வையும் காண முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

உழைப்புச் சக்திகளையும் சிந்தனை வளங்களையும் ஒன்றாக இணைத்துப் பயணம் மேற்கொள்ளும் தூய நோக்கைப் பாராட்டுபவர்கள் ஏராளமாக இருப்பதுபற்றி எனக்கு உற்சாகத்தைத் தருகின்றது.

தமிழகம் பொருளாதாரத் துறையில் தலை நிமிர்ந்து நிற்கவும், தொழில் துறையில் விரைவாக முன்னேறவும் பேரறிஞர் அண்ணா அவர்கள் கனவு கண்ட சமதர்ம மணம் கமழும் சமுதாயத்தை உருவாக்கத் தேவைப்படும் திட்டங்களை மேலும் தீட்டி வெற்றிபுரி நோக்கி விறு நடை போடவும், மக்கள் தமிழக முதல்வரின் மேல், அவரது தலைமையில் இயங்கும் ஆட்சியின்பால் வைத்திருக்கும் நம்பிக்கை செழுமை பெறவும் அரசு அலுவலர்கள் முன்னிலும் வேகமாக உற்சாகத்தோடு, தெம்போடு சிறப்பாகப் பணியாற்றி ஒத்துழைப்பார்கள் என்ற எனது எதிர்பார்ப்பிற்கு நான் ஆதாரங்களைத் தேடி அலைய வேண்டியது இல்லை.

கலந்துரையாடிக் காரியங்களைச் சாதிப்போம் என்ற இனிய இழை, அனைவரையும் இறுகப் பிணைக்கட்டும்.''

(மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த முடிவுகளை விளக்கி தொலைக்காட்சியில் 28-9-1978 அன்று ஆற்றிய உரை.)



# வனவிலங்குகளை வாழவைப்போம்!

'வனவிலங்கு வாரவிழா' இன்று முதல் ஒரு வாரத்திற்கு நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது.

ஒரு நாட்டிற்குப் புகழ் சேர்ப்பவை-நீர்வளம், நிலவளம், மலைவளம், வனவளம் ஆகிய நான்கும் சேர்ந்துதான். அதனால்தான் தமிழர்கள், நாட்டின் நில அமைப்பை நான்காகப் பிரித்தனர். பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் 'அகிலும், தேக்கும் அழியாக்குன்றம் அழகாய் முத்துக் குவியும் கடல்கள்....... முகிலும் செந்நெல்லும் முழங்கும் நன்செய் முல்லைக்காடு மணக்கும் நாடு' என்று பாடினார். எனவே, வனவளம் என்பது வெறும் மரம், செடி, கொடிகளால் மட்டும் அமைவதில்லை. அந்த வனத்தில் வாழும் விலங்குகள், பறவைகள் போன்ற உயிரினங்களும் சேர்ந்துதான் சிறப்புச் சேர்க்கின்றன.

வனவிலங்குகள் என்றாலே, அவைகள் கொடியவை என்றும் அவைகள் அழிக்கப்பட வேண்டியவை என்றும், அப்பொழுதுதான் மனித இனத்திற்குப் பாதுகாப்பு என்றும், தவறான எண்ணம் மனித சமுதாயத்தில் நிலவியது. அது தவறு. உலகில் மனிதன் எப்படி வாழும் உரிமை பெற்றிருக்கிறானோ, அதைப் போலவேதான் விலங்கினங்களும் வாழும் உரிமை பெற்றுள்ளன. மனிதனால் எப்படி நாடு புகழ் பெறுகிறதோ அதைப் போன்றே நாட்டிற்குச் செல்வம் தேடித்தரும் காட்டிற்கும், காட்டிலே வாழுகின்ற அற்புதமான விலங்கினங்களால், அருமையான பறவை இனங்களால் பெருமை சேர்கின்றன.

உலகத்தில் உயிர் வளர்ச்சியில் ஒன்று மற்றொன்றை மிஞ்சி வளரும்போது, அதனை அடக்கிச் சமநிலைப் படுத்துவதாய்இயற்கை அமைந்துள்ளது. பாம்புகள் இல்லையானால் எலிகள் பெருகிவிடுகின்றன. ஏராளமான பயிர்கள் எல்லாம் எலிகளால் பாழாகின்றன. கடும் புலிகள் குறைவதால் காட்டுப் பன்றிகள் பெருகுகின்றன. அவை பயிர்களைப் பாழ்படுத்துகின்றன. எலிகளைக் கட்டுப்படுத்த பாம்புகள்—காட்டுப் பன்றிகளை கட்டுப்படுத்த கடும்புலிகள்—மான் இனங்களை கட்டுப்படுத்தவும் புலியினங்கள்-இப்படி ஓரினம் மட்டுமே ஓங்கி வளர்ந்துவிடாமல், ஒரு கட்டுப்பாடு நிலவுகிறது. இது இயற்கை கண்ட இனக் கட்டுப்பாடு. ஆனால் இந்த இயற்கையின் அமைப்பிலே ஓர் அதிசயம். வனவிலங்குகள் ஒன்றை ஒன்று அழித்துத் தங்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொள்வதும் கூட மனித சமுதாயத்தின் நன்மைக்காகத்தான் என்பதைப் பார்க்கும்போது, மனிதன் இந்த வனவிலங்குகளுக்கு எவ்வளவு நன்றி காட்ட வேண்டும்! இதை விட்டுவிட்டு மனிதனும் விலங்குகளை அழிக்கத் தொடங்கினால் இயற்கை நமக்குத் தந்த செல்வத்தை நாமே அழித்த குற்றத்திற்கு ஆளாகிவிடுவோம்.

ஒரு காலத்தில் நாடுகள் எல்லாம் பொழில்களாக, சோலைகளாக மிளிர்ந்தவைதான். காலமழை பொய்த்ததாலும், கானல் மிகுந்ததாலும், மக்கள்தொகை பெருகியதாலும், வனங்கள் சுருங்கின. வளங்கள் குறைந்தன; பாலைகள்விரிந்தன. பாழ்நிலங்கள் பெருகின. வனம் இல்லையென்றால் மழையில்லை. மழை இல்லையென்றால் வளம் இல்லை. வளம் இல்லையென்றால் வனப்பு இல்லை. எனவேதான் வனவளத்தைக் காத்து, எல்லா உயிரினங்களையும் பேணிக்காக்கும் நோக்குடன் நன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்

**திரு ஆர். எம். வீரப்பன்**

சங்க காலப்புலவர்கள் பாராட்டிய 'அசுனம்' என்னும் விலங்கும்' 'அன்னம்' என்னும் பறவையும் இன்று இல்லை. கடந்த 300 ஆண்டுகளில் ஏறத்தாழ 300-க்கும் மேற்பட்ட விலங்கினங்கள் அழிந்துவிட்டதாகத் தெரிகிறது. தமிழ்நாட்டில் மட்டும் கடந்த ஐம்பது ஆண்டுகளில் 'சீட்டா' என்னும் சிவுங்கியும், கொள்ளிட ஆற்றில் கழிமுகத்தில் வாழ்ந்த உப்பு முதலையும் அனேகமாக அழிந்துவிட்டன. மற்றும் பல வகையான விலங்கினங்களும் எண்ணிக்கையில் குறைந்து கொண்டே வருகின்றன. சிங்கவால் குரங்கு போன்றவைகள் முழுவதும் மறையும் நிலையில் உள்ளன. நமது தமிழ்நாட்டின் காடுகளில் சிங்கவால் குரங்குகள் எண்ணிக்கையில் ஏறத்தாழ 400-ம் புலிகள் சுமார் 100-மே உள்ளன என்று மதிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் சுற்றித் திரிந்த 'வெளிமான்' இன்று கோடிக்கரை சரணாலயம், கிண்டி சரணாலயம் மற்றும் கோவை மாவட்டத்தில் சில இடங்களில் மட்டுமே காணப்படுகின்றன. வனவிலங்குகளின் எண்ணிக்கை குறைந்து வருவதற்கு அவைகள் கொல்லப்படுவது மட்டுமின்றி, அவைகள் வளரும் இயற்கைச் சூழ்நிலையில் உள்ள காடுகளை அழிப்பதால் அவ்வப்போது ஏற்படும் மாற்றமும் காரணமாகும்.

புலியையும் மீனையும் அரசுச் சின்னமாகக் கொடியில் பொறித்துப் போற்றிய நாடு இது. இன்று புலியினம் அழிந்து வருகிறது. மொரிசியஸ் தீவுக்கு வாஸ்கோடகாமா வந்தபோது, 'டோடோ' என்னும் அழகிய பறவையினத்தைக் கண்டு பரவசப்பட்டிருக்கிறார். அந்த இனம் இன்று சுவடே இல்லாமல் அழிந்துவிட்டது. 'டோடோ' பறவை மறைந்ததுபோல' என்று ஆங்கிலப் பேச்சு வழக்கில் ஒரு மரபுமொழியே வழங்கி வருகிறது. இதனால்தான், இன்னொரு தாஜ்மகாலை எழுப்பிவிடலாம். ஆனால் மறைந்துவிட்ட, ஒரு மான்

இனத்தை மனிதனால் உருவாகக முடியாது என்று விலங்கியல் நிபுணர் ஒருவர் கூறுகிறார். இது எவ்வளவு மறுக்க முடியாத உண்மை!

காடுகளை நாம் அழிக்க முற்படும்போது, அங்கே வாழும் விலங்குகளும், பறவைகளும் ஒதுங்க இடமின்றி, வாழ்விழந்து போகின்றன. அதைத் தடுத்தாக வேண்டும். ஒரு நாட்டின் மூன்றில் ஒரு பகுதி கானகமாக இருந்தால்தான் மழை வளம் சிறக்க வாய்ப்பிருக்கிறது. இன்று தமிழ் நாட்டின் நிலப்பரப்பில் 17 சதவீதம்தான் காடுகள் உள்ளன என்பது வேதனைக்குரியதாகும். இதனை விரிவு படுத்த வேண்டும். அதற்கு ஆக்கப்பூர்வமான திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.

ஒரு புறம் வனங்களை மனிதன் அழிக்கிறான். இதனால் மறுபுறம் மண் அரிப்பை இயற்கை நடத்துகிறது. நம் நாட்டின் தார் பாலைவனம் அரை மைல் அளவுக்கு முன்னோக்கி வருகிறது என்று ஆய்வாளர்கள் தரும் செய்தி ஓர் கவலைக்குரிய செய்தியாம்.

மண்வளத்தைக் காக்க விலங்குகளும், பறவைகளும் பெரிதும் உதவுகின்றன. வேடந்தாங்கல் பறவைகள் புகலிடப் பகுதியில் உள்ள நிலங்களுக்கு உரமிடத் தேவையில்லையாம். பறவைகளின் எச்சமே அந்த மண்ணுக்கு உரமாக அமைந்து விடுகிறது. அது மட்டுமல்ல. ''அகிலும், தேக்கும், அழியாக்குன்றம்' என்று புகழ்ந்து பாடினாரே புரட்சிக் கவிஞர். அந்தப் புகழ் தரும் சந்தன மரங்களைப் பெருக்குவதில்கூட நம்முடைய முயற்சி மிக மிகக் குறைவு. பறவைகள், சந்தன மரத்திலிருந்து விதைகளை வெவ்வேறு இடங்களில் போடுவதால்தான் சந்தன மரங்கள் வளர்ந்து நம்முடைய மாநிலத்திற்கு இன்று கோடிக்கணக்கான வருவாயும், மணம் தரும் சந்தனத்தால் புகழும் வருகிறது. இயற்கை தந்துள்ள இத்தகைய அரிய செல்வங்களைச் சுயநலத்திற்காக அழித்து விடுகிறோம்.

விலங்குகளும், பறவைகளும் மனிதனுக்குப் பயன்படும் பொருளாக மட்டுமல்ல; பாடல் தரும் வகையிலும் உதவுகின்றன. மான உணர்வுக்கு எடுத்துக் காட்டாக கவரிமானையும், ஊக்கமுடைமைக்கு எடுத்துக்காட்டாக தாக்கும் புலியையும் வள்ளுவர் சுட்டிக்காட்டுகிறார்.

அதுமட்டுமல்ல—ஆறறிவு படைத்த மனிதனிடத்திலிருந்து அரிய குணங்களை வலங்குகள் பெற்றதாக யாருமே குறிப்பிடுவதில்லை. நன்றி உயர்விற்கு நாயையும் கருணைக்குப் பசுவையும், ஒற்றுமைக்குக் காக்கைக் கூட்டத்தையும், உறுதியான பிடிக்குக் குரங்கையும், சுறுசுறுப்புக்கு தேனீக்களையும், சேமிப்பு உணர்வுக்கு சிற்றெறும்பு கூட்டத்தையும்தான் மனிதனுக்கு எடுத்துக் காட்டாக பாடம் புகட்டும் செயலாகக் காட்டுகிறோம்.

இவைகளையும் தாண்டி, மனிதன் நிதானம் தவறும்போது, நெறியை மீறும்போது, மிருகமாக மாறிவிட்டான் என்று, விலங்கினங்கள் மீது பழி போடுகிறோம். ஆனால் மனிதர்களிலே சிலர் செய்யும் ஆகாத செயல்களை, மிருகங்கள்கூடச் செய்யுமா என்பது சந்தேகம்.

முடமோசியார் என்ற சங்க காலப் புலவர் ஒருவர், தான் பரிசு பெற்றபோது ஆய் அண்டிரன் என்னும் அந்த வேந்தனைப் பார்த்து, ''மன்னவனே! உன் நாட்டுப் பெண் யானை ஒரு பேற்றுக் காலத்தில் 10 கன்றுகளைப் பெற்றெடுக்கும்போலத் தெரிகிறதே', என்று யானைகளின் பெருக்கத்தைக் கண்டு, வியந்து பாராட்டியிருக்கிறார். தமிழில் யானையைக் குறிக்க 40-க்கும் மேற்பட்ட சொற்கள் இருப்பதே யானைக் கூட்டம் எந்த அளவில் பரவியிருந்தது என்பதைக் காட்டும். அந்த இனம்கூட, இன்று எந்த அளவிலிருந்து குறைந்து கொண்டு வருகிறது என்பது தெரியும். நமது நாட்டு அரசர்கள் அமர்ந்த அரியணையே சிம்மாசனம் என்பதை அறிகிறபோது அந்த இனம் இல்லாதுபோன துயரத்தைத்தான் தருகிறது. வைரத்துண்டுகளை வண்ண ஒளித்துகள்களை விட்டெறிந்ததுபோல் நீர்நிலைகளில் நீந்தித்திரியும் மீன்களில்தான் எத்தனை வகைகள், எத்தனை வண்ணங்கள்! அவை மனிதனுக்கு உணவாகவும் சில நேரம் நோய் தீர்க்கும் மருந்தாகவும் உதவுகின்றன என்பதை உணரும் நாம், அவற்றின் வாழ்விலும் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். கொடிய நாகப்பாம்பையும், நல்ல பாம்பென அழைப்பது நமது பழக்கம். பாம்பின் நச்சுப்பொருள் குறிப்பிட்ட அளவில் மெல்ல மெல்ல உடலில் ஊட்டப்பட்டால் தீராத சில நோய்களையும் அது தீர்க்கிறது என அறிகிறோம். எந்த விலங்கும் நமக்கு இயல்பாகக் கேடு செய்வதில்லை. நாமாக அவற்றிற்குத் தொல்லைதரும் போதுதான் தற்காப்புககாக அவை நம்மைத் தாக்குகின்றன. ஆதலால் நம் வாழ்வில் நேரிடையாகவும் மறைமுகமாகவும் நமக்கு நன்மைகளைச் செய்யும் விலங்குகளையும் பறவைகளையும் நாம் பேணிக் காக்கும் நல்லுணர்ச்சியைப் பெற வேண்டும்.

இந்த ஆண்டு வனவிலங்குச் சிறப்பு வாரவிழா நடத்தும் சூழலில் இதற்கான உறுதியை நாம் மேற்கொள்ள வேண்டும். வனவிலங்குகளைக் காக்க வேண்டுமென அசோக மன்னன் அன்றே ஆணையிட்டதாகக் கல்வெட்டுக்கள் நமக்கு அறிவிக்கின்றன. தமிழக அரசும் வனவளத்திற்குக் காப்பாக உள்ள விலங்குகளையும் பறவைகளையும் காக்க வேண்டும் என்பதை வேண்டுகோளாக இன்று அன்போடு விடுக்கிறது.

நம் மாநிலத்தில் தற்போது ஒன்பது வனவிலங்குப் புகலிடங்களும், பதினாறு பறவைகள் காப்பிடங்களும் உள்ளன.

முதுமலையில் வனவிலங்குப் புகலிடத்தையும், வேடந்தாங்கலில் பறவைகள் காப்பகத்தையும் சிறப்பாகக் குறிப்பிடும் வகையில் அமைந்துள்ளதோடு ஆனைமலை, கோடிக்கரை, முண்டந்துறை, களக்காடு முதலிய மலைவளம், காட்டுவளம் மிக்க பகுதிகளைச் சுற்றுலாப் பயணிகள் கண்டு களிக்கத்தக்க வனவிலங்கினங்கள் மகிழ்விடங்களாகவும் நாம் மாற்றியுள்ளோம். நம் நாட்டில் ஒரே நேரத்தில் நானூறு புள்ளிமான்களையும் எழுபது முதல் எண்பது காட்டெருமைகளையும் ஏறத்தாழ ஐம்பது யானைகளையும் ஒருசேரக் கண்டு களிக்கும் வாய்ப்புள்ள இடம் நீலகிரி மாவட்டத்திலுள்ள முதுமலையாகும். உலகத்துப் பறவையினங்கள் யாவும் ஒரு சில காலம் தங்கி உல்லாச விழா நடத்தும் ஒரே இடம், தமிழ்நாட்டிலுள்ள வேடந்தாங்கலாக விளங்குகிறது.

இயற்கைச் சூழலின் பின்னணிலேயே மனித நாகரிகம் மலர்ந்து வருகிறது. எனவே இயற்கையைக் காக்க வேண்டிய கடமையினை உணர்ந்து, 'மறைந்துவரும் விலங்குகள், பறவைகளைப் பேணிக்காக்கவும் குறைந்துவரும் வனவளத்தைப் பெருக்கவும் பெருமுயற்சியை நாம் மேற்கொள்ளுவோம்' என்ற சூளுரையை இந்நாளில் நாம் அனைவரும் ஏற்போமாக!

(வனவிலங்கு வார விழாவையொட்டி 1-10-78 அன்று சென்னை வானொலியில் ஆற்றிய உரையிலிருந்து)

# யாழும் குழலும்

குடும்பநலம் என்பது ஒரு நாட்டின் ஒட்டு மொத்த நலனாகும். எனவே, நாட்டின் நல்லரசு குடும்பநலத்தைப் பாதுகாக்க பல்வேறு விதமான வழிமுறைகளைக் கடைப்பிடிக்கும். குடும்ப நலம் என்பது,

அ. நல்ல வீடு.

ஆ. சுகாதார வழிமுறைகள் (நோயற்ற வாழ்வு)

இ. சத்துக் குறையா உணவு

ஈ. வறுமையில்லா வாழ்வு

உ. உழைப்பதற்கு வாய்ப்பு

ஊ. நல்ல கல்வி

எ. ஏற்றத்தாழ்வு இல்லாநிலை

இவைகள் தங்குதடையின்றி அனைவருக்கும் கிடைக்க வேண்டுமானால், நாட்டின் நிலையறிந்து மக்கள் வாழத் தலைப்பட வேண்டும்.

எங்கும் எதிலும் திட்டம் என்பது இன்றியமையாதது ஆகும். திட்டமிட்டுச் செய்வதிலே தான் வெற்றியின் இரகசியம் அடங்கியுள்ளது. உதாரணமாக இந்நாட்டுப் படைகள் மோதும் போது படைகளின் எண்ணிக்கையில் வெற்றி தோல்வி இல்லை. திட்டமிட்டு வரையறைகளோடு இருக்கும் படை சிறியதாக இருந்தாலும், (பெரும் படை திட்டமில்லாது, வரையறையின்றிருக்குமானால்) நிச்சயம் வெல்லும்.

அதுபோலவே, ஒரு குடும்பமாக இருந்தாலும் அது திட்டமிடப்பட்ட நிலையில் அமையுமானால், அங்கேதான் தெவிட்டாத இன்பப் புனல் பெருகும்.

எனவே, அத்தகைய இன்பம் குடும்பங்களில் பெருகினால்தான் நாடு வளமுடன் உலகத்தின்கண் சிறப்பான இடத்தைப் பெற முடியும்.

'அத்தகைய நாடு நமது நாடு! இதற்கிணை உலகில் வேறில்லை ஈடு'!

என்று மாற்றார் பாராட்டத் தான் இன்றைய நமது நாட்டில் இன்றியமையாத குடும்பநலத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

குடும்பநலத் திட்டத்தின் ஆரம்பநாள்தான் அக்டோபர் 15.

இந்தியப் பேரரசு வழக்கமாக இவ்விழா எடுக்கப்பட வேண்டிய நாளாக செப்டம்பர் 15-ஐ அறிவித்தது.

செப்டம்பர் மாதத்தில்தான் தமிழகத்தில் தன்மான உணர்வூட்டி, ஜாதிமத பேதங்களைக் களைய தள்ளாத வயதுவரை, தளராது உழைத்த வெண்தாடி வேந்தர் தந்தை பெரியாரின் பிறந்த நாள் என செப்டம்பர் 17 இடம் பெறுகிறது. அரசியலில் மறுமலர்ச்சி கண்டு தமிழ் மொழியை ஆட்சிமொழியாக்கி, சமதர்மச் சமுதாயம் காண உழைத்த பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் செப்டம்பர் 15 ஆகும்.

முத்தமிழின் இனிமையைத் தன் பணியால் தாரணிக்கு எடுத்துரைத்து, உழைப்போரின் உள்ளக்கோவில் உறையும் தமிழ்த் தென்றல் திரு. வி. க. பிறந்தது இந்த செப்டம்பரில்தான்.

அதிலும் பெரியாருக்கு இந்த ஆண்டு நூற்றாண்டு காணும் ஆண்டு.

இந்த ஆண்டு நமது நாட்டில் ஏற்பட்ட வெள்ளச் சேதங்கள் காரணமாக மைய அரசு தள்ளி வைத்தது, குடும்பநலத்திட்ட இருவார விழாவை. அப்படித் தள்ளி வைக்கப்பட்ட விழாவின் துவக்கம்தான் அக்டோபர் 15.



மாண்புமிகு
மக்கள் நல்வாழ்வுத்துறை
அமைச்சர்
**திரு. ஆர். சௌந்தரராசன்**

குடும்பநல இருவார விழா எடுக்கும்போது குவலயத்தின் மக்கள் தொகைப் பெருக்கம் எப்படியுள்ளது? இந்தியாவின் நிலை என்ன என்பது பற்றி எண்ணிப் பார்ப்பது பொருத்தமுடையதாகும். அண்மையிலே உலக வங்கி, 'உலக வளர்ச்சி அறிக்கை 1978' (World Development Report 1978) ஒன்றினை வெளியிட்டிருக்கிறது. அந்த அறிக்கையின்படி அடுத்த 200 ஆண்டுகளில் உலக மக்கள் தொகையின் அளவு 10,000 மில்லியனாக உயரக் கூடும் எனத் தெரிவித்துள்ளது. நான்கு பில்லியனாக உள்ள மக்கள் தொகை 250 விழுக்காடு உயரக் கூடும்.

உலக மக்கள் தொகைப் பெருக்கம் குறித்துக் கூறும் அந்த அறிக்கை, 'குறைந்த வருமானமுடைய ஆசியா', (Low income Asia) என்ற தலைப்பில் இந்தியாவின் மக்கள் தொகைப் பெருக்கம் குறித்துக் கூறுகிறது. இந்தியா, இந்தோனேசியா, பர்மா, பாகிஸ்தான், பாங்களா தேசம், வியட்நாம் ஆகிய நாடுகள் குறித்து இப்பகுதியில் பேசப்படுகிறது. மக்கள்தொகையால் உலகத்திலேயே முதலிடம் பெற்றுள்ள சீனாவை, அடுத்த நூற்றாண்டில் மிஞ்சிவிடக் கூடிய நிலையை இந்தியா பெற்று, மக்கள் தொகையால் உலகத்திலேயே மிகப் பெரிய நாடு இந்தியா என்ற நிலையைக்கூடப் பெறலாம். கி. பி. 2,000-ல் இந்தியாவின் மக்கள் தொகை 958 மில்லியன்களாக இருக்கலாம் என மதிப்பிட்டு அறிவித்துள்ளது, அந்த அறிக்கை!

இன்றைய நிலையில் மக்கள் தொகையால் சீனாவிற்கு அடுத்த இடத்தை இந்தியா பெற்றுள்ளது. 1976-ஆம் ஆண்டு மதிப்பீட்டின்படி இந்தியாவின் மக்கள்தொகை 607 மில்லியன்களையும் தாண்டிச் சென்று கொண்டிருக்கிறது. உலக மக்கள் தொகையில் 15 விழுக்காடு அளவு மக்கள் இந்தியாவில் இருக்கிறார்கள். வளர்ந்து வரும் நாடுகள் என எடுத்துக் கொண்டால் உலக அளவில், 21 விழுக்காடு அளவு மக்கள் இந்தியாவில் இருக்கிறார்கள். ஐக்கிய நாடுகள் மன்றத்தில் உறுப்பு நாடுகளாக உள்ள பல நாடுகளின் மக்கள் தொகையைவிட அதிகமான மக்கள் தொகையை இந்திய மாநிலங்கள் சில பெற்றுள்ளன என்பது குறிப்பிடத் தகுந்த உண்மையாகும். 1951-க்கும் 1976-க்கும் இடைப்பட்ட 25 ஆண்டுகளில் இந்தியாவின் மக்கள் தொகை 361 மில்லியனிலிருந்து 607 மில்லியனாகப் பெருகியுள்ளது. பெருகிய மக்கள் தொகையின் அளவு 246 மில்லியன் (68 விழுக்காடு அதிகமாகியுள்ளது).

மாநிலங்களில் உள்ள மக்கள் தொகை நெருக்கத்தை எண்ணிப் பார்க்கவே அச்சமாக உள்ளது. ஒரு சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் கர்நாடக மாநிலத்தில் 549 பேர்களும், மேற்கு வங்கத்தில் 504 பேர்களும், பீகாரில் 324 பேர்களும், தமிழ்நாட்டில் 317 பேர்களும், உத்திரப் பிரதேசத்தில் 300 பேர்களும் வாழ்கிறார்கள். யூனியன் பிரதேசங்களாக உள்ள தில்லியில் 2738 பேர்களும், சண்டிகாரில் 2257 பேர்களும், லட்சத் தீவில் 994 பேர்களும், பாண்டிச்சேரியில் 983 பேர்களும் வாழ்கிறார்கள்.

வீடு கட்டும்போதுகூட நல்வாழ்வு பேணுவதற்காக இந்தந்த அளவு இடைவெளிவிட வேண்டும் என்பன போன்ற அறிவுரைகளையெல்லாம் வழங்குகிறார்கள். ஆனால், மக்கள் தொகை நெருக்கம் அதிகமாகிக் கொண்டே போகிறது. பிறப்பு விகிதம் குறைக்கப்படாத வரை இந்த வளர்ச்சி இருக்கத்தான் செய்யும்.

நாட்டிலே ஏற்பட்டு வருகின்ற மிதமிஞ்சிய பிறப்புக்கள் மட்டுமே மக்கள் தொகைப் பெருக்கத்திற்குக் காரணம் என்று கூறிவிட முடியாது. மக்களது உடல் நலம் பேணி, உயிர் நலம் காப்பதற்குரிய மருத்துவக் கலையின் மகத்தான வளர்ச்சியும் அதற்கான காரணங்களிலே ஒன்றாகும்' அதனால் இறப்பு விகிதம் வெகுவாகக் குறைந்துள்ளது.

தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டில், ஏழை எளிய மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் தமிழக முதல்வர் மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்கள், நாட்டுப்புற மக்களுக்கு நவீன மருத்துவ வசதிகள் கிட்ட வேண்டுமென்று கருதி, அதற்கான ஏற்பாடுகளையெல்லாம் செய்து வருகிறார். புரட்சித் தலைவர் அவர்கள் காட்டும் அக்கறையால் மருத்துவ, நல்வாழ்வு குடும்ப நலத்துறைகளில் ஒரு மறுமலர்ச்சியே ஏற்பட்டிருக்கிறது. புத்துணர்வு பிறந்திருக்கிறது.

தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியுள்ள 'நடமாடும் மருத்துவக் குழுக்கள்' கிராமப்புற மக்களுக்குக் கிராமங்களிலேயே மருத்துவ வசதிகள் கிடைக்க உதவுகிறது. குடும்ப நலத் திட்டத்திற்கும், தாய்-சேய் நலத் திட்டத்திற்கும் தக்க ஊக்குவிப்புப் பணிகள் கிட்டுகின்றன.

குடும்ப நலத் திட்டம் ஓங்க வேண்டும், மக்களிடையே வெற்றி பெற வேண்டும்— வேரூன்ற வேண்டும் என்பதிலே உள்ள அக்கறை காரணமாக தமிழக முதல்வரும், அவரது அமைச்சரவையிலுள்ள அனைவரும் வாய்ப்புக் கிட்டும்போதெல்லாம் சிறு குடும்ப நெறியின் அவசியத்தை வலியுறுத்துகின்றனர். திருமண நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும்போது, சீரான வாழ்வுக்குச் சிறு குடும்பமே உதவும் என்பன போன்ற அறிவுரைகள் எல்லாம் மண மக்களுக்கு என்று சொல்லி, மக்களிடையே பரப்பப்படுகிறது.

திருமணத்தம்பதிகளை வாழ்த்திப் பேசிய நேரத்தில், 'திருமணமானவுடன் குழந்தை பெற வேண்டும். எனக் கருதாதீர்கள்; இரண்டு, மூன்று ஆண்டுகள் கழித்து, புது மனைவியோடு உல்லாசமாக வாழ்ந்த பின் குழந்தை பெறுவது குறித்துக் கருதுங்கள்' என்பன போன்ற கருத்துரைகளை நமது புரட்சித் தலைவர் அவர்களே வழங்கி வருகிறார்கள்.

தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில் குடும்ப நலத் திட்டத்தில் தனியொரு இடத்தை வகித்து வருகிறது. தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழா தமிழக அரசால் தக்க முறையில் எடுக்கப்பட்டுள்ளது.

நூற்றாண்டு விழாவுக்குரிய தந்தை பெரியார் அவர்கள் இந்த நாட்டில் 50, 60 ஆண்டுகளுக்கு முன்பே குடும்ப நலத் திட்டத்தின் அவசியத்தை வலியுறுத்தித் தமிழகமெங்கும் பிரச்சாரம் செய்துள்ளார்கள். தான் நடத்திய குடியரசு, பகுத்தறிவு, விடுதலை போன்ற பத்திரிகைகளில் தலையங்கங்கள், கட்டுரைகள் வாயிலாக விளக்கியிருக்கிறார்கள். 'டியூப் பேபி' பற்றிய விவரத்தை 40 ஆண்டுகளுக்கு முன்பே சொல்லியிருக்கிறார்கள்.

1924-ஆம் ஆண்டு 'கர்ப்பஆட்சி' என்ற புத்தகத்தை வெளியிட்டுள்ளார்கள். இத்திட்ட வெற்றிக்காக அவர் ஆற்றியுள்ள பணி அளப்பரியதாகும். அவரையொட்டி பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களும் நல்ல நல்ல கருத்துக்களை இத்திட்டத்திற்கு ஆதரவாகத் தந்துள்ளார்கள். இவர்களது அரும்பணியால் தமிழகம் பண்படுத்தப்பட்ட நிலமாக மாற்றப்பட்டுள்ளது. சமுதாயச் சம்பிரதாயங்களையெல்லாம் கடந்து இத்திட்டம் வெற்றி நடை போட்டு வருகிறது.

குடும்ப நலத் திட்டம் எந்த விதக் கட்டாயமும், அச்சுறுத்தலும் இல்லாமல் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக விளம்பரப் பணிகளாலும், மற்ற மற்ற குடும்ப நலக் கல்வி பரப்புப் பணிகளாலும் தான் இத்திட்டம் மக்களிடையே பரப்பப்பட்டு வருகிறது. இதற்கென மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் உள்ள விளம்பரப் பிரிவு, களப் பணியாளர்களின் துணையோடு தக்க முறையில் திட்டம் குறித்த கருத்துக்களையெல்லாம் பரப்பி வருகிறது. சுற்றுப்புறச் சுகாதாரம் காக்க வேண்டியதன் அவசியம் முதல், சத்துணவு, தாய்-சேய் நலம் காக்கும் வழிமுறைகள் குடும்ப நலத்திட்ட முறைகள், அதற்காக அரசு செய்து தந்துள்ள இலவச வசதிகள் இவை பற்றியெல்லாம் அன்றாடம் எடுத்தியம்புகிறது. சிறு குடும்ப நெறியின் உண்மைகளையெல்லாம் அறிந்து, மக்கள் தாங்களாகவே முன்வந்து விருப்பத்துடன் திட்டத்தை ஏற்று வருகிறார்கள். அதற்கான பணி தொடர்ந்து நடைபெற்றாக வேண்டும்.

**எந்த வேறுபாடும் இன்றி, அனைவரது ஒத்துழைப்பையும் இத்திட்டம் மேலோங்க வேண்டுமென்பதற்காகப் பெற்றுப் பயன்படுத்தி வருகிறது. இந்தியாவிலும் சரி, தமிழகத்திலும் சரி முதன் முதலாக எதிர் கட்சியிலுள்ளவர்களையெல்லாம் ஒரே மேடையில் வைத்து குடும்ப நலப் பிரச்சாரம் செய்த ஒரே அரசு, புரட்சித் தலைவர் அவர்களை முதல்வராகக் கொண்ட தமிழக அரசுதான் என்பதிலே பெருமைப்படலாம்.**

அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்கள், அவற்றின் கீழே உள்ள கிளை நிலையங்கள் முதல் தாலுகா, மாவட்ட மருத்துவ மனைகள், மருத்துவக் கல்லூரிகளைச் சார்ந்த மருத்துவமனைகள் ஈறாக அனைத்து மட்டத்திலும் இத்திட்டம் குறித்து மக்களுக்கு ஆலோசனைகளும், மருத்துவ வசதிகளும் பிறவும் இலவசமாக அளிக்கப்பட்டு வருகின்றன. ஒன்றியத்திற்கு ஒன்று என, தமிழ்நாட்டில் உள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களிலும் கிராமப்புறக் குடும்ப நல நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவை அனைத்திலும் ஆண்களுக்குரிய குடும்ப நல நிரந்தர சிகிச்சை செய்யவும், தாய்மார்களுக்குக் கருத்தடை வளையம் பொருத்தவும் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. நகர்ப்புறங்களில் 207 நகர்ப்புறக் குடும்ப நல நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 16 தன்னியக்க நிறுவனங்களின் கீழும், 57 உள்ளாட்சித் துறையினரின் கீழும், 137 அரசு மருத்துவமனைகளிலும் இயங்கி வருகின்றன. அரசு மருத்துவ மனைகளிலும், தன்னியக்க நிறுவனங்களிலும் இயங்கும் நிலையங்களிலும் உள்ளாட்சித் துறையின் கீழுள்ள



திரு. மொரார்ஜி தேசாய்
பிரதம அமைச்சர்

# மக்கள் நல்வாழ்வுக்கு...

'குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு' 'குடும்ப நலத் திட்டம்', என்ற புதிய பெயர் கொடுக்கப்பட்டிருப்பதனால் சில பகுதியினருக்குத் தோன்றியுள்ள தவறான எண்ணங்களை முதலில் தெளிவுபடுத்த நான் விரும்புகிறேன். இந்த விடயத்தில் தவறான எண்ணங்கள் ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. உண்மையில் "குடும்ப நலத் திட்டம்" என்ற பெயர் மிகவும் பொருத்தமானதாகவும் அர்த்தமுள்ளதாகவும் இருக்கிறது என்பது எனது கருத்து. குடும்பக் கட்டுப்பாடு ஒரு அம்சத்தைத்தான் தொடுகிறது. நாட்டு மக்களின் உடல் நலம் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டையே நம்பி இருக்கவில்லை. உண்மையில் மக்கள் தொகைக் கட்டுப்பாடு மிகவும் அவசியம். ஆனால் மக்கள் தொகைக் கட்டுப்பாடு மட்டும் மக்கள் உடல் நலத்துடன் இருப்பதற்கு வழி வகுக்கப் போவதில்லை. இந்த நாட்டு மக்களின் மகிழ்ச்சிக்கான ஒரு வழிதான் உடல் நலம். உடல் நலம் குன்றியிருந்தால் எந்த ஒரு மனிதனும் மகிழ்ச்சியாக இருக்க முடியாது. ஆகவே மக்கள் உடல் நலத்துடன் இருக்கும்படி செய்வது மிகவும் அவசியம். சம்பந்தப்பட்ட ஒருவரது ஒத்துழைப்பின்றி அவரை உடல் நலத்துடன் வாழ வைப்பது என்பது ஒருவருக்கு முடியாத காரியம். ஆகவே இந்த விடயத்தைப் பற்றி மக்களுக்கு அறிவித்து, உடல் நலத்துடன் வாழ்வது எப்படி என்பதை அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டியது மிகவும் அவசியம்.

நாம் ஏழைகளாக இருப்பதாலும், உற்பத்திக்கான வழி ஒவ்வொருவருக்கும் கிடைக்காததாலும், மக்கள் தொகை நமது நாட்டில் மிகக் கடுமையானப் பிரச்சினையாகியுள்ளது. உற்பத்திக்கான வழி ஒவ்வொருவருக்கும் கிடைத்திருக்குமானால் மக்கள் தொகை ஒரு பிரச்சினையாகவே இருந்திருக்காது. உண்மையில் போதுமான வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டால், ஒவ்வொரு மனிதனும் தனது தேவைக்கு அதிகமாகவே உற்பத்தி செய்கிறான். மேலும் ஒவ்வொருவரும் வேலை வாய்ப்புப் பெற்று மகிழ்ச்சியாக இருக்கும்போது, மனநிலையின் காரணமாக, மக்கள் தொகைக் கட்டுப்பாடு தானாகவே வந்துவிடுகிறது. மக்கள் தொகை கடந்த காலத்தில் பெருகியுள்ள விகிதத்தில் பெருகிக் கொண்டே போனால் வேலை வாய்ப்பு அளிப்பதற்கும், உற்பத்திக்குரிய வழிமுறைகளுக்குமான நமது திட்டங்கள் அனைத்தும் வீணாகிவிடும். ஆகவே நாம் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த வேண்டியது மிகவும் அவசியம். அதனால்தான் மக்கள் தொகைக் கட்டுப்பாடு பெரியதொரு திட்டமாக வளர்ந்துள்ளது.

10 நிலையங்களிலும் குடும்ப நல நிரந்தர சிகிச்சைக்குரிய வசதிகளோடுகூட எல்லா வசதிகளும் உண்டு. மற்றவற்றில் கருத்தடை வளையம் பொருத்தவும், மற்ற கருத்தடை சாதனங்கள் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பேறுகாலத்திற்குப் பின் குடும்ப நலம் பேணும் திட்டம் (Post-Partum Programme) இப்போது தமிழகத்திலுள்ள 24 மருத்துவ மனைகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவற்றில் 9 மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளிலும், 13 மாவட்ட மருத்துவ மனைகளிலும் 2 தன்னியக்க நிறுவனங்களின் கீழும் உள்ளன. கருச்சிதைவுக்கும் இத்திட்டத்தின் கீழ் வழி செய்யப்பட்டுள்ளது. கருச்சிதைவு செய்து கொள்வது சட்டப்படி குற்றமல்ல. மருத்துவ மனைகளில் இதற்கெனப் பயிற்சி பெற்ற மருத்துவர்கள் இருந்து, வரும் தாய்மார்களின் விருப்பத்தை ஏற்று, அவர்கள் பற்றிய தகவல்களை இரகசியமாகப் பாதுகாத்துக் கருச்சிதைவு இலவசமாகச் செய்கிறார்கள். கருச்சிதைவு செய்வதற்குத் தகுதியுடையவை என 96 நிலையங்களுக்கு அரசு சான்றிதழ் நல்கியுள்ளது. இவற்றில் 77 அரசின் கீழும், 19 தன்னியக்க நிறுவனங்களின் கீழும் இருந்து செயல்பட்டு வருகின்றன. கூச்சமும் அச்சமும் இல்லாமல் தாய்மார்கள் கருச்சிதைவு செய்து கொள்ள இந் நிலையங்களுக்கே செல்ல வேண்டும்.

தாய் சேய் நலம் காப்பதைக் குடும்ப நலத் திட்டம் தலையாயக் கூறாகக் கொண்டுள்ளது. அதனாலேதான் தந்தை பெரியார் அவர்கள் பிறந்த இந்த செப்டம்பர் முதல், உலகப் பெரியார் காந்தியார் அவர்கள் பிறந்த அடுத்து அக்டோபர் வரை அனைத்து மருத்துவ மனைகளிலும் குழந்தைகள் நலவிழா எடுக்க வேண்டும் என்றும், குழந்தைகள் நலம் பேண ஆவன செய்ய வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது.

குடும்பநலத் திட்டம் சிறக்கத் தமிழக அரசு இந்திய அரசின் உதவியோடு எல்லா வாய்ப்பு வசதிகளையும் செய்து தந்துள்ளது. கிராம மக்கள் முதல் நகரங்கள் ஈறாகக் களப் பணியாளர்களும் பிறரும் மக்களை அன்றாடம் சந்திக்கிறார்கள். மக்கள் வாழ்வு மலர குடும்ப நலத் திட்டம் பெரிதும் உதவும். இன்றைய நிலையிலே கூடத் தமிழகம் குடும்ப நலத் திட்ட நிறைவேற்றத்தில் இந்தியாவிலேயே மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

குழந்தைச் செல்வத்தின் அருமையை விளக்கப் புகுந்த திருவள்ளுவர்கூட 'குழல் இனிது, யாழ் இனிது' எனக் கூறினார். யாழ்-பெண்-குழல்-ஆண் (சரஸ்வதி-கண்ணன்) என்று ஒருமையிலே சொன்னார். பன்மையைப் பயன்படுத்தவில்லை. அறம், பொருள், வீடு என்ற மூன்றினைப் பாடிய வள்ளுவன் ஈற்றடிகளையே கையாண்டதுகூட, இரண்டு குழந்தை போதும் என்பதன் அறிகுறியாகக்கூடக் கூறலாம். குடும்பங்கள் அளவாக அமைய வேண்டும் என்ற அக்கறை காரணமாகத்தான் அப்படிச் சொன்னார் போலும். அமிர்தம்கூட அளவுக்கு மிஞ்சினால் விஷமாகும் எனக் கூறியுள்ளார்கள்.

எனவே, குடும்ப நலத் திட்டத்திற்காக அரசு செய்து தந்துள்ள வாய்ப்பு வசதிகளையெல்லாம் பயன்படுத்திக் கொண்டு தக்க இடைவெளிக்குப் பின், அளவாகப் பெற்று வளமாக வாழ்ந்து அரசுக்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும்!

# பெரியார் நூற்றாண்டு விழா :
# தமிழக அரசின் புதிய திட்டங்கள்

தந்தை பெரியாரின் நூற்றாண்டு விழா நினைவாக மாண்புமிகு முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தமிழக அரசு நிறைவேற்ற இருக்கும் 10 அம்சத் திட்டத்தை வெளியிட்டார்.

ஈரோட்டில் இரண்டு நாட்களாக நடைபெற்ற தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவின் இறுதியில் முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் பேசினார். பெரியார் நூற்றாண்டு விழாக் குழுவினர், பெரியார் நூற்றாண்டு விழாவினையொட்டிப் பல திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று சிபாரிசு செய்திருந்தார்கள்.

*முதல்வர் அவர்கள் அறிவித்த 10 அம்சத் திட் விவரம் வருமாறு :*

1) கோவை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து ஈரோட்டைத் தலைநகரமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் அமைக்கப்படும். இந்தப் புதிய மாவட்டத்திற்குப் ''பெரியார் மாவட்டம்'' என்று பெயர் சூட்டப்படும்.

2) கோவையில் புதிதாக ஒரு பல்கலைக் கழகம் அமைக்கப்படும். அந்தப் பல்கலைக் கழகத்திற்குப் 'பெரியார் பல்கலைக்கழகம்' என்று பெயரிடப்படும்.

3) வீதிகள் அல்லது முக்கிய சாலைகளின் பெயரோடு சாதிப் பெயர்களை நீக்கிவிட தமிழக அரசு முயற்சி எடுக்கும்.



4) தமிழ் எழுத்துக்களில் பெரியார் செய்த சீர்திருத்தத்தை ஏற்று, அதை அமல் நடத்த அரசு உத்தரவிடும்.

5) ஈரோட்டில் கோர்ட்டு வீதிக்குப் 'பெரியார் வீதி' என்று பெயரிடப்படும். இதற்கான நடவடிக்கையைத் தமிழக அரசு எடுக்கும். இந்த வீதியில்தான் பெரியார்—அண்ணா நினைவகம் இருக்கின்றது.

6) பெரியாரின் சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பிட வகைசெய்வதற்காகப் பல கோடி ரூபாய்ச் செலவில் 'அறிவியல் அரும் பொருட்காட்சி நிலையம்' ஏற்படுத்தப்படும். உலக வங்கி, மத்திய அரசு ஆகியவைகளிடமிருந்து இதற்கான நிதி உதவி பெறப்படும்.

7) கலப்பு மணம் செய்துகொண்டவர்களின் குழந்தைகளுக்கும், விதவைகளை மறுமணம் செய்து கொண்டவர்களின் குழந்தைகளுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும் எல்லாச் சலுகைகளும் வழங்கப்படும்.

8) பெரியாரின் கொள்கைகளைச் சட்டமாக்கி யாரையும் துன்புறுத்தாமல், யாருக்கும் தொல்லை கொடுக்காமல் அவைகளைச் சட்டபூர்வமாக நிறைவேற்றிட நடவடிக்கை எடுக்கப்படும்.

9) பெரியாரின் நூல்களையெல்லாம் தொகுத்துத் தமிழ்நாட்டில் உள்ள எல்லா நூலகங்களும் வாங்க உத்தரவு பிறப்பிக்கப்படும்.

10) பெரியாரின் கொள்கைகளைக் கிராமங்கள் தோறும் பரப்புவதற்காக 15 ஆயிரம் படித்த இளைஞர்கள் திரட்டப்படுவார்கள்.

# பத்திரிகைகளின் பார்வையில் பெரியார்!



தமிழகத்தின் மாமலைகளில் அவர் ஒருவர் என்பது சிறிதும் மிகையாகாது! கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டுக் காலம் பல பெரும் சூறாவளிகளைத் தாங்கியும் எதிர்த்தும் நின்று, சமுதாயப்புரட்சித் தீயைக் கக்கி, இறுதியாக மீளாத் துயிலில் ஆழ்ந்து விட்டார் அவர்.

—'சுதேசமித்திரன்', 24-12-73.

தமிழகத்தின் தனிப் பெரும் தலைவன். பகுத்தறிவுப் பாதையில் புறம் காட்டா வீரன்; தீண்டாமை நோயைத் தீர்க்க வந்த மருத்துவன்! தன்மானச் சிங்கம். சுயமரியாதைச் சுடர்!

—'நவமணி' 24-12-73.

தேச விடுதலை இயக்கம்-தீண்டாமை ஒழிப்புப் போர், சமூகச் சீர்திருத்தச் சமர், ஆகியவற்றில் அவர் மாவீரராக வாழ்ந்தவர்.

வாழ்ந்த காலமெல்லாம் தனக்குச் சரி யென்று பட்ட கொள்கையிலிருந்து வழுவாது வாழ்ந்தவர் பெரியார்.

—'ஜனசக்தி'.

நாலரைக் கோடி தமிழ்ச் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வந்த தன்னிகரில்லாத தலைவன். தன்மானச் சுடர். சுயமரியாதை இயக்க வீரர். பகுத்தறிவுப் பகலவன்.

—'தமிழ்நாடு', 4-1-74.

உலகமெங்குமுள்ள தமிழ்ச் சமுதாயம் 'அய்யா' என்று பெருமரியாதையோடு ஏற்றிப் போற்றி வந்த சீர்திருத்தச் செம்மல். சிந்தனைச் சிற்பி.

பெரியார் தமிழ்ச் சமுதாயத்தில் வேங்கைப் புலி போல உரிமைக் காவலராக வாழ்ந்து வந்தார்.

—மலேசியா நாளேடு 'தமிழ் நேசன்', 25-12-73.

தமிழ் மக்களின் ஒருமித்த அன்புக்குப் பாத்திரராகிய அய்யா பெரியார் இராமசாமி வைக்கம் வீரர்—காந்தியின் உற்ற தோழர்—கொள்கையில் சிறிதும் துவளாத, தளராத சமுதாயப் புரட்சியாளர்—தமிழ் மொழி, பண்பாட்டைக் காப்பாற்றியவர்—திராவிடர்களின் தந்தையின் வாழ்க்கை, சிறப்பு மிகுந்த வாழ்க்கையாகும்.

—'குங்குமம்' என்னும் மலையாள இதழ்.

'ஆரம்பத்தில் தேசவிடுதலைப் போராட்டங்களில் பங்கேற்ற பிறகு சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட மக்கள்,வாழ்க்கையில் உயர்நிலையடைய இரவு பகல் பாராமல் அயராமல் பாடுபட்டார்.

வாலிபத்தின் வசந்தத்திலிருந்து, வயோதிகத்தின் வாயில் வரை தான் நம்பிய இலட்சியங்களுக்காகத் தன் உயிரையே பணயம் வைத்துப் போராடினார்.

—'ஆந்திர பிரபா'.

தமிழக வரலாற்றில் பல திருப்பங்களைத் திட்டமிட்டு ஏற்படுத்தி வரலாற்றுப் போக்குகளையே தமிழினத்திற்குச் சாதகமாக மாற்றி விட்ட தடந்தோள்கள் பெரியாருடையவை. சபதத்தை முடித்தார்; சரித்திரம் படைத்தார். அவர் படிக்கவில்லை; தமிழினம் படித்தது.

—'தமிழ் முரசு' சிங்கப்பூர்.

உயர்திரு ஈ. வெ. ரா அவர்கள் அன்பும் பிரியமும், தன்னடக்கமும் மரியாதையும் நிறைந்தவர். சிக்கனமும், பிறர் என்ன நினைக்கிறார்கள் என்று கவலைப்பட்டுப் பயப்படாமல் தம் கருத்துக்களைச் சொல்லும் துணிவும் அவருடைய சீரிய குணங்கள். நிறை வாழ்வு வாழ்ந்த ஈரோட்டுப் பெரியாரின் நினைவு என்றென்றும் நம் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் நிலைத்து நிற்கும்.

—'கல்கி', 6-1-74.

. . . தந்தை பெரியார் என்று ஆயிரம் ஆயிரம் தமிழ் உள்ளங்கள் அன்புடன் அழைக்குமளவுக்கு அவருடைய சமுதாயச்சீர்திருத்தப் போக்கு அமைந்திருந்தது. சுமார் எழுபது ஆண்டுக்கு மேல் மக்களுடன் மக்களாக வாழ்ந்த பெரியார் 'இன்று இல்லை' என்பதையே பலர் நம்பத் தயங்குவார்கள். அப்படி மக்களின் மனத்துடன் ஒன்றியவர் அவர். அவரது உடல் மறைந்தாலும் இந்த அன்புப் பிணைப்பைப் பிரிக்க யாரால் முடியும்?

—'கலைமகள்', ஜனவரி, 1964.

# நெஞ்சில் நிலைபெற்ற பெரியார்

நாரண. துரைக்கண்ணன்





இளமையிலே தாய்நாட்டுப் பற்றுக் கொண்டு
ஈடில்லா காந்தியண்ணல் நெறியில் நின்று
பளபளக்கும் பட்டாடை மாற்றி விட்டுப்
பரதேசி யுடைகளையே பொசுக்கிப் போட்டுச்
சழுக்கற்ற கதர்த்துணியே கட்டு மாறு
சந்தியிலே பிரச்சாரஞ் செய்து வந்த
துளக்கமுற்ற பெரியோய்! நீ பிற்கா லத்தில்
தன்மதிப்பு இயக்கத்தைத் தோற்று வித்தாய்.

தேசபக்தர் தம்மிடையும் சாதிப் பித்தும்
தாழ்வுயர்வும் தலைவிரித்தே ஆடக் கண்டு
பாசபந்தம் பாராதுபே ராயம் நீங்கிப்
பண்பிலுயர் காந்தியுடன் மாறு பட்டு
ஆசில்லாப் பகுத்தறிவுப் பெரியோ ளுகி
அஞ்சாமல் சீர்திருத்தப் புரட்சி செய்து
ஏசுவோர்கள் ] இழிமொழியை உளங்கொள் ளாமல்
எம்மவர்தம் உயர்வுக்கே பாடு பட்டாய்

'இனப்பற்றும் மொழிப்பற்றும் இல்லா மக்கள்
எக்காலும் ஏற்றமொன்றும் பெறவே மாட்டார்;
மனங்கொள்வீர்!' எனமொழிந்து ஊக்கு வித்தாய்
மாண்புயர்ந்த ஐயா! உனை மறக்கப் போமோ?
கணத்திலுன்றன் ஆணையேற்றுக் களத்தில் நின்றோம்,
காணரிய வெற்றிகளைக் கணக்காய்ப் பெற்றோம்;
இணையில்லாப் பதவிகளை—ஆட்சி தன்னை
ஏற்றமுடன் யாமடைய வைத்திட் டாயே!

தமிழ்மக்கள் தன்மானம் இழந்து நின்று
தாழ்வுற்றுத் தலைகுனிந்து நொந்த போது,
'அமிழ்தனைய தமிழ்மொழிக்கு ஆக்கந் தந்தால்
ஆழ்கடலில் உதிக்கின்ற ஆத வன்போல்
நிமிர்ந்துநின்று ஒளிபெறுவோம் வருவீ ரென்'றே
நந்தமிழர் அனைவரையும் போர்க்க ழைத்தாய்!
'தமிழ்நாடு தமிழர்க்கெ'னக் குரல்கொ டுத்தாய்
திரண்டெழுந்த நம்மவர்க்குத் தெம்பு தந்தாய்.

ஏழையெளி யோர்க்கேற்றந் தருதற் காக
எக்காலும் அவர்நலமே பேசிப் பேசிப்
பாழைபாட் டாளிகளும் பயன்பெ றற்குப்
பல்லாண்டாய் நிலைமைகளை விளக்கிக் கூறி
மோழைகளாய் முடங்களுமாய் வாடும் மக்கள்
முன்னேறப் பகலிரவாய்ப் பாடு பட்ட
பேழைக்கரு வூலமன்ன பெரியோய்! உன்றன்
பாதைபற்றி மேற்செலற்கு முயல்கின் றோமே!



சமதர்ம நாடான சோவி யத்தின்
சாதனையை நீநேரில் சென்று கண்டு
''சமதர்மக் கொள்கைசெயல் பட்டா லன்றிச்
சமவாய்ப்பும் வசதிகளும் நம்மக் கட்குச்
சமமாகக் கிட்டாது; சமூக நீதி
சமரசமாய்க் கிடைக்காது'' என்றே சொல்லிச்
சமதர்ம சகவாழ்வு சகலர்க் காக்கச்
சாதனைகள் பலபுரிந்தாய்; பெரியோய்! நீயே.

ஈ. வே. ரா. உன்னைப்போல் ஒருத லைவன்
இவ்வுலகில் காண்பதற்கு அரிதா மென்பேன்;
பாவேந்தர் உன்கொள்கை பாடி யன்றோ
புரட்சிபுரி கவிஞரெனப் புகழும் பெற்றார் !
கோவேந்தர் பலர்கூட உன்சொல் லுக்குக்
கட்டுப்பா டாய்க் கடமை யாற்றி நின்றார் ;
நாவேந்தும் நற்கொள்கை பரவு தற்கு
நாடெங்கும் நீவழிசெய் திட்டா யன்றோ?

வெண்தாடி வேந்தனே! உன்னை யன்றி
வேறுயார் நம்மவர்க்கு வாழ்வு தந்தார்?
பண்டுதொட்டே பலதுறையில் பிற்பட் டோரைப்
பாழாகப் போகவைத்த பதிதர் தம்மை
அண்ணல்துரை நாவதனால் நடுங்க வைத்தாய்;
ஆயிரமாந் தொண்டர்களால் நம்ம னோரை
விண்ணுயரம் ஏற்றிவைத்த விழுமி யோயே!
வாழ்த்தியுனை நெஞ்சில்நிலை நிறுத்தி னோமே!

பெரியோனே! உனைநினைத்தால் நெஞ்சம் விம்மும்;
பேச்சொன்றைக் கேட்டிட்டால் தோள்து டிக்கும்;
அரிதான செயல்பலவும் ஆற்றி நின்றே
ஆற்றலினால் அடலேறு போலொ ளிர்ந்தாய்;
சரியென்று நீநினைத்த கொள்கை தன்னைச்
சகமுழுதும் எதிர்த்திடினும் சாற்றி னையால்!
எரிதழலைத் தண்புனலால் அணைப்ப தேபோல்
ஏந்தால்! இனப் பகைவர்களை யொழித்திட் டாயே!

தன்னலமே சிறிதுமில்லாத் தன்மை யாலே
தாரணியில் புத்தரைப்போல் போற்றப் பட்டாய்!
மன்புதையில் மனிதாபி மானத் தோடு
மாண்செயல்கள் புரிந்ததனால் வீர ரானாய்!
தொண்ணூற்று ஐந்துவரை தொண்டு செய்தே
'தண்டி' சென்ற காந்தியைப்போல் கருதப் பட்டாய்
என்றென்றும் உன்பெயரை நாடு சொல்லும்;
எண்ணத்தில் வைத்துமக்கள் போற்று வாரே!





# புத்துயிர் அளிக்கும் கருவி

இரா. குப்புராசு, பி.இ.,

நம் நாட்டில் அடிக்கடி பருவ மழை தவறுவதன் காரணமாக நீர் மட்டம் நாளுக்கு நாள் கீழ் நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்பது நாம் அறிந்ததே.

நாளுக்கு நாள் நீர் மட்டம் கீழ் நோக்கிச் செல்வதால் கிணற்றில் போதிய நீர் வசதி இல்லாமல் போவதுடன், கோடை காலத்தில் அநேகக் கிணறுகள் வற்றி விடுகின்றன. அதனால் விவசாயிகள், தாங்கள் செய்துள்ள பயிர்களுக்குப் போதிய நீர்ப்பாசனம் கொடுக்க இயலாமல், பயிர்கள் கருகிப் போய், பயிர் செய்வதற்குச் செலவு, செய்த பணம் திரும்பக் கிடைக்கப் பெறாமல் விவசாயிகள் மிகவும் துன்பமுறுகிறார்கள்.

அம்மாதிரி கிணறுகள் நீர் இல்லாமல் வற்றிவிடும்பொழுது விவசாயிகள் கிணற்றில் நீர் வசதி பெருக்குவதற்காகக் கிணற்றை மேற்கொண்டு ஆழப்படுத்துவது அல்லது புதிய கிணறு தோண்டிப் பயிர்களுக்கு நீர்ப் பாசன வசதி செய்து கொடுப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இதனால் பயிரிடுவதற்கு ஆகும் செலவு இரட்டிப்பாகிறது. அப்படிக் கிணற்றை ஆழப்படுத்துவதாலும் புதிய கிணறு தோண்டுவதாலும் போதிய நீர் கிடைக்கும் என்று நம்புவதற்கில்லை.

எனவே, விவசாயிகள் கிணற்றை ஆழப்படுத்துவதற்கும், புதிய கிணறுகள் தோண்டுவதற்கும் மிகவும் செலவுசெய்து துன்பமுறுவதைத் தவிர்ப்பதற்காக, வேளாண்மைத் துறை, விவசாயிகளின் துயர் துடைப்பதற்கு முன் வந்து, தற்பொழுது நீர் அற்ற பாறைக் கிணறுகளை அகலப் படுத்தாமலும், ஆழப்படுத்தாமலும் கிணற்றில் போதிய நீர் வசதி பெருக்குவதற்காகக் கிணற்றுக்குப் புத்துயிர் அளிக்கும் கருவியை (லாங் ஹோல் எக்விப்மெண்ட்) புழக்கத்தில் கொண்டு வந்துள்ளது.

**புத்துயிர் அளிக்கும் கருவியும் அதன் பயனும் :**

கிணற்றுக்குப் பக்கவாட்டில் 40 அல்லது 50 அடிக்கும் தொலைவிலாவது அல்லது கிணற்றுக்கு அடியில் 30 அல்லது 40 அடிக்குக் கீழே நல்ல நீரோட்டம்—அமைந்து இருக்கலாம், அம்மாதிரியான நீரோட்டம் செல்லும் திசைநோக்கிக் கிணற்றை ஆழப் படுத்தாமலும், அகலப்படுத்தாமலும் சிறிய துளைகள் அமைத்து—நீரோட்டத்தைத் திசை திருப்பிக் கிணற்றுக்குக் கொண்டு வந்து, கிணற்றில் நீர் வசதி பெருக்கச் செய்வதே ''புத்துயிர் அளிக்கும் கருவியை'' நடைமுறையில் கொண்டு வந்ததன் நோக்கமாகும்.

நீரோட்டம் செல்லும் திசை நோக்கிக் கிணற்றில் பக்கவாட்டில் கிணற்றைச் சுற்றிப் பல இடங்களில் கிணற்றுக்குப் புத்துயிர் அளிக்கும் கருவியின் மூலமாக நீண்ட துளை அமைத்து, கிணற்றுக்குப் பக்கவாட்டத்தில் செல்லும் நீரோட்டத்தைத் திசை திருப்பி அமைக்கப்பட்ட நீண்ட துளையின் மூலமாக நீரை கிணற்றுக்குக் கொண்டு வந்து கிணற்றில் நீர் வசதி செய்து கொடுக்கப்படுகிறது.

இதேபோல் கிணற்றில் அடி மட்டத்தில் கீழ்நோக்கி நீண்ட துளை 40 முதல் 60 அடி வரை அமைத்து, நிலத்தின் அடி மட்ட நீரை வெளிக் கொணர்ந்து கிணற்றில் நீர் வசதி செய்து கொடுக்கப்படுகிறது. இதனால் பழையக் கிணற்றை ஆழப்படுத்தவும், அகலப்படுத்தவும் தேவையில்லை. அத்துடன் நீரோட்டம் உள்ள இடத்தில் புதிய கிணறு தோண்டச் செலவு செய்யவும் தேவையும் இல்லை.

கிணற்றுக்குப் புத்துயிர் அளிக்கும் கருவியின் மூலமாகப் பாறைக் கிணற்றில் 38 மி.மி. முதல் 41 மி.மி. வரை குறுக்களவுள்ள துளை 50 முதல் 60 அடி வரை அமைக்கலாம். கிணற்றில் நீண்ட துளை இக்கருவியின் மூலமாக அமைப்பதால், கிணற்றிலிருந்து மணிக்கு 3,000 முதல் 4,000 காலன்கள் வரை தண்ணீர் கிடைக்கப் பெறலாம். நாள் ஒன்றுக்கு இக்கருவியின் மூலம் அதாவது 8 மணி நேரத்தில் 20 முதல் 25 அடி நீளமுள்ள துளை 2 முதல் 3 அமைக்கலாம். இது கிணற்றில் அமையப் பெற்றுள்ள பாறையின் தன்மையைப் பொறுத்துள்ளது.

பாறைக் கிணற்றுக்குப் புத்துயிர் அளிக்கும் கருவியின் மூலம், கிணற்றை மேற்கொண்டு ஆழப் படுத்தாமலும், அகலப்படுத்தாமலும், மிகக் குறைந்த செலவில் கிணற்றில் நீர் வசதி செய்து கொடுக்கப்படுவதால், விவசாயிகள் மிக அதிகமாக இக்கருவியை உபயோகப்படுத்த முன் வருகிறார்கள்.

கிணற்றில் அழுத்தப்பட்ட காற்றின் மூலமாக, புத்துயிர் அளிக்கும் கருவியை இயங்கச் செய்து நீண்ட துளைகள் அமைக்கப்படுகிறது. இக்கருவியைச் சார்ந்த உபகரணங்களும் அதன் உபயோகங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

**(அ) பென்ச்சர் :**

இக்கருவி, துளையிடும் கருவியின் மூலமாகக் கிணற்றின் அடி மட்டத்தில் கிணற்றைச் சுற்றி 40 முதல் 60 அடி வரை நீண்ட துளை அமைக்கப் பயன்படுத்தப்படுகிறது.

**(ஆ) ஆட்டோ பீடு :**

இக்கருவி, துளையிடும் கருவியின் மூலமாகக் கிணற்றின் பக்கவாட்டத்தில் கிணற்றைச் சுற்றி 40 முதல் 60 அடிவரை நீண்ட துளை அமைக்கப் பயன்படுத்தப்படுகிறது.

**பிளஷ்ஷிங் பம்ப் :**

(1) இக்கருவியின் பயன், துளையிடும் கருவியின் மூலம் நீண்ட துளை இடும்பொழுது தகர்க்கப்படும் பாறை துகள்களைத் துளையிலிருந்து வெளிக் கொணருதல்.

(2) துளை இடும்பொழுது துளை இடும் கம்பி சூடாகாமல் குளிர்ச்சி செய்தல்.

**ஜாக் ஹாமர் :**

அது ஒரு சிறிய துளை இடும் கருவி. அழுத்தப்பட்ட காற்றின் மூலமாக இத்துளை இடும் கருவியை இயங்கச் செய்து பாறைகளில் துளை இடப்படுகிறது.

கிணற்றுக்குப் புத்துயிர் அளிக்கும் கருவியை இயங்கச் செய்ய காற்றழுத்தக் கருவி (ஆர். பி. யு.) உபயோகப் படுத்தப்படுகிறது. காற்றழுத்தக் கருவி ''கிணற்றுக் குப் புத்துயிர் அளிக்கும்'' கருவி இயங்குவதற்குத் தேவையான காற்றை, தேவையான அழுத்தத்துடன் உற்பத்தி செய்து வழங்குகிறது.

**செயல்முறை :**

புத்துயிர் அளிக்கும் கருவியின் பயனை அடைய, நிர்ணயிக்கப்பட்ட மனு பாரத்தில் ஒரு ரூபாய் நிதித்துறை கட்டண வில்லையை (கோர்ட் ஃபீ ஸ்டாம்பு) ஒட்டி கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும்:

உதவி செயற் பொறியாளர்,
(வே. பொ) (ஆய்வு)
நந்தனம், சென்னை-600035.

இக்கருவியின் மூலமாகக் கிணற்றில் நீண்ட துளை அமைக்க இயலுமா என்பதை அறிய ரூ. 10 முன்னதாக விவசாயிகளிடம் இருந்து வசூலிக்கப்படுகிறது. கிணற்றைப் பார்வையிட்டு, கிணறு நீண்ட துளை அமைக்க உகந்ததாக இருப்பது தெரிவிக்கப்பட்டவுடன், ரூ. 100 முன் வைப்புத் தொகையையும், ஐந்து நாள் முன் வாடகைப்பணம் நாள் ஒன்றுக்கு ரூ. 45 வீதம் ஆக மொத்தம் ரூ. 325 முன்னதாக மேற்கண்ட அலுவலகத்தில் செலுத்த வேண்டும். கருவியை முறைப்படி வரிசையாக விவசாயிகளுக்கு ஒதுக்கி, கிணற்றில் நீர் வசதி செய்து கொடுக்கப்படுகிறது.

கிணற்றுக்குப் புத்துயிர் அளிக்கும் கருவியின் வாடகை நாள் ஒன்றுக்கு ரூ. 45 தவிர கருவி இயங்கத் தேவையான டீசல், துளையிடும் பிட், துளையிடும் கருவி இயங்க உதவி செய்ய கூலி ஆட்கள் முதலியவைகளைக் கருவியை உபயோகப்படுத்தும் விவசாயி வழங்க வேண்டும்.

கிணற்றுக்குப் புத்துயிர் அளிக்கும் கருவியின் மூலம் கிணற்றில் நீண்ட துளை அமைக்க ஒரு நாளைக்கு ஆகும் செலவையும், பாறை வெடி இயந்திரத்தை உபயோகப்படுத்திக் கிணற்றை ஆழப்படுத்த ஒரு நாளைக்கு ஆகும் செலவையும் ஒப்பிட்டு நோக்குவோம்:

3. பாறை வெடி கருவியை இயங்கச் செய்ய நாள் ஒன்றுக்கு 20 லிட்டர் டீசல் தேவை. 1 லிட்டர் டீசலின் விலை ரூ. 1.35 (1.35×20 — ரூ. 27.

4. வெடி மருந்தின் கிரயம் மொத்தம் 30 துளைக்கு ஒரு செட் வெடி மருந்தின் கிரயம் சுமார் ரூ. 5. எனவே மொத்தம் 30 துளைகளுக்கு— ரூ. 150.

5. துளையிடும் கம்பியின் தேய்மானம் ஒரு துளைக்கு ரூ. 1 வீதம் 30 துளைகளுக்கு — ரூ. 30

---

பாறை வெடி கருவியின் மூலம் கிணற்றை ஆழப்படுத்த நாள் ஒன்றுக்கு ஆகும் செலவு (கிணற்றில் 30 துளையிட்டு வெடி வைக்க ஆகும் செலவு)

கிணற்றுக்குப் புத்துயிர் அளிக்கும் கருவியின் மூலம் கிணற்றில் நீண்ட துளை அமைக்க நாள் ஒன்றுக்கு ஆகும் செலவு, (25 அடி நீளமுள்ள துளைகள் அமைக்க ஆகும் செலவு)

---

1. பாறை வெடி கருவியின் வாடகை ஒரு வெடி வைப்பதற்கு ரூ. 40.

2. பாறை வெடி கருவியை இயங்கச் செய்யத் தேவையான ஆட்களின் கூலி நாள் ஒன்றுக்கு ரூ. 6 வீதம் மூன்று ஆட்களுக்கு (6×3=18) ரூ. 18.

6. கருவியைக் கடைசியாக வேலை செய்து முடித்த இடத்திலிருந்து வேலை செய்ய வேண்டிய இடத்திற்குக் கொண்டு வருவதற்குச் செலவு ரூ. 100 அதாவது ரூ.100 —5 : ரூ.20

7. வெடி வைத்த பிறகு தகர்க்கப்பட்ட பாறைத் துகள்களை ஆட்களை வைத்து எடுக்க ரூ.200

**பல நோக்கு கருவி உழவு செய்தல்**



| | | | |
|---|---|---|---|
| | ரூ.485.00 | | ரூ. 205.00 |
| இதர செலவுகள் | ரூ. 15.00 | இதர செலவுகள் | ரூ. 15.00 |
| ஆக மொத்த செலவு | ரூ.500.00 | ஆக மொத்த செலவு | ரூ.220.00 |

குறிப்பு :

1. கிணற்றுக்குப் புத்துயிர் அளிக்கும் கருவியின் மூலம் கிணற்றில் நீண்ட துளைகள் அமைத்து நீர் வசதி பெருக்கியவுடன் கிணற்றைப் பாசனத்திற்குப் பயன்படுத்தலாம்.

2. இக்கருவியின் மூலமாகக் கிணற்றின் மிகச் சுலபமாக நீர் வசதி பெருக்கச் செய்யலாம்.

3. நீர் வசதி பெருக்கச் செய்தவுடன் ஆட்களைக் கொண்டு கிணற்றிலிருந்து கற்களை எடுக்கத் தேவையும் இல்லை.

1. கிணற்றுக்குப் புத்துயிர் அளிக்கும் கருவியின் வாடகை நாள் ஒன்றுக்கு ரூ. 45.

2. நீண்ட துளையிடும் கருவியை இயங்கச் செய்யத் தேவையான ஆட்களின் கூலி நாள் ஒன்றுக்கு ரூ. 6. (6×3=18 ரூ. 18)

3. புத்துயிர் அளிக்கும் கருவியை இயங்கச் செய்ய நாள் ஒன்றுக்குச் 50 லிட்டர் டீசல் தேவை. (அதாவது 8 மணி நேரம் வேலை செய்வதற்கு) ரூ. 67.50. 1 லிட்டர் டீசலின் விலை ரூ. 1.35 வீதம் 50 லிட்டருக்கு (1.35×50)

4. துளை இடும் பிட்டிங் தேய்மானம் சுமார் நாள் ஒன்றுக்கு, ஒரு பிட்டிங் விலை ரூ. 3 ரூ. 350

5. கருவியைக் கடைசியாக வேலை செய்து முடித்த இடத்திலிருந்து வேலை செய்ய வேண்டிய இடத்திற்குக் கொண்டு வருவதற்குச் செலவு சுமார் ரூ. 200 அதாவது ஐந்து நாட்களுக்கு, எனவே, நாள் ஒன்றுக்கு ரூ. 200—5 : ரூ. 40

**பாறை வெடிக் கருவியை உபயோகப்படுத்துவதால் ஏற்படும் தொல்லை :**

1. வெடி வைப்பதற்குத் தேவையான, வெடி மருந்துகள் கோடைகாலத்தில் கிடைப்பது மிகவும் சிரமம். எனவே, விவசாயிகள் சில சமயங்களில் வெளி மார்க்கெட்டில் வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். இதனால் செலவு இரட்டிப்பாகும்.

(2) கிணற்றில் வெடி வைத்த பிறகு தகர்க்கப்பட்ட கற்களை, ஆட்களைக் கொண்டு அப்புறப் படுத்தி கிணற்றைச் சுத்தப் படுத்த வேண்டும். சில சமயங்களில்— உடனடியாக ஆட்கள் கிடைக்காததால் கிணற்றைச் சுத்தப்படுத்திப் பயன்படுத்த இயலாது.

எனவே, இம்மாவட்டத்திலுள்ள விவசாயிகள் உதவி செயற்பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல், ஆய்வு,) நந்தனம், சென்னை-35 என்ற முகவரியில் அணுகி, கிணற்றுக்குப் புத்துயிர் அளிக்கும் கருவியை உபயோகப்படுத்திப் பயன்பெற முன் வரலாமே!

# உழைப்பால் உயரும் முகவை

**ச**முதாய வளர்ச்சித் திட்டங்களுக்குப் புத்துயிர் அளிக்கும் முகமாகவும், கிராம மக்களும், அரசு அலுவலர்களும் உடல் உழைப்பின் மூலம் (சிரமதானத்தின் மூலம்) கிராம மக்களுக்குப் பயன்தரும் திட்டங்களை நிறைவேற்றுதல் என்ற அடிப்படையிலும் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு கிராமம் என வகுத்து இந்தச் சிரமதானப் பணியினை மேற்கொள்ளும் திட்டம் ஒன்றினை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எஸ். சுப்பிரமணியம் அவர்கள் செயல்படுத்தி வருகிறார். கிராமப் பொதுமக்களின் முழு ஆதரவைப் பெற்றுள்ள இத்திட்டங்களின் கீழ் பயன்தரும் பல பணிகள் நிறைவேறி வருகின்றன.

இத் திட்டத்தின்கீழ் குன்றக்குடியில் (27-8-'78 அன்று) தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு பொ. காளியப்பன் அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றிவைக்க ஒரு மைல் நீளக் கால்வாய் மராமத்து வேலையினை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர், தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஆகியோர் சிரமதானப் பணியின் மூலம் தொடங்கி வைத்தனர்.



தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களும் முகவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு சா. சுப்பிரமணியம் அவர்களும் சிரமதானப்பணியினை துவக்கி வைத்தல்.

குன்றக்குடி கண்மாய் வரத்துக்கால் சீர்படுத்தும் இப்பணியினை அரசு அலுவலர்கள், காரைக்குடி மத்திய மின்வேதி கல்லூரி கலைக் கல்லூரி மாணவ மாணவியர்கள் மற்றும் கிராம மக்கள் சட்டமன்ற உறுப்பினர் என 500 பேர்கள் இப்பணியினைச் செய்து முடித்தனர். சீர்திருத்தம் செய்யப்பட்ட கால்வாயின் நீளம் ஒரு மைல். இந்த வேலையின் மதிப்பு ரூ. 5 ஆயிரம். இதனால் 118 ஏக்கர் நிலத்துக்குப் புதிதாகப் பாசன வசதி கிடைக்கிறது. இதன் மூலம் 150 சிறு விவசாயிகள் பயனடைகிறார்கள்.

அடுத்து, சிங்கம்புணரி ஒன்றியம் எஸ். மாம்பட்டி என்னும் கிராமத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருந்த திருமணிமுத்தாறு நதியின் கரையைப் பலப்படுத்தும் பணியினைச் சிரமதானத் திட்டத்தின்கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் தொடங்கி வைக்க, அரசு அலுவலர்களும், ஊர்ப் பொதுமக்கள் சுமார் 300 பேர் மேற்கொண்டனர். இந்த வேலையின் மதிப்பு ரூ. 3 ஆயிரம். இதனால் திருமணிமுத்தாறு நதியின்கரை பலப்படுத்தப்பட்டுள்ளது.

# ஊதியக் குழுவின் பரிந்துரைகள் மீது அரசின் முடிவுகள்

தமிழ்நாடு அரசு, மூன்றுவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின்மீது முடிவெடுத்துள்ளது. ஒப்பிடத்தக்க பணித் தன்மைகளையொட்டிய பதவிகளுக்கு ஒத்த சம்பளம் என்ற அடிப்படையில் அமைந்துள்ள ஊதிய அமைப்பு,

அலுவலர்கள், மேல் பதவிகளுக்கோ, தேர்வு நிலைகளுக்கோ செல்வதற்கு அதிகமான வாய்ப்புக்கள்,

குறைந்த அளவு—அதிக அளவு ஊதிய நிலைகட்கிடையே உள்ள குறைவான வீதாச்சாரம்,

வீட்டு வாடகைப் படி, நகர ஈட்டுப் படி அளிப்பதில் சீரமைப்பு,

கிராம அலுவலர்களின் மதிப்பூதியத்திலும், ஒட்டுமொத்த பயணப்படியிலும் உயர்வு,

ஓய்வூதிய உயர்வு முதலியவை

அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட, ஊதியக் குழுவின் முக்கிய பரிந்துரைகளாகும். ஏழரை இலட்சத்திற்கும் அதிகமான அரசு, உள்ளாட்சித் துறை மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவன அலுவலர்களுக்கு மிக்க பயனளிக்கும் வகையில் அமைந்துள்ள ஊதியக் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக் கொண்ட அரசு, அவற்றை மேலும் தாராளமாக்கியுள்ளது.

கடைநிலை ஊழியர்களுக்கு ஊதிய விகித உயர்வு அளிப்பது,

உள்ளாட்சி நிறுவன அலுவலர்களுக்கும் அரசு அலுவலர்களை ஒத்த நலன்களைத் தருவது,

கிராமப் பகுதிகளில் அரசு வீடுகளில் வசிப்போரிடமிருந்து பெறும் வாடகையை மேலும் குறைப்பது ஆகியவை

இவைகளுள் குறிப்பிடத் தக்கதாகும். ஊதியக் குழுவின் பரிந்துரைகள்மீது அரசு எடுத்துள்ள முடிவுகளால் நாளடைவில் ஆண்டொன்றுக்கு ரூ. 67 கோடி அதிகச் செலவு ஏற்படும்; உடனடியாக ஆண்டொன்றுக்கு ரூ. 37 கோடி கூடுதல் செலவு ஏற்படும். ஊதியக் குழுவின் முக்கிய பரிந்துரைகளும் அவற்றின்மீது அரசு எடுத்த முடிவுகளும் பின்வரும் பத்திகளில் விளக்கப்பட்டுள்ளன:

சென்னை உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி திரு இர. சதாசிவம் அவர்களைத் தலைவராகவும் தமிழ்நாடு வருவாய் வாரியத்தின் முன்னாள் முதல் உறுப்பினர் திரு மு. கௌ. இராசாராம், ஐ.ஏ.எஸ்., அவர்களை உறுப்பினராகவும், திரு சீ. சீனிவாசன், ஐ.ஏ.எஸ்., அவர்களை உறுப்பினர்-செயலாளராகவும் கொண்ட மூன்றுவது தமிழ்நாடு ஊதியக் குழு, 1977ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் ஒன்பதாம் நாளன்று அமைக்கப்பட்டது. தமிழகத்தில் உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் அமைக்கப்பட்ட ஊதியக் குழு இதுவே முதலாவதாகும். அமைக்கப்பட்ட ஓராண்டுக் காலத்திற்குள்ளேயே குழு தனது அறிக்கையை அரசுக்குச் சமர்ப்பித்தது. புதிய ஊதிய அமைப்பையும் படிகளையும்' 1978ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் தேதியிலிருந்து செயலாக்க அரசு முடிவு செய்துள்ளது. தமிழ்நாட்டில்

ஊதியக் குழுக்கள் அமைக்கப்பட்ட நாட்களையும் அவற்றின் பரிந்துரைகள் செயலாக்கப்பட்ட நாட்களையும் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

| | ஊதியக் குழு அமைக்கப்பட்ட நாள் | ஊதியக் குழுவின் பரிந்துரைகள் செயலாக்கப்பட்ட நாள் | ஊதியக் குழு அமைக்கப்பட்ட நாளிலிருந்து அதன் பரிந்துரைகள் செயலாக்கப்பட்ட நாள் வரையுள்ள காலம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| முதல் ஊதியக் குழு | 24—2—1959 | 1—6—1960 | ஓர் ஆண்டும் மூன்று மாதங்களும். |
| இரண்டாம் ஊதியக் குழு | 4—9—1969 | 2—10—1970 | ஓர் ஆண்டும் ஒரு மாதமும். |
| மூன்றும் ஊதியக் குழு | 9—8—1977 | 1—4—1978 | எட்டு மாதங்கள். |

## சீரமைக்கப்பட்ட புதிய ஊதிய விகிதங்கள்

புதிய ஊதிய அமைப்பில் குறைந்த அளவு ஊதியம் மாதமொன்றுக்கு ரூ. 250 ஆகவும், அதிக அளவு ஊதியம் மாதமொன்றுக்கு ரூ. 2,500 ஆகவும் இருக்கும். இவ்விரு நிலைகளுக்குமிடையே உள்ள விதாச்சார வேறுபாடு வருமான வரிக்கு முன்னர் 10 : 1 என்றும், வருமான வரிக்குப் பின்னர் சுமார் 8.8 : 1 என்றும் இருக்கும். இது நாட்டிலுள்ள மிகக் குறைந்த அளவு வேறுபாடுகளில் ஒன்றாக இருக்கும்.

தற்போதுள்ள சம்பள விகிதங்களின் எண்ணிக்கையைக் குறைத்து, அவற்றை உழைப்பு, திறன் முதலியவற்றின் அடிப்படையில் சீரமைத்துள்ளது.

அலுவலர்கள் மேல் பதவிகளுக்கோ, மேல் நிலையிலுள்ள ஊதிய விகிதங்களுக்கோ உயர்வதற்கு, இடர்ப்பாடில்லாத ஓர் முறையை வகுத்துள்ளது, ஆகியவை

அரசினரால் ஏற்கப்பட்ட சிறப்பான பரிந்துரைகளாகும். தற்போதுள்ள 76 ஊதிய விகிதங்கள் 20 புதிய விகிதங்களாக்கப்படும். தற்போதுள்ள ஊதிய விகிதங்களும், புதிய விகிதங்களும் இணைப்பு-1 இல் கொடுக்கப்பட்டுள்ளன. புதிய சம்பள விகிதங்களும் தற்போது அளிக்கப்பட்டு வரும் அகவிலைப் படியும், 1977ஆம் ஆண்டு அளிக்கப்பட்ட இடைக்கால நிவாரணமும் அடங்கும். புதிய ஊதிய அமைப்பு, தொழிலாளர்களுக்கான அகில இந்திய நுகர்வோர் விலைவாசிக் குறியீட்டு எண் 320 (1960—100)ஐ ஒட்டி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஊதியக் குழு பரிந்துரைத்துள்ளபடி, குடியீட்டு எண்ணின் சராசரி எட்டு புள்ளிகள் உயரும்போது அகவிலைப்படி தரவேண்டிய அவசியம் ஏற்படும். தற்போது குறியீட்டு எண்ணின் சராசரி 326 ஆக உள்ளது. அது 328ஐ எட்டும்போது அகவிலைப்படி தரவேண்டிய அவசியம் ஏற்படும். சில முக்கிய பதவிகளுக்கான தற்போதைய ஊதிய விகிதங்களும், புதிய ஊதிய விகிதங்களும் இணைப்பு 2இல் கொடுக்கப்பட்டுள்ளன. புதிய விகிதங்களின் சராசரி, தற்போதைய மொத்த ஊதியத்தின் சராசரியைவிட கணிசமாக அதிகரித்துள்ளதைக் காணலாம். இதுவரை பெற்று வந்த அகவிலைப்படியும், இடைக்கால நிவாரணமும் அடிப்படை ஊதியத்தில் முழுமையாக இணைக்கப்படுவதால், அடிப்படை ஊதியத்தை ஒட்டி அமைந்துள்ள ஓய்வுக்கால நன்மைகளும், மற்ற பல படிகளும் அதிகரிக்கும்.

### தேக்க நிலை நீக்கமும் பதவி உயர்வுக்கான வாய்ப்புக்களும் :

தற்போதுள்ளதைப் போன்று காலியிடங்களைப் பொறுத்து இல்லாமல், இனிமேல் பணிக் காலத்தைப் பொறுத்து மேல் பதவிகளுக்கோ, மேல் ஊதிய நிலைகளுக்கோ பல பதவிகளிலுள்ள அலுவலர்கள் முன்னேறக் கூடிய வழிமுறையை ஏற்படுத்த ஊதியக் குழு செய்துள்ள பரிந்துரையை அரசு ஏற்றுள்ளது. இம்முறையின்கீழ், இடைப்பட்ட நிலைகளிலும், இள நிலைகளிலுமுள்ள பல அலுவலர்கள், இயல்பான பதவி உயர்வின்றி, ஒரே பதவியில் 10 ஆண்டுகள் பணியாற்றினால் மேல் பதவிக்கோ, தேர்வு நிலைக்கோ அல்லது சிறப்பு நிலைக்கோ உயரலாம். அப்பதவியிலோ, அவ்வாறான நிலைகளிலோ காலியிடம் ஏற்பட வேண்டுமென்ற கட்டாயமில்லை. உதாரணமாக, 10 ஆண்டுகள் பணி புரிந்த உதவி தாசில்தார், தாசில்தார் பதவிக்கும், முதுநிலைக் கூட்டுறவு ஆய்வாளர், கூட்டுறவுத் துணைப் பதிவாளர் பதவிக்கும், போலீஸ் சப் இன்ஸ்பெக்டர், டெபுடி இன்ஸ்பெக்டர் பதவிக்கும், இரண்டாம் நிலையில் உள்ள கிராம சேவக், கால்நடை ஆய்வாளர், போலீஸ் காவலர் போன்றோர் முதல் நிலைக்கும் பதவி உயர்வு பெறலாம். அதேபோல், அலுவலக உதவியாளர், மேற்பார்வையாளர், தாசில்தார், துணை வணிக வரி அலுவலர், போலீஸ் இன்ஸ்பெக்டர், உதவிப் பொறியாளர், இளநிலைப் பொறியாளர், துணை கலெக்டர், துணைப் போலீஸ் சூபரிண்டெண்டண்ட், மாவட்ட வேளாண்மை அதிகாரி, மாவட்டக் கல்வி அதிகாரி, உதவி செயற் பொறியாளர், உதவி அறுவை

மருத்துவர் போன்றோர் தேர்வு நிலைகளுக்கு முன்னேறலாம். மேற்சொன்ன பதவிகளுக்கான முன்னேற்ற வாய்ப்புக்கள் உதாரணத்திற்காகவே கொடுக்கப்பட்டுள்ளன. இவை தவிர பல்வேறு பதவிகளிலுள்ளோர்களுக்கும் இதுபோன்ற வாய்ப்புக்கள் ஏற்படும். பட்டம் பெற்ற ஆசிரியர்கள், இடை நிலை ஆசிரியர்கள், இள நிலை ஆசிரியர்கள், தமிழ் ஆசிரியர்கள் ஆகியோருக்கு, தேர்வு நிலைக்கு மேல் சிறப்பு நிலையொன்று அமைக்கப்பட்டுள்ளது. தேர்வு நிலையில் 10 ஆண்டுகள் பணியாற்றியவுடன் இவர்கள் சிறப்பு நிலைக்குச் செல்லலாம்.

**கடைநிலை அலுவலர்களுக்கு நன்மை பயக்கக்கூடிய முடிவுகள் :**

ஊதியக் குழு, பல பதவிகளிலுள்ள அலுவலர்களுக்கு 10 ஆண்டுகள் பணி புரிந்த பின் பதவி உயர்வுக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தி பரிந்துரை செய்த அதே சமயத்தில், இது கடைநிலை அலுவலர்களுக்குப் பொருந்தாது எனக் கூறியுள்ளது. ஆனால், அரசு, கடைநிலை மற்றும் அவர்களை ஒத்த பல அலுவலர்களின் நலனைக் கருத்தில் கொண்டு இந்த வாய்ப்பு, அவர்களுக்கும் நீட்டிக்கப்பட வேண்டும் என முடிவு செய்துள்ளது. அரசின் இம்முடிவு, சுமார் 30,000 கடைநிலை அலுவலர்களுக்கும் அவர்களை ஒத்த மேலும் 20,000 அலுவலர்களுக்கும் பயன் அளிக்கும். எழுத்தர், தட்டச்சர் போன்ற மேல் பதவிகளுக்குக் கடைநிலை அலுவலர்கள் உயர்வதற்கும், மற்ற பல துறைகளில் தேர்ச்சி பெற்று அவர்கள் மேல் நிலையிலுள்ள பல வேலை வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையிலும் செய்யப்பட்ட பல பரிந்துரைகளை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

நான்காம், ஐந்தாம் பத்திகளில் கூறிய ஏற்பாடுகள், பதவி உயர்வு கிட்டாததால் பல்லாயிரக் கணக்கான அலுவலர்களிடையே நிலவும் மனச் சோர்வை நீக்கி, அவர்களுக்கு உற்சாகமளிக்கும். மொத்தம் சுமார் 75,000 அலுவலர்கள் இந்த ஏற்பாடுகளினால் உடனடியாகப் பலனடைவரென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான அலுவலர்களுக்கு இந்த ஏற்பாட்டினால் பயன் கிட்டும். பணிக்காலத்தையொட்டிய பதவி உயர்வு, தேர்வு நிலைக்குச் செல்லுதல் போன்றவை ஆங்காங்குள்ள அதிகாரிகளின் மூலம் செயலாக்கப்படும். இதனால் இவை கால தாமத மேதுமின்றிச் செயலாக்கப்படும். உயர் பதவிகளில் இயல்பாக காலியிடங்கள் ஏற்படும்போது தற்போதுள்ள விதிமுறைகளின்படி 10 ஆண்டுகளுக்குள்ளாகவே தகுதி பெற்றவர்கள் பதவி உயர்வு பெறுவதில் தடை ஏதுமிருக்காது.

**பத்து ஆண்டுகள் பணி புரிந்தபின் இரட்டிப்பு ஆண்டு ஊதிய உயர்வு :**

நடு நிலை வரையுள்ள பல பதவிகளுக்கு நான்காம் பத்தியில் கூறியபடி பதவி உயர்வுக்கான வாய்ப்புக்கள் கிட்டும். இவ்வாய்ப்புக்கள் கிட்டாத ஏனைய அலுவலர்கள், 10 ஆண்டுக் காலப் பணி முடிந்தவுடன், வழக்கமாகப் பெறும் ஓராண்டு ஊதிய உயர்வுக்குப் பதில் இரண்டு ஆண்டுகட்கான ஊதிய உயர்வு பெறுவர். ஒரு முறை கிட்டும் இப்பலன் தொடர்ந்து நீடிக்கும். சம்பள விகிதங்களின் உச்ச நிலையை எட்டுபவர்கள், அவர்கள் ரூ. 1,500 ஊதிய நிலை அடையும் வரை சம்பள விதங்களுக்கு மேலாகவும் ஊதிய உயர்வு பெறுவர்.

**புதிய விகிதங்களில் ஊதியம் நிர்ணயிக்கப்படும் முறை :**

அலுவலர்களின் சம்பளத்தை தற்போதைய ஊதிய விகிதங்களிலிருந்து புதிய விகிதங்களில் பொருத்துவதற்கு, ஊதியக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட முறையை அரசு ஏற்றுக் கொண்டது; மேலும், அரசு அலுவலர்களுக்கு ஏற்படக் கூடிய குறைந்த அளவு பலனும் அதிகரித்துள்ளது. இதன்படி, 31-3-1978 அன்று அலுவலர்களுக்குரிய மாத ஊதியத்தை ஐந்து சதவீதம் உயர்த்தி, அத்துடன் அகவிலைப்படியையும், 1977ஆம் ஆண்டு முதல் பெற்று வரும் இடைக்கால நிவாரணத்தையும் சேர்த்த பின் கிடைக்கும் மொத்தத் தொகைக்கு இணையான நிலையிலோ அல்லது இணையான நிலை இல்லாவிட்டால் அடுத்த மேல் நிலைக்கோ, புதிய ஊதிய விகிதங்களில் சம்பளம் நிர்ணயிக்கப்படும். இவ்வாறு அமையப்பெறும் புதிய ஊதியம், 1977ஆம் ஆண்டு இடைக்கால நிவாரணமாக அளிக்கப்பட்ட தொகையை உள்ளடக்கினால் குறைந்தபட்சம் ரூ. 25ஆவது அதிகமாக இருக்க வேண்டும் என ஊதியக் குழு பரிந்துரை செய்துள்ளது. இதன்படி 31—3—1978 அன்று பெற்று வந்த ஊதியம், அகவிலைப்படி, இடைக்கால நிவாரணம் இவற்றுடன் குறைந்தது இனி ரூ. 15யேனும் பலன் கிட்டும்படி சம்பளங்கள் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்துள்ளது. இதனை அரசு உயர்த்தி, ரூ. 20 குறைந்த அளவு பலன் கிட்டுமாறு மாற்றியுள்ளது. குறைந்த அளவு உயர்வு ரூ. 20 ஆகவும், அதிக அளவு உயர்வு ரூ. 130 ஆகவும் இருக்கும். இந்தத் தொகையில் 1—4—1978 முதல் அளிக்கப்பட்ட நிவாரணத் தொகை உள்ளடங்கும். இந்த முடிவின்படி குறைந்த ஊதிய நிலைகளில் இருக்கும் பல்லாயிரக்கணக்கான அலுவலர்களுக்கு நன்மை ஏற்படும்.

அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மேலும் ஒரு முக்கியமான பரிந்துரை, அகவிலைப்படியைப் பற்றியதாகும். மத்திய அரசு தற்போது அகில இந்திய நுகர்வோர் விலைவாசிக் குறியீட்டு எண் (1960—100) 8 புள்ளிகள் உயரும்போது அதன் அலுவலர்களுக்கு அகவிலைப்படி அளிக்கிறது. இந்த அகவிலைப்படி ஊதியத்தின் குறிப்பிட்ட சதவீதமாக அளிக்கப்படுகிறது. மாநில அலுவலர்கட்கும் இனிமேல் இதையொத்த முறையில் அகவிலைப்படி அளிக்கப்படும். மத்திய அரசின் சம்பள விதங்கள் குறியீட்டு எண் 200 ஆக இருந்தபோது அமைக்கப்பட்டவை. தற்போது அமைக்கப்படும் மாநில அரசின் ஊதிய அமைப்பு, குறியீட்டு எண் 320ஐ ஒட்டி அமைக்கப்பட்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு அதற்கேற்றவாறு மத்திய அரசு அகவிலைப்படி அளிப்பதைப் போன்றே, 8 புள்ளிகள் உயர்வுக்குத் தக்க முறையில் அகவிலைப்படி அளிக்கப்படும்.

**ஓய்வூதிய அதிகரிப்பு :**

ஓய்வு பெற்ற அலுவலர்களின் ஓய்வு ஊதியம் 5 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது. இந்த உயர்வு 10 ரூபாய்க்குக் குறையாமலும் 25 ரூபாய்க்கு மேற்படாமலும் இருக்கும். மேலும், குறைந்த



## முதல்வரின் முத்துக்கள்

எந்தக் காரியமும் செம்மையாகச் செயல்படுவது என்றால் வாழ்க்கையை எண்ணிப் பார்த்துச் செயல்பட வேண்டும்.

தனக்காக வாழும்போதும், பிறருக்காகச் செயல்படும்போதும் கணக்கிட்டுப் பார்த்துச் செயல்பட வேண்டும்.

தொழில், திட்டம், வாழ்க்கை ஆகியவற்றிற்கு முறையாக அமைய வேண்டியது கணக்கே.

அவயவங்களின் அசைவு, மூச்சு விடுவதில் கணக்கு; ஒரு மைல் நடப்பதற்கு எவ்வளவு அடி காலை எடுத்துவைத்தால் குறிப்பிட்ட நேரத்தில் நடக்க முடியும் என்பதற்கும் கணக்கு இருக்கிறது.

அளவு ஓய்வூதியம், அகவிலைப்படி ஆகியவை சேர்ந்த மொத்த தொகை, தற்போதுள்ள ரூ. 82 (ஓய்வூதியம் ரூ. 50, அகவிலைப்படி ரூ. 32)லிருந்து, ஓய்வூதிய உயர்வு உட்பட ரூ. 100க்குக் குறையாமல் உயர்த்தப்படும்.

### சேமிப்பு வசதியுடன் கூடிய ஈட்டுறுதித் திட்டம் :

தற்போது அலுவலர்கள் மாதம் ஒரு ரூபாய் செலுத்துமாறும், பதவிக் காலத்தில் மரணம் அடையும் அலுவலர்களின் குடும்பங்கள் ரூ. 10,000 பெறுமாறும் அமைக்கப்பட்ட ஈட்டுறுதித் திட்டமொன்று நடைமுறையில் இருந்துவருகிறது. ஆனால், இதனால் சேமிப்பு வசதி ஏதும் கிடையாது. ஓய்வு பெறும் அலுவலர்களுக்கு இத்திட்டத்தினால் பயன் எதுவும் கிட்ட வாய்ப்பில்லை. இதைக் கருத்திற்கொண்டு சேமிப்பு வாய்ப்புடன் கூடிய ஈட்டுறுதித் திட்டம் ஒன்றைச் செயலாக்குமாறு ஊதியக் குழு பரிந்துரை செய்துள்ளது. 1974-ஆம் ஆண்டு முதல் செயலாக்கப்பட்டுப் பின்னர் கைவிடப்பட்ட திட்டத்தை, மீண்டும் செயலாக்க வேண்டுமென பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் அலுவலர் மாதம் ரூ. 10 செலுத்துவார்கள்.

அதன்மீது அரசு உரிய தொகை வழங்கும். இம்முறையில் அலுவலரின் கணக்கில் உள்ள தொகை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துக் கொண்டு வரும். முப்பது ஆண்டுகள் மாதம் ரூ. 10 வீதம் செலுத்தி பணியாற்றி ஓய்வுபெறும் அல்லது பதவி விலகும் அலுவலர்களுக்கு இதன் மூலம் ரூ. 7,200 கிட்டும். அதற்குக் குறைவான பணிக்காலம் உடையவர்களுக்குத் தக்க தொகையும், 30 ஆண்டுகட்கு அதிகமான பணிக்காலம் உடையோருக்கு, அதைவிட அதிகமான தொகையும் கிட்டும். பதவிக் காலத்தில் அலுவலர் மரணம் அடைய நேரிட்டால் அவருடைய குடும்பத்திற்கு, தற்போதுள்ளதைப் போலவே ரூ. 10,000 அளிக்கப்படும். விருப்பமுள்ள அலுவலர்கள் இத்திட்டத்தில் சேரலாம்.

### பயணப்படி குறித்த நன்மைகள் :

பயணப்படி விதிகள் சீரமைக்கப்பட்டுள்ளன. பயணப்படி விதிகளின் பொருட்டு தற்போது 6 தரங்களாகப் பிரிக்கப்பட்டு இருக்கும் அலுவலர்கள், 4 தரங்களாகப் பிரிக்கப்படுவர். தற்போதுள்ள விதிகளின்படி, 6 மணி அவகாசத்திற்கு உட்பட்ட பயணத்திற்குப் பயணப்படி கிடையாது. 6 மணி அவகாசத்திற்கு மேலும் 12 மணி அவகாசத்திற்குள்ளும் இருந்தால் பாதியளவுப் பயணப்படியும், 12 மணி அவகாசத்திற்கு மேல் இருந்தால் முழுப் பயணப்படியும் கிடைக்கின்றன. இவ்விதிகள் தளர்த்தப்பட்டு, பயணம் 6 மணி அவகாசத்திற்கு உட்பட்டிருந்தால் 30 சதவீதம் படி கிட்டுமாறும், 6 மணி அவகாசத்திற்கு மேலும் 12 மணி அவகாசத்திற்குள்ளும் இருந்தால் 70 சதவீதம் கிட்டுமாறும் மாற்றி அமைக்கப்படும். பஸ் அல்லது இரயில் பயணத்திற்கான இட ஒதுக்கீட்டுச் செலவுகளும், இரயிலில் உறங்கும் வசதிக்காகக் கொடுக்கப்படும் தொகையும் தற்போது பயணச் செலவாகக் கருதப்படுவதில்லை. இனி, இச்செலவுகளும் பயணச் செலவாகக் கருதப்பட்டு அலுவலர்களுக்குத் திருப்பி அளிக்கப்படும். வீட்டிலிருந்தோ, அலுவலகத்திலிருந்தோ இரயில் நிலையம் அல்லது பஸ் நிலையம் செல்லும் செலவை ஈடுகட்டுவதற்காக, இடங்களைப் பொறுத்தும், அலுவலரின் தரத்தைப் பொறுத்தும், ரூ. 1லிருந்து ரூ. 5 வரை மொத்தத் தொகை அளிக்கப்படும்.

### கிராம அலுவலர்களின் மதிப்பு ஊதிய, பயணப்படி உயர்வு:

கிராம அலுவலர்களுக்கு அளிக்கப்பட்டுவரும் மதிப்பு ஊதியம், அவர்கள் 31—3—1978 பெற்ற தொகையிலிருந்து ரூ. 15 அதிகரிக்கப்பட்டுள்ளது. இது அவர்கள் தற்போது பெற்று வரும் மதிப்பு ஊதியத்தைவிட ரூ. 10 அதிகமாக இருக்கும். கிராம அலுவலர்களுக்கு அளிக்கப்படும் ஒட்டு மொத்தப் பயணப்படி, தலைமையிடத்திற்கும் கிராமத்திற்கும் உள்ள தூரத்தைப் பொறுத்து ஆண்டொன்றுக்கு ரூ. 12லிருந்து ரூ. 30 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

### வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி அளிப்பதிலுள்ள கட்டுப்பாடுகள் நீக்கம் :

வீட்டு வாடகைப் படியும், நகர ஈட்டுப்படியும் தாராளமாக்கப்பட்டுள்ளன. தற்போது, இந்த நடைமுறையிலுள்ள இடங்களில், சென்னையைத் தவிர்த்த பகுதிகளில் குறிப்பிட்ட ஊதிய நிலைக்கு மேல் இருக்கும் அலுவலர்களுக்கு இந்தப் படிகள் அளிக்கப்படுவது இல்லை, இக்கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுவிட்டது. இனி, இந்தப் படிகள் அவை நடைமுறையிலுள்ள இடங்களில் பணிபுரியும் அலுவலர்கள் அனைவருக்கும் கிடைக்கும். தற்போது ஊதியத்தின் குறிப்பிட்ட சதவீதமாக அளிக்கப்

படும் இப்படிகள், இனி, சம்பள நிலைகளைப் பொறுத்து மொத்தத் தொகையாக அளிக்கப்படும். அவற்றின் விவரம் பின்வருமாறு:

## வீட்டு வாடகைப்படி

| வரிசை எண். | சம்பளம் (ஒரு மாதத்திற்கு) (ரூபாய்) | கிரேட் 1 (A) சென்னை மாநகரும் அதன் எல்லையிலிருந்து 32 கி.மீ.க்கு மேற்படாத இடங்களும் | கிரேட் 1 (B) கோயம்புத்தூர், மதுரை அவற்றின் எல்லைகளிலிருந்து 16 கி.மீ.க்கு மேற்படாத இடங்களும் (ஒரு மாதத்திற்கு ரூபாய்) | கிரேட் 2 இடங்கள் | கிரேட் 3 இடங்கள் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | 400க்கு கீழ் | 45 | 30 | 25 | 15 |
| 2. | 400— 699 | 75 | 50 | 40 | 25 |
| 3. | 700— 999 | 120 | 80 | 65 | 40 |
| 4. | 1000—1299 | 165 | 110 | 90 | 50 |
| 5. | 1300—1599 | 210 | 140 | 115 | 50 |
| 6. | 1600—1899 | 255 | 150 | 125 | 50 |
| 7. | 1900—2199 | 300 | 150 | 125 | 50 |
| 8. | 2200—2499 | 325 | 150 | 125 | 50 |
| 9. | 2500க்கு மேல் | 350 | 150 | 125 | 50 |

## நகர ஈட்டுப்படி

| வரிசை எண் | சம்பளம் (ஒரு மாதத்திற்கு) (ரூபாய்) | சென்னை மாநகரும் அதன் எல்லையிலிருந்து 32 கி.மீ.க்கு மேற்படாத இடங்களும் (ஒரு மாதத்திற்கு ரூபாய்) | கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களும், அவற்றின் எல்லைகளிலிருந்து 16 கி.மீ.க்கு மேற்படாத இடங்களும் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | 400க்கு கீழ் | 25 | 15 |
| 2. | 400— 699 | 40 | 25 |
| 3. | 700— 999 | 65 | 40 |
| 4. | 1000—1299 | 90 | 50 |
| 5. | 1300—1599 | 115 | 50 |
| 6. | 1600—1899 | 135 | 50 |
| 7. | 1900க்கு மேல் | 150 | 50 |

### சிற்றூர்களிலும், கிராமங்களிலும் பணிபுரியும் அலுவலர்களுக்கு நன்மைகள்:

சிறு நகர்களிலும், கிராமப் புறங்களிலும் அரசு அல்லது, அரசைச் சார்ந்த வீடுகளில் வசிக்கும் அலுவலர்கள் கொடுக்க வேண்டிய வாடகை கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள விதிகளின்கீழ் அரசு அல்லது அரசைச் சார்ந்த வீடுகளில் வசிக்கும் அலுவலர்களிடமிருந்து, அவர்கள் எந்த இடத்தில் வசித்தாலும், அவர்களது ஊதியத்தில் 10 சதவீதம் வாடகைக்காகப் பிடிக்கப்படு கிறது. இரண்டாம் நிலை நகரங்களில் ஊதியத்தில் 9 சதவீதமாகவும், மூன்றாம் நிலையிலுள்ள சிறு நகர்களில் 7 சதவீதமாகவும் மற்ற சிற்றூர்களிலும் கிராமங்களிலும் 6 சதவீதமாகவும் வீட்டு வாடகையாகப் பிடிக்கலாம் என்று ஊதியக் குழு பரிந்துரை செய்துள்ளது. இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை நகரங்களைப் பொறுத்த பரிந்துரைகளை ஏற்றுக் கொண்ட அரசு, அலுவலர்களைக் கிராமப் புறத்தில் பணி புரிய ஊக்குவிக்கும் வகையில், கிராமப் புறங்களில் பணிபுரியும் அலுவலர்கள், அரசைச்சார்ந்த வீடுகளில் வசிக்கும்போது அவர்களிடமிருந்து ஊதியக் குழுவால் பரிந்துரை செய்யப் பட்ட 6 சதவீதத்திற்குப் பதிலாக 5 சதவீதமாக, வாடகைப் பிடித்தம் செய்யலாமென முடிவு செய்துள்ளது.

### மலைவாழ் படி மற்றும் குளிர்காலப் படி மீதான உச்சவரம்பு அதிகரிப்பு:

மலைவாழ் படியின் உச்சவரம்பு ரூ. 80லிருந்து ரூ. 120 ஆகவும், குளிர்கால படியின் உச்ச வரம்பு ரூ. 25லிருந்து 50 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளன. இப்படிகள் அடிப்படை ஊதியத்தைப் பொறுத்து அளிக்கப்படுவதாலும், புதிய அடிப்படை ஊதியம் தற்போது அலுவலர்கள் பெற்றுவரும் ஊதியம், அகவிலைப்படி இடைக்கால நிவாரணம் முதலியவற்றை முழுவதும் சேர்த்து மேலும் ஒரு கணிசமான தொகையைக் கூட்டி நிர்ணயிக்கப்படுவதாலும், மலைப் பிரதேசங்களில் பணி புரியும் அலுவலர்களுக்கு இதன் மூலம் பயன் கிட்டும்.

### உள்ளாட்சித் துறை அலுவலர்களுக்குப் பதவி உயர்வுக்கான வாய்ப்புக்கள்:

அரசு, உள்ளாட்சித் துறை மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களில் பணி புரியும் ஆசிரியர்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியான சம்பள விகிதங்களையும் மேல் நிலைகளுக்கு உயர்வதற் கான வாய்ப்புகளையும் ஏற்படுத்த ஊதியக் குழு பரிந்துரை செய்துள்ளது. ஆனால், இந்நிறுவனங்களில் பணி புரியும் மற்ற அலுவலர்களுக்கு அரசு அலுவலர்களுக்கு ஈடான ஊதியமும் தேர்வு நிலை மற்றும் மேல் பதவிகளுக்கு உயர்வது போன்ற வாய்ப்புகளும் ஏற்படுத்த வேண்டியதில்லையென பரிந்துரை செய்துள்ளது. குறிப்பாக, இவ்வமைப்புகளில் பணியாற்றும் இளநிலை உதவியாளர்களுக்கு அரசில் உள்ளவர்களைவிட சற்று குறைவான சம்பள விகிதத்தைப் பரிந்துரை செய்துள்ளது. ஆசிரியர்களைப் பொறுத்த வரை குழுவின் பரிந்துரையை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. மற்ற அலுவலர்கள் ஊதிய அமைப்பு மற்றும் பதவி உயர்வு போன்றவற்றைப் பொறுத்த பரிந்துரையை அரசு ஒப்புக்கொள்ள வில்லை. நடைமுறையை ஒட்டியும், உள்ளாட்சித் துறை போன்ற மற்ற நிறுவனங்களிலுள்ள பணி நிலைமைகளைக் கருத்திற் கொண்டும், அரசு அவர்களுக்கும் பொதுவாக அரசு அலுவலர்களுக்கு உள்ளதைப் போலவே ஊதியமும், மேல் பதவி, தேர்வு நிலை முதலியவற்றுக்குச் செலவும வாயப்பு களும் அமைய வேண்டும் என முடிவு செய்துள்ளது. அரசின் முடிவு, உள்ளாட்சித் துறை போன்ற அரசு அல்லாத நிறுவனங்களில் பணி புரியும் அலுவலர்களுக்குத் தாராளமான பணி நிலைமைகளை ஏற் படுத்தி, அவர்களுக்கு மிகுந்த பயன் அளிப்பதாக அமைந்துள்ளது.

### சிறப்பு ஊதியம்:

சிறப்பு ஊதியம் அளிக்கப்படும் முறையைப் பற்றி ஊதியக் குழு செய்துள்ள பரிந்துரைகளை அரசு கொள்கையளவில் ஏற்றுக் கொண்டுள்ளது. தட்டச்சர், சுருக்கெழுத்தர் போன்றவர்களின் சிறப்பு ஊதியம் உயர்த்தப்பட்டுள்ளது; அதே சமயத்தில் சிறப்புஊதியம் அளிக்கும் முறையிலுள்ள பல முரண்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன. தட்டச்சர், சுருக்கெழுத்தர் முதலியோர் தற்போது ரூ. 15 லிருந்து ரூ. 75 வரை சிறப்பு ஊதியம் பெற்று வருகின்றனர். இது ரூ. 20லிருந்து ரூ. 125 வரை அதிகரிக்கப்படும். தமிழ் மொழி தட்டச்சர்களுக்கு அளிக்கப்படும் சிறப்பு ஊதியத்தின் மீதான சில கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன. அரசு வேளாண்மைப் பண்ணைகள், கால்நடைப் பண்ணைகள் ஆகியவற்றில் பணிபுரியும் செயல் அலுவலர்கள் (Executive Cadres) கணிசமான சிறப்பு ஊதியம் பெறுவர். அரசின் அடிப்படை விதிகளுக்கு ஒவ்வாத வகையில் பல பதவிகளுக்குத் தற்போது சிறப்பு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது என்பதை ஊதியக் குழு சுட்டிக் காட்டி, இவ்வாறு அளிக்கப்படும் சிறப்பு ஊதியம் நீக்கப்பட வேண்டும் என்று செய்துள்ள பரிந்துரையை அரசு கொள்கையளவில் ஏற்றுக் கொண்டுள்ளது. இவ்வாறு சிறப்பு ஊதியம் நிறுத்தப்படும்போது அப்பதவிகளில் தற்போது பணிபுரியும் அலுவலர்களின் மொத்த ஊதியத்தில் உடனடியாகப் பெரும் வீழ்ச்சி ஏற்படாவண்ணம், அதைப் படிப்படியாகக் குறைத்து நான்கு ஆண்டுகளில் நீக்கும் வகையில் அரசு முடிவு எடுத்துள்ளது.

பொதுவாகக் கிராமப்புறங்களிலுள்ள அரசுத் தொடர்புள்ள பணிகளுக்கு, ஆங்காங்குள்ள மக்களைத் தேர்ந்தெடுத்து அவர்களைப் பகுதி நேர அலுவலர்களாக நியமிப்பதால் கிராமப்புறங்களில் அதிகமான அளவு வேலை வாய்ப்பு ஏற்படும் என்றும் ஆங்காங்கு நியமிக்கப்படும் அலுவலர்கள் பொறுப் பாகப் பணியாற்றக் கூடிய நிலையையும், நிறுவன செலவு குறைவதால் கிராமப்புறங்களில் பணிகள் விரிவாக்கப்படக் கூடிய வாய்ப்பையும் சுட்டிக்காட்டி, ஊதியக் குழு செய்துள்ள பரிந்துரையையும் அரசு கொள்கையளவில் ஏற்றுக் கொண்டுள்ளது. மேலும் அரசுப் பொறுப்பு பரவலாக்கப்பட்டு, பணி நிறைவேற்றும் இடத்திலுள்ள அலுவலர்களுக்குத் தகுந்த அதிகாரமும் பொறுப்பும் அளிக்கப்பட வேண்டுமென்றும் செய்யப்பட்டுள்ள பரிந்துரைகளையும் அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

# இணைப்பு—1

## இருபது அமைப்புகளாகப் பாகுபாடு செய்யப்பட்ட தற்போதைய சம்பள விகிதங்களும், சீரமைக்கப்பட்ட புதிய சம்பள விகிதங்களும்

| | தற்போதைய சம்பள விகிதங்கள் | புதிய சம்பள விகிதங்கள் |
|---|---|---|
| | ரூபாய் | ரூபாய் |
| I | 1. 1700—100—2000<br>2. 1800—100—2100<br>3. 1800—100—2300<br>4. 2000—125—2250 | 2000—125—2500 |
| II | 5. 1300—50—1400—75—1700—100—2000<br>6. 1400—60—1700<br>7. 1500—75—1800<br>8. 1600—75—1900 | 1600—75—1750—100—2250 |
| III | 9. 1200—50—1600<br>10. 1300—50—1600<br>11. 1400—50—1600<br>12. 1200—50—1700 | 1500—75—1800—100—2100 |
| IV | 13. 1050—50—1450<br>14. 1100—50—1500 | 1300—75—1900—100—2000 |
| V | 15. 900—50—1300<br>16. 950—50—1350<br>17. 1000—50—1400<br>18. 1000—50—1450 | 1150—70—1850 |
| VI | 19. 750—50—1250<br>20. 800—40—1000—50—1250<br>21. 850—50—1250 | 1000—60—1300—70—1650 |
| VII | 22. 650—40—1050<br>23. 700—40—1100<br>24. 750—40—950—50—1100<br>25. 700—40—900—50—1000 | 850—50—1200—60—1500 |
| VIII | 26. 525—25—600—30—900<br>27. 525—25—600—30—690—35—900<br>28. 550—25—600—35—950<br>29. 525—30—645—40—965<br>30. 575—25—600—40—1000<br>31. 600—40—1000<br>32. 700—40—980 | 750—50—1350 |
| IX | 33. 450—25—750<br>34. 475—25—650—30—800<br>35. 525—25—600—30—750<br>36. 425—25—500—30—650—40—850<br>37. 500—25—625—30—745—35—850<br>38. 500—25—600—30—690—35—900<br>39. 500—25—600—30—750<br>40. 350—15—425—25—600—30—750<br>(குறைந்த பட்சம் பத்து ஆண்டுகள் பணி புரிந்தவர்களுக்கு) | 675—35—885—45—1200 |

# இந்த மொட்டு மலரட்டும்



குழந்தையின் உடல், அறிவு வளர்ச்சிக்கு முதல் மூன்று வருடங்களும் முக்கியமான காலமாகும். உங்கள் அன்பும் அரவணைப்பும் இப்பொழுது அதற்கு அவசியம் தேவை.
இந்த காலத்தில் மற்றொரு குழந்தையைப் பெற்று அதற்குரிய அன்பையும் அரவணைப்பையும் மறுத்துவிடாதீர்.
மேலும் பிரசவத்துக்கிடையே குறைந்தது மூன்று ஆண்டுகள் இருந்தால்தான் தாயின் உடல் வளம் குன்றாது இருக்கும்.

பெண்களுக்கு
ஐயுடி மற்றும்
மாத்திரைகள்
ஆண்களுக்கு
நிரோத்

இலவச ஆலோசனைக்கும் மருத்துவ வசதிகளுக்கும்

**அருகிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை நாடவும்**

davp 78/160

| | | |
|---|---|---|
| X | 41. 400—15—475—20—575—25—650<br>42. 400—15—430—20—550—25—650<br>43. 400—15—430—25—680<br>44. 425—25—650<br>45. 400—15—430—20—550—25—700<br>46. 425—20—525—25—700<br>47. 425—25—700<br>48. 425—25—600—30—750 | 600—30—750—35—890—40—1050 |
| XI | 49. 350—15—425—25—600<br>50. 350—15—500—20—600—25—650<br>51. 375—15—495—20—575—25—650<br>52. 375—15—435—20—575—25—675<br>53. 375—15—435—20—575—25—650<br>54. 350—15—425—20—525—25—700<br>55. 350—15—500—20—600<br>56. 325—15—475—20—575—25—650<br>57. 350—15—425—20—625<br>58. 350—15—425—25—600—30—750<br>(பத்து ஆண்டுகளுக்கும் குறைவாகப் பணி புரிந்தவர்களுக்கு) | 525—25—675—30—855—35—925 |
| XII | 59. 300—10—350—15—500<br>60. 300—10—500<br>61. 300—15—420—20—500<br>62. 325—15—550 | 450—20—590—25—740—30—800 |
| XIII | 63. 250—10—400<br>64. 250—10—450<br>65. 250—10—300—15—450<br>66. 275—10—375—15—450 | 400—15—490—20—650—25—700 |
| XIV | 67. 210—5—245—10—325<br>68. 225—5—250—10—350 | 350—10—420—15—600 |
| XV | 69. 200—5—250—10—300<br>70. 225—5—250—10—300 | 325—10—445—15—550 |
| XVI | 71. 180—5—260—10—270<br>72. 190—5—255—10—285. | 310—10—470—15—500 |
| XVII | 73. 160—5—240<br>74. 170—5—255 | 295—5—315—10—475 |
| XVIII | 75. 150—4—170—5—225 | 280—5—320—10—450 |
| XIX | 76. 140—3—155—4—175—5—210 | 265—5—325—10—425 |
| XX | 77. 130—3—160—4—180—5—195 | 250—5—330—10—400 |

குறிப்பு : வரிசை எண்கள் 40ம் 58ம் ஒரே சம்பள விகிதத்தின் இரு பிரிவுகளாகும்.

# இணைப்பு 2

| வ. எண். | பதவியின் பெயர் | தற்போதுள்ள சம்பள விகிதம் [தேர்வு நிலை (தே. நி.) உள்ள பதவிகளில் அவைகளின் சம்பள விகிதங்கள் உட்பட] | சராசரி சம்பளம் + அகவிலைப்படி + 1977ல் கொடுக்கப்பட்ட இடைக்கால நிவாரணம் | புதிய சம்பள விகிதம் (10 ஆண்டுகள் பணிபுரிந்த அலுவலர்களுக்குக் கிட்டும் தேர்வு நிலை (தே. நி.), சிறப்பு நிலை (சி.நி.) அல்லது உயர்பதவிக்கான சம்பள விகிதங்கள் உட்பட) | சராசரி சம்பளம் |
|---|---|---|---|---|---|
| | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | கடைநிலைப் பணியாளர் | 130—3—160—4—180—5—195 | 280 | 250—5—330—10—400 | 318 |
| | | | | 265—5—325—10—425 (தே.நி.) | 340 |
| 2. | பதிவெழுத்தர் | 140—3—155—4—175—5—210 | 294 | 265—5—325—10—425 | 340 |
| | | 180—5—260—10—270 (தே.நி.) | 370 | 310—10—470—15—500 (தே.நி.) | 411 |
| 3. | ஓட்டுநர் | 180—5—260—10—270 | 370 | 310—10—470—15—500 | 411 |
| | | 200—5—250—10—300 (தே.நி.) | 398 | 325—10—445—15—550 (தே.நி.) | 441 |
| | | | | 400—15—490—20—650—25—700 (சி.நி.) | 570 |
| 4. | இளநிலை உதவியாளர் | 210—5—245—10—325 | 417 | 350—10—420—15—600 | 479 |
| | | | | 400—15—490—20—650—25—700 (உதவியாளர்) | 570 |
| 5. | உதவியாளர் | 250—10—300—15—450 | 527 | 400—15—490—20—650—25—700 | 570 |
| | | | | 450—20—590—25—740—30—800 (தே. நி.) | 654 |
| 6. | அலுவலகக் கண்காணிப்பாளர் | 350—15—425—25—600 | 673 | 525—25—675—30—855—35—925 | 765 |
| | | 525—25—600—30—750 (தே.நி.) | 833 | 675—35—885—45—1200 | 978 |
| 7. | தலைமைச் செயலக உதவியாளர் | 300—15—420—20—500 | 587 | 450—20—590—25—740—30—800 | 654 |
| | | | | 525—25—675—30—855—35—925 (தே.நி.) | 765 |
| 8. | தலைமைச் செயலகப் பிரிவு அலுவலர் | 425—25—500—30—650—40—850 | 836 | 675—35—885—45—1200 | 978 |
| | | 700—40—980 (தே.நி.) | 1045 | 750—50—1350 | 1103 |

| | | | | |
|---|---|---|---|---|
| 9. வட்ட ஆட்சியர் | 425—25—700 | 755 | 600—30—750—35—890—40—1050 | 860 |
| | | | 675—35—885—45—1200 (தே.நி.) | 978 |
| 10. துணை வட்ட ஆட்சியர் | 350—15—425—25—600 | 673 | 525—25—675—30—855—35—925 | 765 |
| | | | 600—30—750—35—890—40—1050 (வட்ட ஆட்சியர்) | 860 |
| 11. செவிலியர் | 300—15—420—20—500 | 587 | 450—20—590—25—740—30—800 | 654 |
| | | | 525—25—675—30—855—35—925 (தே.நி.) | 703 |
| 12. வட்டாரக் காவல் துறை அதிகாரி | 425—25—700 | 755 | 600—30—750—35—890—40—1050 | 860 |
| | | | 675—35—885—45—1200 (தே.நி.) | 978 |
| 13. காவல் துறை சார்நிலை அதிகாரி | 300—15—420—20—500 | 587 | 450—20—590—25—740—30—800 | 654 |
| | | | 525—25—675—30—855—35—925 (தே.நி.) | 765 |
| 14. தலைமைக் காவலர் | 210—5—245—10—325 | 417 | 350—10—420—15—600 | 479 |
| | | | 400—15—490—20—650—25—700 (காவல் துறை சார்நிலை உதவி அதிகாரி) | 570 |
| 15. முதல் நிலைக் காவலர் | 200—5—250—10—300 | 398 | 325—10—445—15—550 | 441 |
| 16. இரண்டாம் நிலைக் காவலர் | 150—4—170—5—225 | 311 | 280—5—320—10—450 | 362 |
| | | | 325—10—445—15—550 (முதல் நிலை) | 441 |
| 17. கூட்டுறவுச் சார் பதிவாளர் | 375—15—435—20—575—25—650 | 705 | 525—25—675—30—855—35—925 | 765 |
| | 425—20—525—25—700 (தே.நி.) | 752 | 600—30—750—35—890—40—1050 | 860 |
| 18. கூட்டுறவுத் துறை முதுநிலை ஆய்வாளர் | 300—15—420—20—500 | 587 | 450—20 —590—25—740—30—800 | 654 |
| | | | 525—25—675—30—855—35—925 (கூட்டுறவுச் சார் பதிவாளர்) | 765 |
| 19. உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் | 500—25—625—30—745—35—850 | 871 | 675—35—885—45—1200 | 978 |
| | 450—25—750 | 792 | 750—50—1350 (தே.நி.) | 1103 |

| | | | | |
|---|---|---|---|---|
| 20. பட்டம் பெற்ற பள்ளி ஆசிரியர் | 300—15—420—20—500 | 587 | 450—20—590—25—740—30—800 | 654 |
| | 400—15—430—20—550—25—650 (தே.நி.) | 712 | 600—30—750—35—890—40—1050 (தே. நி.) | 860 |
| | | | 675—35—885—45—1200 (சி.நி.) | 978 |
| 21. இடைநிலை ஆசிரியர் | 210—5—245—10—325 | 417 | 350—10—420—15—600 | 479 |
| | 250—10—400 (தே. நி.) | 498 | 400—15—490—20—650—25—700 (தே. நி.) | 570 |
| | | | 450—20—590—25—740—30—800 (சி. நி.) | 654 |
| 22. கீழ்நிலைப் பள்ளி ஆசிரியர் | 150—4—170—5—225 | 311 | 280—5—320—10—450 | 362 |
| | 180—5—260—10—270 (தே.நி.) | 370 | 310—10—470—15—500 (தே.நி.) | 411 |
| | | | 325—10—445—15—550 (சி. நி.) | 441 |
| 23. துணை வேளாண்மை அலுவலர் | 400—15—430—20—550—25—700 (நேர்முகத் தேர்வு) | 735 | 600—30—750—35—890—40—1050 | 860 |
| | | | 675—35—885—45—1200 (தே.நி.) | 978 |
| | 375—15—435—20—575—25—675 (பதவி உயர்வு அளிக்கப்பட்டவர்கள்) | 715 | 525—25—675—30—855—35—925 | 765 |
| | | | 600—30—750—35—890—40—1050 (தே. நி.) | 860 |
| 24. இளநிலைப் பொறியாளர் | 350—15—425—20—525—25—700 | 708 | 525—25—675—30—855—35—925 | 765 |
| | | | 600—30—750—35—890—40—1050 (தே. நி.) | 860 |
| 25. துணை வணிக வரி அலுவலர் | 425—25—700 | 755 | 600—30—750—35—890—40—1050 | 860 |
| | | | 675—35—885—45—1200 (தே.நி.) | 978 |
| 26. உதவி வணிக வரி அலுவலர் | 350—15—425—25—600 | 673 | 525—25—675—30—855—35—925 | 765 |
| | | | 600—30—750—35—890—40—1050 (துணை வணிக வரி அலுவலர்) | 860 |
| 27. வட்டார வளர்ச்சி அலுவலர் | 425—25—700 | 755 | 600—30—750—35—890—40—1050 | 860 |
| | 500—25—625—30—745—35—850 (தே.நி.) | 871 | 675—35—885—45—1200 (தே.நி.) | 978 |

| | | | | |
|---|---|---|---|---|
| 28. கிராம நல அலுவலர் (அ) முதல் நிலை | 250—10—300—15—450 | 527 | 400—15—490—20—650—25—700 | 570 |
| | | | 450—20—590—25—740—30—800 (தே. நி.) | 654 |
| (ஆ) இரண்டாம் நிலை | 210—5—245—10—325 | 417 | 350—10—420—15—600 | 479 |
| | | | 400—15—490—20—650—25—700 (முதல் நிலை) | 570 |
| 29. கால் நடை உதவி மருத்துவர் | 425—20—525—25—700 | 752 | 600—30—750—35—890—40—1050 | 860 |
| ,, ,, (தே. நி.) | 525—25—600—30—690—35—900 | 911 | 675—35—885—45—1200 | 978 |
| 30. கால்நடை ஆய்வாளர் (அ) முதல் நிலை | 300—15—420—20—500 | 587 | 450—20—590—25—740—30—800 | 654 |
| | | | 525—25—675—30—855—35—925 (தே. நி.) | 765 |
| (ஆ) இரண்டாம் நிலை | 210—5—245—10—325 | 417 | 350—10—420—15—600 | 479 |
| | | | 450—20—590—25—740—30—800 (முதல் நிலை) | 654 |
| 31. இரண்டாம் நிலை குற்றவியல் நீதிபதி | 425—20—525—25—700 | 752 | 600—30—750—35—890—40—1050 | 860 |
| | | | 675—35—885—45—1200 | 978 |
| 32. உதவிச் செயற் பொறியாளர் | 550—25—600—35—950 | 951 | 750—50—1350 | 1103 |
| | | | 850—50—1200—60—1500 (தே.நி.) | 1233 |
| 33. உதவி அறுவை மருத்துவர் | 525—25—600—30—690—35—900 | 911 | 750—50—1350 | 1103 |
| | 700—40—1100 (தே. நி.) | 1109 | 850—50—1200—60—1500 (தே.நி.) | 1233 |
| 34. கூட்டுறவுச் சங்கத் துணைப் பதிவாளர் | 550—25—600—35—950 | 951 | 750—50—1350 | 1103 |
| | | | 850—50—1200—60—1500 (தே.நி.) | 1233 |
| 35. மாவட்ட வேளாண்மை அலுவலர் | 575—25—600—40—1000 | 995 | 750—50—1350 | 1103 |
| | | | 850—50—1200—60—1500 (தே.நி.) | 1233 |
| 36. கால்நடைத் துறை உதவி இயக்குநர் | 575—25—600—40—1000 | 995 | 750—50—1350 | 1103 |
| | | | 850—50—1200—60—1500 (தே.நி.) | 1233 |

| | | | | |
|---|---|---|---|---|
| 37. துணை மாவட்ட ஆட்சியர் | 575—25—600—40—1000 | 995 | 750—50—1350 | 1103 |
| | | | 850—50—1200—60—1500 (தே.நி.) | 1233 |
| 38. மாவட்ட காவல்துறைத் துணை அதிகாரி | 575—25—600—40—1000 | 995 | 750—50—1350 | 1103 |
| | | | 850—50—1200—60—1500 (தே.நி.) | 1233 |
| 39. மாவட்ட முன்சீஃப் | 575—25—600—40—1000 | 995 | 750—50—1350 | 1103 |
| | | | 850—50—1200—60—1500 (தே. நி.) | 1233 |
| 40. செயற் பொறியாளர்—கோட்டப் பொறியாளர் | 800—40—1000—50—1250 | 1240 | 1000—60—1300—70—1650 | 1397 |
| 41. வேளாண்மைத் துறைத் துணை இயக்குநர் | 800—40—1000—50—1250 | 1240 | 1000—60—1300—70—1650 | 1397 |
| 42. தொழில் துறைத் துணை இயக்குநர் | 800—40—1000—50—1250 | 1240 | 1000—60—1300—70—1650 | 1397 |
| 43. சார்நிலை நீதிபதி | 850—50—1250 | 1268 | 1000—60—1300—70—1650 | 1397 |
| 44. தலைமைச் செயலக சார்புச் செயலாளர் | 750—50—1250 | 1221 | 1000—60—1300—70—1650 | 1397 |
| 45. மாவட்ட வருவாய் அதிகாரி | 1100—50—1500 | 1518 | 1300—75—1900—100—2000 | 1736 |
| 46. வேளாண்மைத் துறை இணை இயக்குநர் | 1100—50—1500 | 1518 | 1300—75—1900—100—2000 | 1736 |
| 47. துணைச் செயலாளர் | 1100—50—1500 அல்லது 750—50—1250 + சிறப்பு ஊதியம் ரூ. 250 | 1518 | 1300—75—1900—100—2000 | 1736 |
| 48. கண்காணிப்புப் பொறியாளர் | 1300—50—1600 | 1662 | 1500—75—1800—100—2100 | 1887 |
| 49. கால்நடைத் துறை இயக்குநர் | 1400—60—1700 | 1765 | 1600—75—1750—100—2250 | 2019 |
| 50. தலைமைச் செயலக இணைச் செயலாளர் | 1500—75—1800 | 1885 | 1600—75—1750—100—2250 | 2019 |
| 51. கருவூலம் மற்றும் கணக்குத் துறை இயக்குநர் | 1400—60—1700 | 1765 | 1600—75—1750—100—2250 | 2019 |
| 52. மாவட்ட நீதிபதி இரண்டாம் நிலை | 1300—50—1400—75—1700—100—2000 | 1901 | 1600—75—1750—100—2250 | 2019 |
| 53. தலைமைப் பொறியாளர் | 1700—100—2000 | 2105 | 2000—125—2500 | 2367 |

| | | | | |
|---|---|---|---|---|
| 54. மருத்துவக் கல்வி—மருத்துவப் பணி—பொது உடல்நலத் துறை இயக்குநர் | 1700—100—2000 | 2105 | 2000—125—2500 | 2367 |
| 55. பள்ளிக் கல்வி—கல்லூரிக் கல்வி —அரசுத் தேர்வுத் துறை இயக்குநர் | 1700—100—2000 | 2105 | 2000—125—2500 | 2367 |
| 56. மாவட்ட நீதிபதி—முதல் நிலை | 2000—125—2250 | 2365 | 2000—125—2500 | 2367 |

## சிறப்பு அம்சங்கள்

தமிழ்நாட்டில் இப்போதுதான் முதன் முறையாக ஊதியக் குழு உயர்நீதி மன்ற நீதிபதி ஒருவரின் தலைமையின்கீழ் அமைக்கப்பட்டது.

மூன்றாவது தமிழ்நாடு ஊதியக் குழு மிக அதிகமான அலுவலர்கள் சங்கங்களுடன் கலந்து உரையாடியது. இவ்வாறு கலந்து ஆலோசித்த சங்கங்களின் எண்ணிக்கை 1,361 ஆகும்.

ஊதியக் குழு அமைக்கப்பட்ட பின் குறுகிய காலத்திலேயே—ஓராண்டுக்குள்ளாகவே—அதன் அறிக்கையை அரசுக்குச் சமர்ப்பித்தது.

ஊதியக் குழுவின் முக்கிய பரிந்துரைகள் 1—4—1978 முதல் செயலுக்கு வரும்.

அதிக அளவு ஊதியத்திற்கும், குறைந்த அளவு ஊதியத்திற்கும் இடையேயுள்ள வீதாச்சாரம் வருமான வரி பிடித்தத்திற்கு முன் 10 : 1 என்றாகவும், வருமான வரி பிடித்தத்திற்குப் பின் சுமார் 8.8 : 1 என்றாகவும் அமைந்துள்ளது. இத்தகைய குறைந்த வீதாச்சார அமைப்பு தமிழ்நாட்டில் இதற்கு முன் இருந்ததில்லை.

தற்போதுள்ள 76 ஊதிய விகிதங்கள், இருபதாக (20 ஆக)க் குறைக்கப்பட்டு, சீரமைக்கப்பட்டுள்ளன.

தற்போது பதவி உயர்வு அல்லது தேர்வு நிலை உயர்வுக்கான வாய்ப்புக்கள் பொதுவாக உயர்நிலைகளில் காலியிடங்கள் ஏற்படுவதைப் பொறுத்தே அமைந்துள்ளன. இனி, பெரும்பாலோர்க்கு, 10 ஆண்டுகள் பணி புரிந்த பின் பதவி உயர்வு அல்லது ஊதிய உயர்வு கிடைக்குமாறு, புதிய முறையில் தேர்வு நிலைப் பதவிகள் ஏற்படுத்துவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் முதன் முறையாக கிராமப்புறங்களில் அரசுச் சார்புள்ள வீடுகளில் வசிக்கும் அலுவலர்களின் ஊதியத்திலிருந்து வீட்டு வாடகைக்காகப் பிடிக்கப்படும் தொகை கணிசமாகக் குறைக்கப்படும். தற்போது எல்லா இடங்களிலும் 10 சதவீதம் ஊதியத்திலிருந்து வீட்டு வாடகையாகப் பிடிக்கப்படுகிறது. இனிமேல் கிராமப் பகுதிகளில் இது 5 சதவீதமாகவே இருக்கும்.

இனிமேல், அகவிலைப்படி, மத்திய அரசு பின்பற்றும் வழிமுறைக்கொப்ப, அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும்.

இம்முடிவுகளினால் சுமார் 7.6 இலட்சம் அலுவலர்கள் பயனடைவார்கள்.



டிரான்ஸ்மிஷன் (மின்விசை) கோபுரங்கள்



இயந்திரக் கருவிகள்



டிராக்டர் இணைப்பு (Trailers) வண்டிகள்



எனமல் பூசிய செம்புக் கம்பிகள்



வீட்டுக்கும், அலுவலகத்துக்கும் ஏற்ற பலவித மேசை. நாற்காலி



பாத அணிகள் மற்றும் அழகு தோல் பொருட்கள்

# தொடர்ந்து சேவை புரியும் டான்சி மேலும் ஒரு வளர்ச்சி ஆண்டை எதிர்நோக்குகிறது!

இன்று டான்சி வளர்ந்து பல்வேறு துறைகளில் விரிவடைந்து 57 தொழிற் கூடங்கள் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 13 கோடிக்கு மேற்பட்ட பொருட்களை உற்பத்தி செய்தும் சேவை அளித்தும் வருகிறது.

கடந்த 12 ஆண்டுகளில், தமிழ்நாட்டின் தொழில்துறை வளர்ச்சிக்காக டான்சி தன்னை அர்ப்பணித்துக்கொண்டு சேவை புரிந்து வருகிறது.

சிறு தொழில்களைத் துவக்குவது, அவற்றின் வளர்ச்சிக்குப் பாடுபடுவது டான்சியின் குறிக்கோள்.

பதனிடப்பட்ட தோல், தோல் பொருட்கள், கதவுச்சட்டங்கள் போன்றவைகளை ஏற்றுமதி செய்து வருகிறது டான்சி.



ரூ. 32 இலட்சம் மதிப்புள்ள கிரானைட் கற்களை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்தது இந்த ஆண்டில் ஒரு பெரும் சாதனையாகும்.

தனக்கும், மாநிலத்துக்கும், நாட்டுக்கும் மேலும் ஒரு வளர்ச்சி ஆண்டை டான்சி எதிர்நோக்குகிறது. ஒவ்வொரு ஆண்டும் மேலும் வளர்ச்சி பெற்று, சேவை புரிய பாடுபடுகிறது

**டான்சி**

## தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்

1, ஒயிட்ஸ் ரோடு, சென்னை-600 014

# புதிய ரக வெண்டை

## எம்.டி.யூ. 1



டாக்டர் பி. வி. மாரப்பன்,
வேளாண்மைக் கல்லூரி,
மதுரை.

**வயது :**

காய்க்கு 75 நாட்கள், விதைக்கு 90 நாட்கள்.

**பருவம் :**

எல்லாப் பருவத்திலும் பயிரிட ஏற்றது.

**நிலத்தைத் தயார் செய்தல் :**

நிலத்தை இரண்டு அல்லது மூன்று முறை இரும்புக் கலப்பையால் நன்கு உழுது பண்படுத்த வேண்டும்.

**உரமும் உரமிடுதலும் :**

**அடியுரம் :**

ஒரு எக்டேருக்கு 24 டன் (50 வண்டி) கம்போஸ்ட் அல்லது தொழு உரத்துடன், 45 கிலோ தழைச்சத்து, 60 கிலோ மணிச் சத்து, 30 கிலோ சாம்பல் சத்து போடவும்.

**மேலுரம் :**

விதைத்த 30 நாட்களுக்குப் பிறகு தழைச்சத்து எக்டேருக்கு 45 கிலோ போட வேண்டும்.

**பார் விரித்தல் :**

அடியுரம் இட்ட பின்பு 45 செ. மீ. இடைவெளியில் பார்கள் போட வேண்டும்.

**விதை அளவு :**

எக்டருக்கு 7.5 கிலோ விதை போதுமானது.

**விதை நேர்த்தி :**

விதைக்கு முன்பு ஒரு கிலோ விதையுடன் 2 கிராம் கரி/பாத ரச மருந்து (அக்ரசான் அல்லது செரசான்) அல்லது 4 கிராம் டி. எம். டி. டி. அல்லது 4கிராம் கேப்டான் என்ற மருந்து கலக்க வேண்டும்.

**இடைவெளி :**

பாரில் செடிக்குச் செடி 20 செ. மீ. இடைவெளி இருத்தல் அவசியம்.

**விதைப்பு :**

பாரின் பக்கவாட்டில் ஒரு குழிக்கு இரண்டு விதைகள் வீதம் விதைக்க வேண்டும்.

**பின்செய் நேர்த்தி :**

விதைத்த 15வது நாளில், குழிக்கு ஒரு செடி வீதம் விட்டு பயிர் கலைத்தல் வேண்டும். பிறகு 20வது நாளில் களை எடுக்க வேண்டும். பின்பு 30வது நாளில் மேலுரம் இட்டு மண் அணைத்தல் வேண்டும்.

**நீர்ப்பாசனம் :**

விதைத்தவுடன் உடனே நீர் பாய்ச்சுதல் வேண்டும். பிறகு மூன்றாவது நாளில் உயிர்த் தண்ணீர் கொடுக்க வேண்டும். அடுத்து மண்ணின் ஈரத்தைப் பொறுத்து 8-10 நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் பாய்ச்சுதல் வேண்டும். அதாவது மண்ணின் ஈரத்தன்மை 60-70 சதவீதம் இருக்கும்படியாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

**பயிர்ப்பாதுகாப்பு பூச்சிகள் :**

விதைத்த 15-வது நாளில் மெட்டாசிஸ்டாக்ஸ் 0.025 சத வீதம் (250 மி.லி. எக்டேருக்கு) தெளிக்க வேண்டும். பின்பு விதைத்த 30-வது நாளிலும், 50 வது நாளிலும் கார்பரில் 0.1 சதவீதம் (1 கிலோ மருந்தை 500 லிட்டர் தண்ணீரில் எக் டேருக்கு) தெளிக்க வேண்டும்.

**நோய்கள் (சாம்பல் நோய்) :**

கரையும் கந்தகம் (0.5 சத வீதம்) 2.5 கிலோ எக்டேருக்கு தெளிக்க வேண்டும். அல்லது கந்தகத் தூள் 20-25 கிலோ எக்டருக்குத் தூவ வேண்டும்.

**அறுவடை காய்களுக்கு :**

காய்கள் அறுவடைக்கு விதைத்த 43-வது நாளில் கிடைப்பதுடன், தொடர்ச்சியாக 75-வது நாள் வரை ஒரு நாள் விட்டு ஒரு நாள் அறுவடைக்குக் கிடைக்கும்.

**விதைக்கு :**

விதைக்காகச் சில காய்களைச் செடியில் விட்டுவிட வேண்டும். பின்பு, முற்றிய காய் நெற்றுக் களை வெடிப்பதற்கு முன் பறித்து விடுதல் வேண்டும்.

## குடும்பநலத் திட்டத்திற்கு நார்வே ரூ. 20 கோடி உதவி

நார்வே நாடு! இந்தியாவின் குடும்பநலத் திட்ட மேம்பாட்டிற்காக ரூ. 20 கோடி மானியமாக வழங்கியிருக்கிறது. இதன் மூலம் நாடு முழுமையிலும் 500 உட்கோட்ட மருத்துவமனைகள் (Sub-divisional Hospitals) அமைக்கப் படும். ஒவ்வொரு மருத்துவ மனையும் அறுவைச் சிகிச்சை வசதிகளோடு அமைக்கப்படும்.

இந்தத் தகவலை இந்திய அரசின் நல்வாழ்வு குடும்பநலத் துறை ராஜாங்க அமைச்சர் திரு. ஜகதாம்பி பிரசாத்யாதவ் அவர்கள் தெரிவித்தார். மேலும் மத்திய மாநில அரசுகளைச் சார்ந்த அமைச்சகங்கள் அனைத்தும் ஒருங்கிணைந்து பணியாற்றுவதன் மூலம் குடும்பநலத் திட்டத்தை வெற்றி பெறச் செய்ய முடியுமென்றும், புதிய திருமணத் தம்பதிகளுக்குக் குடும்பநலத் திட்ட விளம்பரங்க ளடங்கிய வெளியீடுகள் தரப்பட வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார். இன்னும் 20 ஆண்டுகளில் இந்தியாவினுடைய மக்கள் தொகை ஆயிரம் மில்லியனுக்கும் மேலாக உயரக்கூடும் என்றும் சொன்னார்.

# கோ. 22 சோளம் சாகுபடிக் குறிப்புகள்



**பருவம் :**

| | |
|---|---|
| மானாவாரி: | ஆடி-ஆவணி, புரட்டாசி |
| பாசனப்பயிர்: | 1. தைப்பட்டம் |
| | 2. மாசிப்பட்டம் |
| | 3. சித்திரைப் பட்டம். |

**வயது** ... 85-100 நாட்கள்

**விதையளவு** ... எக்டேருக்கு 10 கிலோ விதையை கிலோவுக்கு 2.5 கிராம் கேப்டான் அல்லது 4 கிராம் தைரம் மருந்துடன் கலந்து விதைக்கவும்.

**விதைப்பு** ... வரிசைக்கு வரிசை 45 செ. மீ. வரிசையிலும் 15 செ.மீ.

**உரஅளவு (எக்டருக்கு)**

| | | பாசனப் பயிர் | மானாவாரி பயிர் |
|---|---|---|---|
| **அடியுரம் :** | | | |
| தொழு உரம் | ... | 25 (டன்) | 10 (டன்) |
| தழைச்சத்து | | 45 (கிலோ) | 40 (கிலோ) |
| சாம்பல்சத்து | ... | 45 (கிலோ) | 20 (கிலோ) |
| மணிச்சத்து | ... | 45 (கிலோ) | ... |
| **மேலுரம் :** | | | |
| தழைச்சத்து | ... | 45 (கிலோ) | |

**பின்செய் நேர்த்தி :**

விதைத்த 20-ஆம் நாளில் செடிகளைக் கலைத்து, களை எடுக்க வேண்டும். பாசனப் பயிருக்கு 30-ஆம் நாளில் மேலுரம் இடவேண்டும். 7 முதல் 10 நாட்களுக்கு ஒருமுறை நீர் பாய்ச்சுதல் அவசியம்.

**பயிர்ப் பாதுகாப்பு :**

சோளப் பயிரைத் தாக்கும் பல்வகைப் பூச்சிகளில் குருத்து ஈ, தண்டுப்புழு, மிட்ஜ் ஈ, நாவாய்ப்பூச்சி முதலியவை முக்கியமானவையாகும். சிற்சில சமயங்களில் அசுவிணி, பயிர்ச்சிலந்தி முதலியவை அதிக சேதத்தை விளைவிக்கும். கீழ்க்காணும் முறைகளை மேற்கொள்வதன் மூலம் இப்பூச்சிகளினுலும் ஏற்படும் சேதத்தைக் கட்டுப்படுத்தலாம்.

## இறவைச் சோளம் :

**குருத்து ஈ :**

கார்ஃபோயூரான் 3 சதம் அல்லது திமெட் 10 சதம் குருணை மருந்துகளில் ஏதாவது ஒன்றை எக்டேருக்கு முறையே 30, 15 கிலோ அளவில் விதைக்கு முன் சாலில் (மண்ணில்) இடவேண்டும்.

**தண்டுப் புழு :**

கார்போஃயுரான் 3 சதம் அல்லது செவிடால் 4 சதம் குருணை மருந்துகளில் ஒன்றை பயிர் முளைத்த 25, 35-ம் நாளில் எக்டேருக்கு முறையே 5 மற்றும் 7.5 கிலோ அளவில் இலைக் குருத்தில் இடவேண்டும்.

**கதிர் கொசு, நாவாய்ப் பூச்சி முதலியன :**

50 சதம் கதிர் வெளித் தோன்றியவுடன் ஒருமுறையும், ஒருவார இடைவெளியில் மறுமுறையும் கீழ்க் கூறிய பூச்சிக் கொல்லிகளில் ஏதாவது ஒன்றை 500 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவும். செவின் கரையும் தூள் 1 கிலோ (அ) எண்டோசல்பான் 500 மி.லி. (அ) லெப்டோபான் 500 மி.லி. அல்லது மாலதியான் 4 சதம் தூள் (அ) செவின் 10 சதம் தூள் (அ) பி.எச்.சி. சதத்தூள் (15 முதல் 20 கிலோ/எக்டேருக்கு) தூவ வேண்டும்.

## மானாவாரிச் சோளம் :

குருத்து ஈ, தண்டுப்புழு முதலியன வற்றை இறவைச் சோளத்திற்குக் கூறிய குருணை மருந்துகளை உபயோகித்துக் கட்டுப்படுத்தலாம். கதிரைத் தாக்கும் பூச்சிகளின் சேதத்தை, தூவும், மருந்துகளில் ஏதாவது ஒன்றினை மட்டும் தூவிக் கட்டுப்படுத்த வேண்டும்.

**நோய் :**

ஜூன்-ஜூலை மாதத்தில் விதைத்த இறவைப் பயிரில் டைத்தேன் இஜட். 78 என்ற மருந்தை ஒரு லிட்டர் நீருக்கு 2 கிராம் மருந்து என்ற அளவில் கலந்து பயிர் முளைத்த 30, 45-ஆம் நாட்களில் தெளிப்பதின் மூலம் சோளப் பயிரின் முக்கிய நோய்களைக் கட்டுப்படுத்தலாம்.

தகவல்:

**எம். என். பிரசாத்,**
**எஸ். பழனிச்சாமி,**
**பயிரியல் துறை,**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,**
**கோவை-3.**

# தொலை தூரப் போக்குவரத்துக்கு ஏற்ற புதிய தக்காளி



தக்காளி தமிழ்நாட்டில் சுமார் 4280 எக்டேர் நிலப்பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது. கோ. 1, கோ. 2 எனும் வகைகள் தமிழ்நாட்டில் பயிரிடப் பரிந்துரைக்கப்படும் முக்கிய தக்காளி வகைகளாகும். மதுரை, இராமநாதபுரம் போன்ற தென் மாவட்டங்களில், சென்னை, திருச்சிராப்பள்ளி போன்ற தொலைதூர இடங்களுக்கு லாரிகளில் அனுப்ப ஏற்றதான அன்னஞ்சி எனும் ஒரு வகையைப் பயிரிட்டு வருகின்றனர். ஆனால் இவ்வகை மிகவும் உயரமாக (61 செ மீ.) வளரக்கூடியது. இதன் காய்கள் சில போது விரிந்த கைபோன்று வடிவமற்றுக் காணப்படும். இது ஒரு எக்டருக்கு 24 டன் தான் மகசூல் தரும்.

இவ்வகைக் குறைபாடுகளை அகற்றி அதிக அளவில் மகசூல் தரும் தன்மையும், அன்னஞ்சி வகையிலுள்ள நற்பண்புகளும் ஒருங்கே அமையப் பெற்ற ஒரு வகையைத் தேர்ந்தெடுக்கும் பயிர் சிறப்பிப்பு ஆராய்ச்சி, 1971-ஆம் ஆண்டு, பெரியகுளம் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அன்னஞ்சி தக்காளி விதைகளை காமா கதிர்வீச்சுக்கு உட்படுத்தி திடீர் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. அம் முயற்சியில் விளைந்ததே இவ்வாண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் பொங்கல் பரிசாக வெளியிட்ட பி. கே. எம். 1 எனும் தக்காளி வகையாகும்.

**பிகே.எம். 1. தக்காளி வகையின் பண்புகள் :**

| | | |
|---|---|---|
| மகசூல் | ... | ஒரு எக்டருக்கு 32 டன் |
| உயரம் | ... | 45 செ. மீ. |
| வளர்ச்சி | ... | குள்ளமானது |
| வயது | ... | 135 நாட்கள் |

பழப் பண்புகள் :

வடிவம்: தட்டையானது. மெல்லிய குழிவுகளைக் கொண்டது.

ஒரு பழத்தின் எடை—55.2 கிராம்.

பழத்தின் பருமன்—3, 4.6 செ. மீ.

ஒரு கொத்தில் காணப்படும் காய்களின் எண்ணிக்கை : 4 அல்லது 5.

ஒரு செடியில் காய்ப்பது—30 (1650 கிராம்)

சுவை நீர்—71.6 சதவிகிதம்.

மொத்தக் கரையும் திண்மப்பொருள்—3.6.

அமிலம்—0.99 சதவிகிதம்.

வைட்டமின் 'சி'—23.7 மி. கிராம். (100 கிராம் பழப்பகுதியில்)

சுவை—அமிலத் தன்மை நிறைந்தது.

சமைத்த பின்னுல் பழத்தின் தன்மை—கெட்டியானது.

தொலைதூர இடங்களுக்கு அனுப்புவதற்கு—மிகவும் ஏற்றது.

விதைத்தலிருந்து முதல் அறுவடை எடுப்பதற்குத் தேவையான நாட்கள்—95.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட பிகே.எம். 1 வகையையும், அன்னஞ்சி வகையையும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் வட்டார ஆராய்ச்சிப் பண்ணைகளிலும், பெரியகுளம் நகரைச் சுற்றியுள்ள ஊர்களிலுள்ள விவசாயிகளின் தோட்டங்களிலும் நட்டு, விளைவுச் சோதனைகள் நடத்தப்பட்டன. பிகே.எம். 1 தக்காளி வகை எக்டேருக்கு 32 டன்னும், அன்னஞ்சி வகை எக்டருக்கு 24 டன்னும் மகசூல் கொடுத்தன. எனவே பிகேஎம். 1 தக்காளி பயிரிடுவதன் மூலம் ஒரு



எக்டருக்கு ரூ. 4,000 அதிக லாபம் விவசாயிகளுக்குக் கிடைக்கிறது.

**பிகே.எம். 1. தக்காளிக்குரிய கட்டுக்கோப்பு சாகுபடி முறைகள் :**

பருவம்—ஜூன்-அக்டோபர்; நவம்பர்-மார்ச்சு

விதைஅளவு—ஒரு எக்டருக்கு 500 கிராம்.

இடைவெளி—பாருக்குப் பார்: 60 செ. மீ.
செடிக்குச் செடி: 30 செ. மீ.

**உரஅளவு (ஒரு எக்டருக்கு)**



| அடியுரம் | மேலுரம் (நட்டபின் 30 நாட்கள் கழித்து) |
|---|---|
| சாணி உரம் 25 டன் | ... |
| அமோனியம் சல்பேட் 375 கி.கிராம். | 375 கி.கிராம். |
| சூப்பர் பாஸ்பேட் 625 கி.கிராம். | ... |
| மூரியேட் ஆப்பொட்டாஷ் | 85 கி.கிராம். |

**தோட்டத் தயாரிப்பு, நீர் பாய்ச்சுதல், களையெடுப்பு :**

மற்ற தக்காளிப் பயிருக்கு அனுசரிப்பது போல் நிறைவேற்றவும்.

**பயிர்ப்பாதுகாப்பு**

**நாற்றங்கால் :**

ஒரு கிராம் கரையும் செரசான் மருந்தை ஒரு லிட்டர் நீரில் கலந்து, விதைத்த 15 நாட்களுக்குப் பின்னர், நாற்றங்காலில் தெளித்தால், நாற்றங்கால் நோய்களிலிருந்து பாதுகாப்பு கிடைக்கும்.

**தோட்டம் :**

1. செடி நட்ட ஏழாவது நாளில் டெமிக் (அஸ்டிக்கார்ப்) குருணைகள் ஒரு எக்டேருக்கு 10 கிலோ கிராம் வீதம் இடவும். இம்மருந்து நூற்புழுக்கள் செடிகளைத் தாக்காமல் இருக்கப் பயன்படும்.

(2) செடி நட்ட 30-வது நாளில் 25 கிராம் டைதேன் எம். 45 மருந்தை, 10 லிட்டர் தண்ணீரில் கரைத்துத் தெளிக்கவும். இம்மருந்து தக்காளிச் செடிகளை நோயிலிருந்து பாதுகாக்க உதவும்.

(3) செடி நட்ட 45, 60வது நாட்களில் 25 கிராம் டைத்தேன் எம். 45 மருந்தையும், 20 மில்லி லிட்டர் தையோடான் மருந்தையும் 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். இம்மருந்து பூச்சி நோய்களிலிருந்து, தக்காளிச் செடியைப் பாதுகாக்க உதவும்.

## கூட்டுறவியக்கத்தின் இணையற்ற முன்னேற்றம்: ஓர் கண்ணோட்டம்.

கூட்டுறவியக்கம் சுமார் 74 ஆண்டுகளாக, தமிழ்நாட்டில் இயங்கி வருகிறது. ஆண்டுக்கு ஆண்டு இது மேம்பாடு அடைந்து, இந்த இயக்கத்தின் வளர்ச்சி ஏழை எளியவர்களின் மலர்ச்சி என்ற அளவுக்கு முன்னேறியுள்ளது. எடுத்துக்காட்டாக, மார்ச் திங்கள் முடியும் 1977-78 நிதி ஆண்டில், பட்டிதொட்டிகளிலெல்லாம் இயக்கம் பரவி, தமிழ்நாட்டிலுள்ள சுமார் 45.63 இலட்சம் விவசாயக் குடும்பங்களில் 38.72 இலட்சம் குடும்பங்களைக் கூட்டுறவின் குடைக்கீழ் கொண்டு வந்து அவர்களது வாழ்வை வளமாக்கி உதவியுள்ளது.

சங்கங்களில் சேர்ந்து பயன்பெற்ற விவசாயக் குடும்பங்களில் 22.83 இலட்சம் குடும்பங்கள் பின்தங்கிய, எளிய பிரிவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த ஆண்டில் கொடுத்த குறுகிய, மத்திய காலக் கடன் உதவி, ரூ. 127 கோடி. முந்திய ஆண்டில் ரூ. 125 கோடிதான் கொடுக்கப்பட்டது. இனிவரும் ஆண்டில் ரூ. 145 கோடி வரை அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நிலவள வங்கிகள் மூலம் 1977-78-ஆம் ஆண்டில் ரூ. 12.28 கோடி நீண்டகாலக் கடன்கள் அளிக்கப்பட்டன.

887 கூட்டுறவுச் சங்கங்களும், கூட்டுறவு மத்திய வங்கிகள், மாநில வங்கி ஆகியவைகளின் 331 கிளை அலுவலகங்களும் நலிந்தோர்க்கு நகைக்கடன் வழங்கும் பணியில் ஈடுபட்டு 1977-78-ஆம் ஆண்டில் ரூ. 50.77 கோடியை வழங்கின. வரும் ஆண்டில் ரூ. 70 கோடி நகைக்கடன் அளிக்க அவை திட்டமிட்டுள்ளன.

விவசாயிகளுக்கு ரூ. 56.34 கோடிக்கு கூட்டுறவுச் சங்கங்கள் இரசாயன உரம் வழங்கி உதவின. தவிர ரூ. 53.44 கோடி பெறுமான விளைபொருளை விற்றுத் தந்தன.

நுகர்பொருள் தேவைகளை வழங்குவது, கட்டுப்பாட்டுத் துணி விற்பனை, தொழில் வளர்ச்சி, மலைவாழ் மக்களுக்கு உதவுவது, மாணவர்களின் பாடப்புத்தகங்கள் முதலிய தேவையினை வழங்குவது, கல்லூரிகளில் பொதுச் சமையல்கூடங்கள் அமைத்தல் முதலிய பல்வேறு துறைகளிலும், ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள், முடிதிருத்துவோர், துணிவெளுப்போர் போன்றோரின் மேம்பாட்டிலும், கூட்டுறவு முயற்சி தமிழகத்தில் நல்ல முன்னேற்றம் அடைந்து வருகிறது.

# நவீன. பல பயனுள்ள விவசாய சாதனம்



பல ஆண்டுகளாகத் தமிழ்நாட்டின் சில பகுதிகளில் வரிசை விதைப்பிற்குக் கொரு என்னும் கலப்பை உபயோகத்திலுள்ளது. அக்கருவியின் மூலம் விதைப்பு மட்டும் செய்யலாம். உழுவதற்கோ, உரமிடுவதற்கோ, விதைத்த விதையை மூடுவதற்கோ இதர கருவிகளைத்தான் உபயோகிக்க வேண்டும். இந்தக் கொரு மூலம் நாள் ஒன்றுக்கு 2 முதல் 3 ஏக்கர் வரை விதைக்க முடியும். ஆனால், இதர வேலைகளுக்கு இக்கருவி பயன்படாது. மேலும், இக்கருவி உபயோகிக்கும்பொழுது உரமிடல் இயலாது. விதையை மூடுவதற்கும் தனியான ஏற்பாடு செய்ய வேண்டும். இதனால் செலவு அதிகமாகும். விதைப்பதற்கு மற்றொரு சாதாரண கருவி நாட்டுக் கலப்பையாகும். இதன் மூலம் நாள் ஒன்றுக்கு 60 செண்ட் முதல் ஒரு ஏக்கர் விதைக்க முடியும். இதனாலும் ஏக்கர் செலவு அதிகமாகும்.

மேற்கூறிய இடர்ப்பாடுகளைத் தவிர்க்க வேளாண்மைத் துறையில் ஒரு நவீன பல பயனுள்ள விவசாய சாதனத்தை உருவாக்கப்பட்டுள்ளது. இக்கருவியின் மூலம் நாள் ஒன்றுக்குச் சுமார் 6 ஏக்கர் வரை விதைக்க முடியும். இதர வேலைகளையும் மேற்கொள்ள முடியும். இதன் விலை தற்சமயம் ரூ. 600 ஆக உள்ளது. அதிக அளவில் தயாரிக்கும்பொழுது இதன் விலை குறைய வாய்ப்புள்ளது. இக்கருவியின் மூலம் உழுதல், உயர்ந்த மேட்டுப் பாத்திகள் அமைத்தல், வரிசையாக விதைத்தல், ஊடு பயிர் விதைத்தல். இரசாயன உரமிடல், விதைத்த விதையை மூடுதல், இடை உழவு செய்து களை எடுத்தல் ஆகியவைகளை மேற்கொள்ளலாம். ஒரே சமயத்தில் வரிசையில் மானாவாரியில் பருத்தி, கடலை, சோளம், கம்பு, பயறு வகைகள் ஆகியவைகள் விதைத்தல். இரசாயன உரமிடல் விதைத்த விதையை மூடுதல் ஆகிய வேலைகளை மேற்கொள்ளலாம். இக்கருவி வேலை செய்யும் விவரம் விளக்கமாகக் கீழே தரப்பட்டுள்ளது:

**1. உழவு செய்தல் :**

உழவு செய்யும் பொழுது இக்கருவியின் முக்கிய பாகத்துடன் பால் பேரிங்குள்ள 2 இரும்பு சக்கரங்கள் 7 மேழூர் கலப்பைகள் மட்டும் இருக்கும். இதனால் இக்கருவியின் எடை குறைவாகவே இருக்கும், பூமி நன்கு பக்குவமாக இருக்கும் பொழுது உழவு செய்வதற்கு இக்கருவி மிகவும் பயன்படும். நாள் ஒன்றுக்கு 6 ஏக்கர் வரை உழவு செய்யலாம். இதனால் ஏக்கர் உழவுச் செலவு மிகக் குறைவு.

**2. மேட்டுப்பாத்திகள் அமைத்தல் :**

மேட்டுப்பாத்திகள் அமைக்கும் பொழுது இக்கருவியின் முக்கிய பாகத்துடன் (கலப்பையின்றி) இரு பக்கங்களில் இரு சால் எடுக்கும் (Ridge Plough) கருவிகளும் இவற்றிற்கு இடையில் மண்ணை மட்டப்படுத்தும் இரும்புத் தகடும் இருக்கும். இக்கருவியை உபயோகிக்கும்பொழுது 120 செ. மீ. அகலமுள்ள 6'' உயரமுள்ள மேட்டுப்பாத்திகள் அமைக்க முடியும். இம்முறையில் குறைந்த அளவு மழையில் கிடைக்கும் நீரை சேமிக்க முடியும். அதிக மழை கிடைக்கும்பொழுது நீரை வடிக்கவும் இம்முறையில் எடுக்கப்படும் கால்கள் (Furrows) உபயோகப்படும். மானாவாரியில் குறைந்த மழை கிடைக்கும் பகுதிகளில் வெற்றிகரமாகப் பயிரிட இம்முறையால் முடியும்.

**3. விதைத்தல் :**

இப்புதிய கருவியால் பருத்தி, கடலை, சோளம், கம்பு, பயறு வகைகள் வரிசையாக விதைக்க முடிவும். மேலும், விதைகளை ஒரே ஆழத்தில் விதைக்க முடியும். ஈரம் இருக்கும் இடத்தில் விதைகளை விதைக்க முடியும். விதைக்கும் சமயத்தில் இக்கருவியில் 7 மேழூர் கலப்பைகள், விதை போடும் கருவிகள், உரமிடும் கருவிகள், விதை மூலம் தகடு ஆகியவை இணைக்கப்பட்டிருக்கும். இச்சமயத்தில்தான் இக்கருவியின் எடை சிறிது அதிகமாக இருக்கும். ஆயினும் ஒரு நாளில் 5 முதல் 6 ஏக்கர் வரை விதைப்பு செய்யலாம். ஓரிரு நாட்களில் கிடைக்கும் மழையைக்கொண்டு விரைவில் மானாவாரியில் விவசாயிகள் தங்களுடைய விதைப்பு வேலையை முடித்துக் கொள்ளலாம். ஆனால், நாட்டுக் கலப்பைக் கொண்டு விதைக்க பல தடவை மழையை எதிர்நோக்க வேண்டியுள்ளது. மேலும், இக்கருவியில் விதைக்கும்பொழுது விதைகள் ஒரே மட்டத்தில் விழுவதால் பழுதின்றி நல்ல முளைப்புத்திறன் கிடைக்கும். வறட்சிக்காலத்திலும் பயிர் வேர்கள் ஆழத்தில் இருப்பதால் வறட்சியைத் தாங்கி நல்ல மகசூல் கொடுக்கும். இடை உழவு மூலம் பயிர்களுக்கு மண் அணைத்து ஈரத்தைக் காக்கலாம்.

**4. உரமிடல் :**

விதைக்கும் சமயத்திலேயே இக்கருவியில் இரசாயன உரமிட ஒரு பெட்டியுடன் குழாய் அமைப்புகள் உள்ளன. இதன் மூலம் விதைக்கும் பொழுதே இரசாயன உரங்களை மானாவாரிப் பயிர்களுக்குச் சிக்கனமாக வீணாகாமல் பயிர்களின் வேர் பாகத்தில் கிடைக்கும்படி உரமிடலாம்.

**5. விதை மூடுதல்**

விதைத்த விதைகளையும் இட்ட உரத்தையும் உடன் மூடுவதற்கு இக்கருவியின் பின்பாகத்தில் ஒரு இரும்புத்தகடு அமைக்கப்பட்டுள்ளது. இத்தகட்டினால் விதையையும் உரத்தையும் மூடி விடுவதோடு மண்ணைச் சிறிது அழுத்திக் கொடுக்கவும் முடிகிறது. இதனால் ஈரம் பாதுகாக்கப்பட்டுப் பயிர் நன்கு முளைக்கிறது. பயிர் எண்ணிக்கையும் தேவையான அளவு பெறப்படுகிறது.

**6. இடை உழவு செய்தல் :**

இக்கருவியின் மூலம் விதைக்கப்பட்ட பயிர்களில் களை எடுக்கும் சாதனங்களை இணைத்து களை எடுத்து மண்ணைக் கிளறி விடலாம். இச்சமயத்தில் இக்கருவியின் முக்கிய பாகத்துடன் (கலப்பை, விதைப்பு, உரமிடல், கால் எடுக்கும் சாதனம், விதை மூடும் தகடு இன்றி) களை எடுக்கும் தகடுகள் மட்டும் இணைக்கப்பட்டிருக்கும். பயிர் வரிசைகளுக்கு இடையில் களை எடுத்து மண்ணைக கிளறி விடலாம். இதனால் செலவு மிகக் குறைவு.

இக்கருவி ஒரு ஜோடி மாடுகளாலேயே உபயோகிக்கப்படுகிறது. நிலங்களுக்கு எடுத்துச்

# தேசிய சிறுசேமிப்பில் தமிழ்நாடு முன்னணி!

தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் தேசிய சிறுசேமிப்பு இயக்கம் மாபெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக மொத்த சேமிப்பு சீராக முன்னேற்றம் அடைந்து, ரூபாய் 125 கோடியை எட்டியுள்ளது.

நாட்டின் மொத்த சேமிப்பு ரூபாய் 1941 கோடி. 1977-78 ஆண்டுக் காலத்தில் தமிழ்நாடு, பாண்டிச்சேரி நிகர சேமிப்பு ரூபாய் 34 கோடியாகும். இதே ஆண்டில் நாடு முழுவதும் நிகர சேமிப்பு ரூபாய் 466 கோடியாகும்.

பல திட்டங்களில் தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது. சம்பள சேமிப்புத் திட்டத்தில் 1977-78ஆம் ஆண்டுக் காலத்தில் 10,50,000 ஊழியர்கள் சேர்ந்து உள்ளனர். நாடு முழுவதும் இத்திட்டத்தில் சேமிப்பு எண்ணிக்கை 63 இலட்சம் ஆகும்.

மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவியர் பங்கேற்கும் சஞ்சாய்கா—அஞ்சல் நிலைய சேமிப்புத் திட்டத்தில் சுமார் 10 இலட்சம் குழந்தைகள் கடந்த ஆண்டு ரூபாய் 16 இலட்சத்திற்கும் அதிகமாகச் சேமித்துள்ளனர்.

நாடு முழுவதும் இத்திட்டத்தில் சேர்ந்துள்ள குழந்தைகளின் எண்ணிக்கை 70 இலட்சம்தான். மகளிர் ஏஜென்சி திட்டத்திலும் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. நாடு முழுவதும் ஈட்டும் 14 ஆயிரம் பேர் கொண்ட இத்திட்டத்தில் தமிழ்நாட்டில் மட்டும் 3,500 ஏஜெண்டுகள் உள்ளனர்.

தமிழ்நாட்டில் மொத்தம் 10,000 ஏஜெண்டுகள் உள்ளனர். அவர்களில் பாதிப்பேர் தங்களுடைய முக்கிய வருமானம் தொழிலாக இதைச் செய்து முறையாகக் கமிஷன் சம்பாதித்து வருகின்றனர்.

தஞ்சை மாவட்டம், திருவையாறு பிளாக்கில் அக்டோபர் 2-வது வாரத்தில் தீவிர பிரச்சாரப் பணி மேற்கொள்ளப்படும். தேசிய சிறுசேமிப்பு இயக்கத்தில் ஏராளமான பேர் பங்கேற்கும் நோக்கத்துடன் இது மேற்கொள்ளப்படவிருக்கிறது. இதுபோன்ற இயக்கங்களைத் திருச்சி மாவட்டம் மணச்சநல்லூர் வட்டாரம், மதுரை மாவட்டம் பெரியகுளம் வட்டாரம், செங்கற்பட்டு மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் ஆகிய இடங்களில் அடுத்த ஆண்டு ஜனவரிக்குப்பின் மேற்கொள்ளப்படும்.



செல்லும்பொழுது இக்கருவியில் எல்லாச் சாதனங்களையும் பொருத்தி மாடுகள் மூலம் இழுத்துச் செல்லலாம். வேறு வண்டியோ பிற வாகனமோ தேவையில்லை.

7. இரண்டு வரிசைப் பயிர்களுக்கு இடையில் ஒரே சமயத்தில் ஊடு பயிராக இதர பயிர்களை விதைக்க முடியும். உதாரணம்: பருத்தியில் உளுந்து.

8. குறைந்த செலவில் களை எடுக்க இடை உழவு செய்து களை எடுத்து மண்ணைக் கிளறி விட்டு ஈரத்தைக் காக்க முடியும்.

9. பூமி பக்குவமாக இருப்பின் 7 கலப்பை கொண்டு ஒரு ஜோடி மாடுகள் மூலம் நாள் ஒன்றுக்கு 6 ஏக்கர் வரை உழவு செய்ய முடியும்.

10. வேலையாட்கள் பற்றாக் குறையைச் சமாளிக்க இக்கருவி மூலம் பல உழவியல் முறைகளை மேற்கொள்ளலாம்.

ஆகவே, இக்கருவி சிறிய விவசாயிகளுக்கு ஒரு இயந்திரக் கலப்பை (Poo.man's Tractor) எனக் கொள்ளலாம். இக்கருவி பல ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் மானிய விலையில் வழங்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**இப்புதிய கருவியின் பயன்கள்:**

1. மானாவாரி சாகுபடியில் நாட்டுக் கலப்பை கொண்டு விதைப்பதைவிட சுமார் 5-ல் ஒரு பங்கு செலவில் விதைக்க முடியும். அதனால் குறுகிய காலத்தில் அதிகப் பரப்பளவு விதைக்க முடியும்.

2. குறைந்த அளவு மழையைக் கொண்டே அதிகப் பரப்பளவில் விதைப்பு விரைவில் முடிக்க முடியும்.

3. இரசாயன உரங்களைத் தேவையான அளவில் வேர் பாகத்தில் இட முடியும்.

4. குறிப்பிட்ட ஆழத்தில் விதைகளை விதைத்து நல்ல முளைப்புத் திறனும் குறிப்பிட்ட பயிர் எண்ணிக்கையும் பெற்று அதிக மகசூல் பெற முடியும்.

5. மானாவாரியில் நீர்சேமிப்பு செய்ய மேட்டுப்பாத்தியும் வடிகால்களும் அமைக்க முடியும்.

6. பயிர்களைக் குறிப்பிட்ட இடைவெளியில் வரிசையாக விதைக்க இயலும்.



## தமிழ் நாட்டில் வனவிலங்குச்
# சரணாலயங்கள்

—மஹமது ஹுசைன்
தலைமை
வனவிலங்குப் பாதுகாப்பாளர்

இயற்கை வளத்தின் சில முக்கிய அம்சங்களில் நம் தமிழ் நாடு சற்றேனும் பின் தங்கவில்லை. நமது வன விலங்கு மற்றும் பறவைச் சரணாலயங்களில் இயற்கை அன்னை எழிலின் சிகரத்தை எட்டி கம்பீரத் தோற்றத்துடன் கொலுவீற்றிருப்பதைக் கண்கூடாகப் பார்க்கலாம்.

மக்கள் தொகைப் பெருக்கத்தாலும் மற்றும் பல்வேறு காரணங்களாலும் சுருங்கிக்கொண்டே சென்றது வனச் செல்வம். அதைப் பாதுகாத்து வனவிலங்குகளையும், பறவைகளையும் தீங்கு நேராமல் காப்பாற்றி, எதேச்சையாகச் சுற்றித் திரிய வசதியளிப்பதே வன விலங்குச் சரணாலயங்களின் நோக்கம். தமிழக அரசு பிரகடனப்படுத்தியுள்ள சரணாலயங்கள் ஏழு. அவை:

**1. முதுமலை வனவிலங்குச் சரணாலயம்:**

இச்சரணாலயம் எழில்மிகு நீலகிரி மாவட்டத்தில் உள்ளது. உதகையிலிருந்து மைசூர் செல்லும் வழியில் அமைந்துள்ளது. இந்தச் சரணாலயத்திற்குச் செல்ல உதகையிலிருந்தும், மைசூரிலிருந்தும் பேருந்து வசதிகள் உள்ளன. இச்சரணாலயத்தின் மொத்தப் பரப்பளவு 320-68 சதுர கிலோ மீட்டர்.

இந்தச் சரணாலயத்தில் மிக அதிக அளவில் யானைகளும், காட்டெருமைகளும், புள்ளி மான்களும், கூட்டங் கூட்டமாகச் செல்வதைக் காணலாம். மேலும் புலி, சிறுத்தை, கரடி, செந்நாய், ஓநாய், கறையான் திண்ணி, கழுதைப் புலி, எலிமான், பறக்கும் அணில், சாம்பர் மான் ஆகிய பல்வேறு மிருகங்களையும் நாம் காணலாம்.

இந்தச் சரணாலயத்தைச் சுற்றிப் பார்த்து மகிழ வரும் பயணிகளுக்கென்றே சரணாலயத்தினுள்ளே நவீன வசதிகளைக் கொண்ட தங்கும் விடுதிகள் ஆங்காங்கே அமைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் தங்குவதற்குக் குறைந்த விகிதக் கட்டணங்கள்தான் வசூலிக்கப்படுகின்றது. வன விலங்குகளைப் பயமின்றி அருகே சென்று பார்ப்பதற்குப் பழக்கப்பட்ட யானைகள் சவாரிக்கு உள்ளன. இது தவிர சரணாலயத்தினுள் எல்லாப் பகுதிகளையும் சுற்றிப் பார்ப்பதற்கென்று வாகனங்கள் உள்ளன. இச் சரணாலயத்தையொட்டியே கர்நாடக மாநில பண்டிப்பூர் சரணாலயமும், கேரள மாநிலத்தைச் சேர்ந்த வயநாடு சரணாலயமும் உள்ளன.

**2. கொடியக்கரைச் சரணாலயம்:**

இச்சரணாலயம் அருகி வரும் புலியினத்தைக் காப்பதற்கென்றே அமைக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தின் தென் மேற்குப் பகுதியில் இச்சரணாலயம் அமைந்துள்ளது. இதன் மொத்தப் பரப்பளவு 567 சதுர கிலோ மீட்டர். இங்குப் புலி, மற்றும் சிறுத்தைகளைக் காண முடியும். இவை தவிர சாதாரணமாகப் பார்க்க முடியாத குரங்கு வகைகளையும் இச்சரணாலயத்தில் காணலாம். இந்தக் குரங்குகளின் பிறப்பு, இறப்பு மற்றும் இயல்புகளை ஆராய்ச்சி செய்வதற்கென்றே வெளி நாடுகளிலிருந்து ஆராய்ச்சியாளர்கள் வருவது இதன் சிறப்பு மிக்க அம்ச



மாகும். மேலும் புள்ளி மான், சரகு மான், குரைக்கும் மான், காட்டுப் பன்றி, கரடி ஆகியவை இச்சரணாலயத்திற்குப் பெருமை சேர்க்கும் மற்ற மிருகங்களாகும்.

அம்பாசமுத்திரத்திலிருந்து இச்சரணாலயத்திற்குச் செல்ல பஸ் வசதிகள் உண்டு. சரணாலயத்திற்குப் பத்து கிலோ மீட்டர் தூரத்தில் அம்பாசமுத்திரம் ரயில் நிலையம் உள்ளது. சரணாலயத்தினுள்ளேயே தங்கும் விடுதிகள் உள்ளன.

**3. முண்டந்துறைச் சரணாலயம்:**

இச்சரணாலயம் தஞ்சாவூர் மாவட்டத்தில் தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. இதன் பெரும் பகுதி சதுப்பு நிலமாக உள்ளது. சரணாலயத்தின் மொத்தப் பரப்பு *17.29* சதுர கிலோ மீட்டர். வெளி மான் என்ற புல் வாயையும், புள்ளி மானையும் கூட்டங்கூட்டமாக எளிதில் காணலாம்.

இச்சரணாலயத்தின் ஒரு பகுதி கடல்வாழ் பறவையினங்களின் கேந்திரமாக உள்ளது. இந்தச் சரணாலயத்தின் தனிச் சிறப்பு, குளிர் காலத்தில் பல ஆயிரம் மைல்கள் பறந்து வந்து பூநாரைகள் எண்ணிலடங்கா அளவில் கூடுவதைக் கண்டு களிக்கலாம். இதனைச் செங்கால் நாரை என்றும், கோணை மூக்கு நாரை என்றும் சொல்வதுண்டு. ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கில் கோணை மூக்கு நாரைகள் அணிவகுத்துப் பறக்கும் காட்சியைக் காணலாம்.

மேலும், நெட்டைக்கால், கோணை மூக்கு உள்ளான், குயில், உப்புக் கொத்தி, கூஸ் வாத்து, வெள்ளை உள்ளான், தண்ணீர்க் கோழி, கூளக்கடா, பொன்னு கொட்டான், நண்டு தின்னிக் கோட்டான், பட்டாணி உள்ளான், பவளக்கால், பேதை உள்ளான், கொசு உள்ளான், ஆத்து உள்ளான், மயில் உள்ளான், பவளக்கால் உள்ளான், சங்குவளை நாரை, கம்பி வால் தோல் கருவி, சிறவி, உடல் ஆஞ்சி, பெரிய கடல் குருவி, சிறிய கடல் குருவி, கூல் திருப்பி, மஞ்ச வாலாட்டி ஆகிய பல்வேறு பறவையினங்களும், இச்சரணாலயத்தை உறைவிடமாகக் கொண்டுள்ளன. இது இப் பறவையினங்களுக்கென்றே தனிச் சிறப்பு மிக்க சரணாலயமாக உள்ளது.



சிங்கவால் குரங்கு

இச்சரணாலயத்தை நவம்பர் முதல் மார்ச் முடிய உள்ள காலங்களில் சென்று பார்த்தல் நலம். கொடியக்கூரைச் சரணாலயத்தின் ஒரு பகுதிதான் மேலே சொன்னது. மறுபகுதி அடர்ந்த கானகத்தைத் தன்னுள் கொண்டுள்ளது. இப்பகுதியில் அதிக அளவில் வெளி மான்களும், காட்டுப் பன்றிகளும் உள்ளன. புள்ளி மான்கள் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றன. ஓநாய், கீரி, காட்டுப் பூனை ஆகியவை இச் சரணாலயத்தில் வாழுகின்ற மற்றப் பிராணிகளாகும்.

கொடியக்கரைச் சரணாலயத்தைக் காண வருகின்றவர்களுக்கென்றே வசதியாகத் தங்கும் விடுதிகள் உள்ளன.

**4. களக்காடு சரணாலயம்:**

இச்சரணாலயம் திருநெல்வேலி மாவட்டத்தில் களக்காடு

## அரசு ஊழியர்களின்
## வருங்கால வைப்பு நிதி

**அரசு ஊழியர்களின் பொது வருங்கால வைப்பு நிதி (General Provident Fund) சம்பந்தமாக 1977-78—ஆம் ஆண்டுக்கான கணக்கு விவரங்கள் துறைகளின் தலைவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. கீழ்க் கண்ட பிரிவுத் தலைப்புகளின் கீழ் வரும் விவர அறிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளன :—**

| | | | | |
|---|---|---|---|---|
| EDN | MEDL | PH | AGRI | VETY |
| CVD | CO-OP | IND | PW | FOR |
| EL | SCI | PORT | CPW (WC) | |

**பொது வருங்கால வைப்புநிதியில் சேர்ந்து கணக்கு வைத்திருக்கும் அரசு ஊழியர்கள், 1978மார்ச் மாதத்தில் எந்த அலுவலகங்களில் பணியாற்றியுள்ளார்களோ, அந்த அலுவலகங்களிலிருந்து கணக்கு விவர அறிக்கைகளை (Account Statements) பெற்றுக் கொள்ளுமாறு தமிழ்நாடு மாநிலக்கணக்குத் தலைமை அலுவலர் அறிவித்துள்ளார்.**

மலைச்சரிவுப் பகுதிகளிலும், செங்கல்தேரி பீடபூமிப் பகுதியிலும் அமைந்துள்ளது. இச்சரணாலயத்தின் மொத்தப் பரப்பளவு 223 சதுர கிலோ மீட்டர். இப்பகுதியில்தான் மிகவும் அரிய சிங்கவால் குரங்குகள் இருக்கின்றன. நாளுக்கு நாள் குறைந்துகொண்டிருக்கும் இந்த அரிய சிங்கவால் குரங்கை அழிவினின்றும் காப்பதற்கென்றே இந்த வனப்பகுதி வனவிலங்குச் சரணாலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.



மேலும், இப்பகுதிகளில் மலைப் பாம்பு, ராஜ நாகம், நல்ல பாம்பு, உடும்பு இவைகளைச் சாதாரணமாகக் காணலாம். புலி, சிறுத்தை, செந்நாய், ஓநாய், கழுதைப் புலி ஆகிய மாமிசப் பட்சணிகளைப் பார்க்கும் நேரத்தில் யானை, புள்ளி மான், மலை ஆடு, குரைக்கும் மான், சாம்பர் ஆகிய சாகப் பட்சணிகளையும் காணலாம். சேரன்மாதேவி ரயில் நிலையத்திலிருந்து 20 கிலோ மீட்டர் தூரத்தில் சரணாலயம் உள்ளது. செங்கல் தேரியிலும், நெட்டெரிக் காவிலும் தங்கும் விடுதிகள் உள்ளன.

**5. ஆனைமலை வனவிலங்குச் சரணாலயம் :**

இச்சரணாலயம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் பொள்ளாச்சி மற்றும் உடுமலைப்பேட்டை தாலுக்காப் பகுதிகளில் அமைந்துள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலையில் வனப்புமிக்க ஆனைமலைச் சிகரங்களில் 94,000 எக்டேர் பரப்பில் இச்சரணாலயம் பரந்து விரிந்துள்ளது. சரணாலயம் முழுவதும் மலைச் சிகரங்களும், பள்ளத்தாக்குகளும் நிறைந்து காணப்படுகின்றன. மிதமான தட்ப வெப்ப நிலையின் காரணமாகவும், பசுமையான தாவர வர்க்கங்கள் நிறைந்து காணப்படுவதாலும் பெரும்பான்மையான வனவிலங்குகள் இச்சரணாலயத்தில் உறைகின்றன. அதிக அளவில் யானைகள், சாம்பர், புள்ளி மான், எலி மான், சருகுமான் போன்றவைகளைக் காண முடியும். குரங்கினங்களில் இரண்டு மூன்று வகையினைக் காணமுடியும். உடும்பு மற்றும் விஷமில்லாப் பாம்பு இனங்களும் உண்டு. புலி, சிறுத்தை, சாம்பல் நிறக் காட்டெருமை ஆகியவைகளை முயன்று பார்த்தால் பார்க்க இயலும். இச்சரணாலயத்தில் ஆங்காங்கே பார்க்க வருபவர்களுக்குத் தங்கும் விடுதிகள் உள்ளன.

**6. கிண்டி-தேசியப் பூங்கா :**

தமிழ்நாட்டின் தலைநகரான சென்னை நகரில் மையப் பகுதியில் ஆளுநர் மாளிகையின் அருகாமையில் இப்பூங்கா அமைந்துள்ளது. இப்பூங்காவில் மொத்தப் பரப்பளவு 294.36 எக்டேர். இந்தப் பூங்காவில் எண்ணிலடங்காப் புள்ளி மான்களையும், வெள்ளி மான்களையும் கூட்டங் கூட்டமாக ஒரே சமயத்தில் காணலாம். இதைத் தவிர கீரி, நரி, சிறிய காட்டுப் பூனை மற்றும் பாம்பு வகைகள் இப்பூங்காவில் நிறைந்து காணப்படுகின்றன. இப்பூங்கா நகரின் எல்லைக்குள்ளேயே இருப்பதால் நகரின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் பஸ் வசதிகள் உள்ளன. இப்பூங்காவிற்கு அருகாமையிலேயே கிண்டி மின்ரயில் நிலையம் உள்ளது.

**7. வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் :**

தென்னிந்தியாவில் உள்ள மிகப் பெரிய பறவைகள் சரணாலயங்களில் ஒன்றாகத் திகழ்வது வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயமாகும். இச்சரணாலயம் செங்கற்பட்டு மாவட்டத்தில் வேடந்தாங்கல் கிராமத்தில் அமைந்துள்ளது. சென்னையில் இருந்து 53 மைல் தூரத்தில் இது இருக்கிறது.




வனவிலங்கு வார விழாவினை ஒட்டி அக்டோபர் 3ஆம் நாளன்று, அஞ்சல் துறையினரால், நெல்லை மாவட்டம் களக்காடு அஞ்சல் நிலையத்தில் அறிமுகம் செய்யப்பட்ட களக்காடு சரணாலய அஞ்சல் முத்திரை.

இங்குள்ள ஏரியில் அதிக அளவில் கடம்ப மரங்கள் கப்புங்கிளையுமாக இருப்பதால் மழைக் காலங்களில் ஏரி நீர் நிறைந்து காணப்படும் நாட்களில் பல்லாயிரக்கணக்கான மைல்களைக் கடந்து நீர்ப்பறவைகள் இங்கு வந்து இனப்பெருக்கத்தைச் செய்கின்றன. பொதுவாக, நீர்ப் பறவைகளை அதிக அளவில் நாம் காணக்கூடிய காலங்கள் அக்டோபர் முதல் மார்ச் வரையிலும் மற்றும் நவம்பர் டிசம்பர் மாதங்களாகும்.

இந்த ஏரியில் வந்து இனப்பெருக்கம் செய்யும் அரிய பறவைகள் பவளக்காலி, கூளக்கடா, நீர்க்கோழி, உப்புக் குருவி, வெண்கொக்கு, உன்னி கொக்கு, மடையான், முக்குளிப்பான், மஞ்சுதிருடி, நரையான், நத்தைக் குத்தி நாரை, துடுப்பு மூக்கு நாரை, கங்கணம், பாம்புத் தாரா போன்றவைகளாகும்.

இப்பறவைகளைக் கண்டு களிப்பதற்கென்றே வரும் பொது மக்களுக்கு நவீன வசதிகளுடன் கூடிய தங்கும் விடுதியும் இச் சரணாலயத்தில் உள்ளது. இச் சரணாலயத்திற்கு அருகாமையில் கருங்குழி ரயில் நிலையம் உள்ளது. சென்னை, செங்கற்பட்டு, மதுராந்தகம் ஆகிய மூன்று இடங்களிலிருந்தும் இப்பறவைகள் சரணாலயத்திற்குச் செல்ல பஸ் வசதிகள் உள்ளன.



# முதுமலையில் மீண்டும் காட்டெருமைகளின் வருகை!

**ச. ஜான் ஜோஸப்,**
**வனவிலங்குக் காப்பாளர்,**
**முதுமலேச் சரணுலயம்.**

சில ஆண்டுகளுக்கு முன் முதுமலே வனவிலங்குச் சரணுலயத்திலிருந்து காட்டெருமைகள் வேகமாக மறைந்து வருவதாகச் செய்திகள் பல வந்தன. 10 ஆண்டுகளுக்குமுன் காட்டெருமைகள் கோமாரி (Rinder past) என்ற கடும் நோய் பீடிக்கப்பட்டு அதன் விளேவாகக் கூட்டம் கூட்டமாகக் காட்டு எருமைகள் மடிந்து வருவதாகப் பல கட்டுரைகள் செய்தித்தாள்களில் வந்தபடி இருந்தன. இதைப் படித்த பொது மக்கள், சரணுலயப் பகுதியில் பரவிவரும் இந்நோயைப் பற்றித் தெரிந்து கொண்டார்கள். மேலும், இந்நோய் கால்நடையிலிருந்து வனவிலங்குகளுக்குப் பரவும் தொத்துநோய் என்றும் தெரிந்து கொண்டார்கள்.

இந்த நோயினுல் பீடிக்கப்பட்ட கால்நடைகள் முதுமலேக் காட்டினுள் உள்ள சிறந்த மேய்ச்சல் இடங்களில் காட்டெருமைகளுடன் போட்டியிட்டு மேய்ந்த வண்ணமிருந்தன. வனவிலங்குகளேப் பாதுகாப்பவர்களும் மற்ற நிபுணர்களின் அறிவிப்புகளும், நோய்பற்றிய கோரிக்கைகளும் கால்நடைச் சொந்தக்காரர்களின் செவியில் விழுந்தும் அதைப்பற்றி அக்கறையின்றி இருந்தனர். இப்பெரும் நோயினுல் பாதிக்கப்பட்ட கால்நடைகளேக் கூட்டங்களிலிருந்து பிரித்து, இந்நோய்க்கான தடுப்பு ஊசி போட்டு, சிகிச்சையளிக்கும் முன்பே, பெருவாரியான காட்டெருமைகள் மடிந்து அவற்றின் எண்ணிக்கை குறைந்தன.

காட்டெருமைகளின் உடல் வலிமை சக்தியினுல் இவ்வாறு பரவும் தொற்றுநோயை ஒருவாறு தாங்கவும் தடுக்கவும் முடியும். ஆனுல், இனப்பெருக்கத்தின் காரணமாகவும், கிராமக் கால்நடைகளுடன் மேய்ச்சலுக்குப் போட்டியின் காரணமாகவும் ஏராளமான தனி மிருகங்கள் வறட்சிக் காலங்களில் உணவுக்காகக் கஷ்டப்படுகின்றன. இந்தக் காலங்களில் உணவுப் பற்றுக்குறை ஏற்பட்டு மிருகங்கள் பலவீனமாக இருப்பதால் தொற்று நோய் பரவுவதற்குச் சாதகமாக உள்ளது. அபரிமிதமான நோய் பரவுவதற்கு ஏதுவாக உள்ள கிருமிகளும், ஒட்டுருவிகளும் ( parasites ) நோய் பீடிக்கப்பட்ட விலங்குகள் இறுதியில் மடிவதற்குக் காரணமாக உள்ளது. இதை நாம் இனப்பெருக்கத்தைக் குறைக்க இயற்கை கையாளும் ஒரு கட்டுப்பாடு முறை என்று கூடக் கூறலாம். இதற்கு இணையாக மான்போன்ற சாக பட்சணிகளேக் கொன்று தின்பதன் மூலமாகவும் இனப்பெருக்கத்தைத் தடை செய்யும் மாமிச பட்சணிகளின் செயலுக்கு ஒப்பிட்டுக் கூறலாம்.

நோயின் கடுமையால் கடந்த 10 ஆண்டுகளாக முதுமலேக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்குச் சாதாரணமாகக் காணப்பட்டு வரும் காட்டெருமைகள், யாருடைய கண்ணுக்கும் எளிதாகத் தென்படவில்லே. ஆனுல், கடந்த 10 மாதக் காலம் சரணுலயத்தின் வெவ்வேறு பகுதிகளேத் துருவி நோக்கும்போது காட்டெருமைகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் அறிகுறிகள் தென்படுகின்றன.

**நான்காவது அட்டையில் காட்சி தருவது காட்டெருமை.**

கூட்டங்களில் வெவ்வேறு எண்ணிக்கை கொண்ட எருமைகள் தோன்றுவதுடன் ஒவ்வொரு கூட்டங்களிலும் 2—3 குட்டிகளுடன்காணப்படுகின்றன. இந்த இனக்கூட்டங்களில் சீரான இனப்பெருக்கத்தைக் காண முடிகிறது. அவற்றின் தோற்றத்தில்ருந்து ஆரோக்கியமாகவும் சுறுசுறுப்பாகவும் காண்பதுடன், பெருகும் இவ்வினத்தின் திடகாத்திர உடலமைப்பினுல் நோய் எதிர்ப்புச் சக்தியையும், நோயினுல் பாதிக்கப்படாத உடல் வலிமையையும் கொண்டதாகத் தெரிகிறது.

கடந்த 19-ஆம் நூற்றுண்டில் இவ்வாறு பெருவாரியாகப் பரவும் கோமாரி நோய் உலகத்தின் ஏராளமான இடங்களில் விரைவாகப் பரவியிருந்தது. ஆப்பிரிக்காவில் முதன் முதலாக இந்த நோய் சோமாலியில் தோன்றுகிறது. இந்த இடத்திலிருந்து இந்நோய் தெற்கே சாவன்னுஸ் வழியாகப் பரவி கிழக்கு ஆப்பிரிக்காவிலிருக்கும் குருகர் தேசிய பூங்காவைக் கடூரமாகத் தாக்கியது.

மூன்று ஆண்டுகளுக்குள் இயற்கையின் தானே செயல்படும் சக்தியால் இப்பெரும் நோய் தாளுகவே திடீரென்று மறைந்தது. அதன்பிறகு இதுபோன்ற நோய்கள் எதுவும் அப்பகுதியில் தோன்றவில்லே. இந்த நோயினுல் கால்நடைகளுடன் ஏராளமான வனவிலங்கு இனங்களும் அழிக்கப்பட்டிருந்தன.

இந்த அனுபவங்கள் மூலமாகப் பார்க்கும்போது முதுமலேச் சரணுலயத்தில் இப்பெரும் நோயின் அலேகள் மறைந்துவிட்டன என்று எடுத்துக் கொள்ளலாம். ஆனுல் எதிர்காலத்தில் இதுபோன்ற இன்னெரு பரவும் நோய் வராது என்று கூற முடியுமா?

இதற்கு முன்னெச்சரிக்கையாகத் தடையின்றி சுற்றித்திரியும் கால்நடைகளுக்கு அவ்வப்போது நோய்த் தடுப்பு ஊசி போட்டு நோய் பரவாமல் தடுக்க வேண்டும். இருந்தபோதிலும் சரணுலயத்தில் காட்டெருமைக் கூட்டங்களேப் பார்க்கும்போது அவற்றின் இனம் மேலும் விரைவாக விருத்தியடைந்து வருகிறது என்று நம்ப முடிகிறது.

இதன் மூலம் காட்டெருமைகள் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து விட்டதையும் மேலும் இன்னும் பெருகும் என்று எதிர்பார்க்கவும் இடம் கொடுக்கிறது.



# வன விலங்குப் புகலிடங்கள்

டி. பி. ஜம்புலிங்கம், ஐ.எப்.எஸ்.
வனவிலங்குப் பாதுகாப்பாளர்,
சென்னை-6.

வனவிலங்குகளைப் பாதுகாப்பதிலும், பேணி வளர்ப்பதிலும் வனவிலங்குப் புகலிடங்கள் முக்கியமான பங்கு பெறுகின்றன. வனவிலங்குகள் பெரும்பாலும் மனித இடையூறு இல்லாத உள்ளடங்கிய காட்டுப் பகுதிகளில் வாழ்கின்றன. இவ்வாறு வனவிலங்குகள் விரும்பி ஏற்றுள்ள உறைவிடங்களைப் புகலிடங்களாக மாற்றி இப்பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள் பலவும் ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன.

வனவிலங்குகள் இடையூறு எதுவுமின்றி இயற்கைச் சூழலில் எழில்பட வாழுதலைக் காணுதலே பெரும் இன்பம் தரும் ஒரு பொழுது போக்காகும். ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ் இப்புகலிடங்களுக்குச் சுற்றுலாப் பயணிகள் சென்று தங்கி வர விடுதிகளும், போக்குவரத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. அவையாவன :

வனவிலங்கு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இரண்டாம் திட்ட காலம் துவங்கி, ஐந்தாம் திட்ட காலம் வரை (1977-78 வரை) ரூ. 61 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. புகலிடங்களுக்கு உல்லாசப் பயணிகள் வருகை தர ஏதுவாகச் சாலைகள் போடுதல், தங்கும் விடுதிகள் அமைத்தல், வனவிலங்குகளுக்கு இயற்கைச் சூழலில் நீர் நிலைகள் அமைத்தல் போன்ற பல மேம்பாட்டுப் பணிகள் திட்டத்தின் கீழ் செய்யப்பட்டு வருகின்றன.

மத்திய அரசுத் திட்டங்களான சாத்தனூரில் முதலை வளர்ப்புத் திட்டம், திருநெல்வேலி மாவட்டத்தில் களக்காடு பகுதியில் அரிதாக இருக்கும் சிங்கவால் குரங்குகளைக் காக்கப் புகலிடம் ஏற்படுத்தல், தஞ்சை மாவட்டத்திலுள்ள கோடியக்கரைக் காட்டில் இருக்கும் வெளி மான்கள் மற்றும் நீர்வாழ் பறவையினங்களைக் கொண்ட சரணாலயத்தை மேம்பாடுகள் செய்தல், நீலகிரி மாவட்டத்திலுள்ள முதுமலை வனவிலங்கு சரணாலயத்தில், வனவிலங்குகளுக்குத் தேவையான அமைதிச் சூழலை அமைத்தல் போன்ற பல பணிகள், கடந்த மூன்றாண்டுகளாகச் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டங்களுக்காக மத்திய அரசு சுமார் 13 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. அதே சமயத்தில் தமிழக அரசும் இத்திட்டங்களின் நடைமுறைச் செலவிற்காக, சில இலட்ச ரூபாய்கள் ஒதுக்கியுள்ளது.

மேலும், தமிழகத்தில் அருகி வரும் சில விலங்கினங்களைப் பேணிக் காப்பாற்ற சில சரணாலயங்கள் குறிப்பாக, வட ஆர்க்காடு, தர்மபுரி, கோவை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் அமைக்கும் எண்ணமும் இத்துறையின் பரிசிலனையில் உள்ளது.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் வன விலங்குகள் மேம்பாட்டிற்கென 75 இலட்ச ரூபாய் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது தவிர வண்டலூரில் மிருகக் காட்சிச் சாலை ஒன்று ஏற்படுத்த 3 கோடி ரூபாயும் ஆறாவது திட்டக் காலத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் பல இடங்களில் பறவைகள் சரணாலயங்களும், பறவைகள் காப்புப் பகுதிகளும் உள்ளன. இவ்வாறு அமைந்த பறவைக் காப்பகங்கள் பெரும்பாலும் அரசுக்கும், ஊராட்சிக்கும் சொந்தமான தரிசு நிலங்களில் வனத் துறையால் ஏற்படுத்தியுள்ள சமூக நலக் காடுகளில்தான் உள்ளன.

சமூகநலக் காடுகள் ஒவ்வொரு கிராமத்தின் சுற்றுப் புறங்களிலும் உள்ள நீர்நிலைகளிலும், வெற்று நிலங்களிலும் நல்ல முறையில் வளர்க்கப்பட்டுள்ளன.

பறவைகள் தங்கும் வசதியினை சமூக நலக் காடுகள் தருவதால், பறவைகள் கிராமங்களில் உள்ள பயிர்களைப் பாதிக்கும் பூச்சி புழுக்களைத் தின்று விவசாயிகளுக்கு மறைமுக உதவி செய்கின்றன. மேலும், பறவைகளின் கூட்டத்தின் காரணமாக ஏரி, குளங்களில் இருந்து வரும் தண்ணீர் நல்ல உரம் கொண்டதாக வயல்களுக்குக் கிடைக்கிறது. இத்தகைய சமூக நலக் காடுகள் இருப்பின், நமது ஆடு, மாடுகள் சரணாலயங்களுக்குச் செல்வது குறைந்து அங்குள்ள வன விலங்குகள் யாதொரு இடையூறுமின்றி வாழலாம்.





# குவலயம் ஏற்றுள்ள திட்டம் குடும்ப நலத் திட்டம்


— வெ. நாமதேவன்,
துணை இயக்குநர்,
(குடும்ப நல விளம்பரம்)


குடும்ப நலத் திட்டம் என்றதும், குழந்தை பெறக்கூடாது எனச் சொல்வதாகத் தவறான கருத்து ஒன்று நிலவி வருகிறது. குடும்ப நலம் என்பது குறைவான குழந்தைகளோடு நிறைவான வாழ்வு வாழ வேண்டும். குழந்தையும், தாயும் குறைவு ஏதுமில்லாமல் வளர வேண்டும். குழந்தைப் பருவத்தில் நல்ல வளர்ச்சி பெறத் தேவையான ஊட்டச் சத்துக்கள் அனைத்தும் குழந்தைக்குக் கிட்டச் செய்ய வேண்டும். 'கருவிலே திரு' வாக அதுவளர, கருவுற்ற தாய்மார்கள் பேணப்பட வேண்டும். உரிய சத்துணவுகளைப் பெற்றுத் தம் உதிரத்தாலே அவர்கள் குழந்தையைக் கருவிலே வளர்க்க ஆவன செய்ய வேண்டும். இரத்த சோகை நோயும், இசிவு நோயும் கருவுற்ற தாய்மார்களைத் தாக்காமல் தடுத்துக் கொள்ள-காக்கக் குடும்ப நலத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சத்து மாத்திரைகளை, மருந்துகளைப் பயன்படுத்த வேண்டும். குழந்தைகளுக்கிடையே தக்க இடைவெளி தர குடும்ப நலத் திட்ட முறைகள் பயன்படுத்தப்பட வேண்டும்.

தற்காலிக முறைகள், நிரந்தர முறைகள் என உள்ள முறைகளைப் பயன்படுத்தினால் பயன் பெறலாம். நித்த நித்தம் உண்ணும் கருத்தடை மாத்திரைகளால் நல்ல பலன் கிட்டும். குழந்தைகளுக்கு வரும் கக்குவான், இசிவு நோய், தொண்டை அடைப்பான் போன்ற நோய்களைத் தடுக்கவும் குடும்ப நலத் திட்டத்தின் கீழ் மாத்திரை மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. மாலைக்கண் நோய் வராமல் தடுக்க 'வைட்டமின் ஏ' மருந்து கொடுக்கப்படுகிறது. அதைத் தந்து எதிர்காலச் சமுதாயத்தின் கண்ணொளி காக்க வேண்டும். குடும்ப நல நிரந்தர சிகிச்சை ஏற்ற பின்னும் குழந்தை வேண்டும் என்ற நிலை பிறந்தால் மறு அறுவைச் சிகிச்சை மூலம் (Recanalisation Operation) அந்த வாய்ப்பைப் பெறலாம். கருச்சிதைவுக்கும் வாய்ப்புண்டு. இதுதான் குடும்ப நலத் திட்டமே தவிர, குழந்தைகளே வேண்டாம் என இத்திட்டம் சொல்லவில்லை. பிறந்த குழந்தைகளைப் பேணிக்காக்க வேண்டும். குழந்தைகளுக்குரிய உரிமைகளான நல்வாழ்வு, சிறந்த கல்வி, நோய்களிலிருந்து பாதுகாப்புப் போன்ற எல்லா உரிமைகளையும் அவரவர் வருவாய்க்கேற்றவாறு தங்கு தடையின்றி நல்கியாக வேண்டும். அதற்குப் பெரிதும் உதவுவது குடும்ப நலத் திட்டம் என்றுதான் சொல்லப்படுகிறது. திட்டத்தை ஏற்றுச் செயல்படுத்துவது அவரவர் மனப்பூர்வமான விருப்பத்தைப் பொறுத்தது. அரசு சொல்கிறது, அதனாலே ஏற்றுத்தான் ஆக வேண்டும் என்ற கட்டாயமோ, அச்சுறுத்தலோ அல்லது வேறு எந்த விதமான நெருக்கடியோ நிச்சயமாக இல்லை. அதனாலேதான் மத்திய அரசு குடும்பநலக் கல்வியைப் பரவலாக மக்களுக்கு அளிக்கவும், விளம்பரப் பணிகளை முனைந்து ஆற்றவும் ஊக்கமளித்து வருகிறது.

தமிழ்நாடு அரசு குடும்ப நலத் திட்டத்திற்காக இந்திய அரசு வழங்கும் நூறு சதவிகித நிதி உதவியைப் பெற்றுத் தக்க முறையில் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. Political commitment to the programme என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். அத்தகைய பெருத்த ஈடுபாட்டை நமது தமிழகத்தில் காண முடிகிறது. எதிர்க்கட்சிகளையெல்லாம் ஈடுபடுத்திக் குடும்ப நலத் திட்டப் பிரச்சாரம் தமிழகத்தில்தான் செய்யப்பட்டுள்ளது என்று பாராட்டி, பிற மாநிலங்களும் இதைப் பின்பற்ற வேண்டும் என இந்திய அரசின் உயர் அலுவலர்கள் கூறியுள்ளனர். அந்த அளவுக்குத் திட்ட நிறைவேற்றத்திற்காகத் தமிழ்நாடு அரசு அனைத்துமட்டத்திலும் கிடைக்கும் ஒத்துழைப்பைப் பெற்று மேம்பாடடையச் செய்து வருகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் வாய்ப்புக் கிட்டும்போதெல்லாம் 'சிறுகக் கட்டிப் பெருக வாழ்க' என்ற தத்துவத்தின் அடிப்படையில் குடும்ப நலத் திட்டம் குறித்து வலியுறுத்தி வருகிறார்கள்.

அதேபோல் தமிழக அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்தோரும் இத்திட்ட வெற்றிக்கு உறுதுணையாக இருந்து உதவி



## கருவுற்ற தாய்மார்களின் நலம் காப்பதும் குடும்ப நலமே!

வருகின்றனர். தமிழகத்தில் இருந்து இயங்கி வரும் மத்திய அரசின் செய்தி ஒலி பரப்பு பிரிவைச் சார்ந்த பல்வேறு பிரிவினரும் திட்டத்தை மக்களிடையே பரப்ப ஒத்துழைப்பு நல்கி வருகின்றனர். தொலைக் காட்சியும், வானொலியும் சிறந்த முறையில் சிறு குடும்ப நெறியைப் பரப்பி வருகின்றன. தமிழ்நாடு அரசின் செய்தி விளம்பரத் துறையின் நல்ல ஒத்துழைப்பும் குடும்ப நலத்திட்டத்திற்குக் கிட்டி வருகிறது. நீண்ட இடைவெளிக்குப் பின், சென்ற ஆண்டு முதல் குடும்ப நல விளம்பரத்திற்கென நாடகங்கள், இசை நிகழ்ச்சிகள், வில்லுப்பாட்டு, கதாகாலட்சேபம் போன்ற நிகழ்ச்சிகளையும் நடத்தத் தமிழ்நாடு அரசு அனுமதித்து வருகிறது. இதற்கெனத் திரைப்படங்களும் எடுக்கப்பட்டுள்ளன.

சிறப்பாகக் கடந்த மாதம் சென்னையிலுள்ள மத்திய அரசின் இசைநாடகப் பிரிவின் (Song and Drama Division) துணையோடு சென்னையிலுள்ள முப்பது குடிசைப் பகுதிகளில் கலை நிகழ்ச்சிகளை நடத்த தமிழ்நாடு அரசின் குடும்ப நலத்துறை ஏற்பாடு செய்திருந்தது. மாண்புமிகு அமைச்சர்களும், மாண்புமிகு பார்லிமெண்டரி செயலர்களும் இந்நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு உரையாற்றி மக்களை ஊக்குவித்தனர். அர்த நேரத்தில் சென்னைக்கு வருகை தந்திருந்த முன்னாள் இந்திய நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சுசீலா நய்யார் அவர்கள் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அரசின் குடும்ப நலத் திட்ட விளம்பரப் பணியைப் பாராட்டி, சிறு குடும்ப நெறியையும், மது விலக்கையும் வலியுறுத்தி உரையாற்றினர்.

நகர்ப்புறங்களிலே மட்டுமல்லாது கிராமப்புறங்களிலும் மாவட்டக் குடும்ப நல விளம்பரப் பிரிவுகளின் வாயிலாக நல்வாழ்வுக் கல்வி முதல், தாய்-சேய் நலம், குடும்ப நலத்திட்டம் ஆகியவை குறித்துத் தக்க பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசு மதுரையில் சித்திரைத் திருவிழாவையொட்டி நடத்திய கண்காட்சியிலும், அண்மையில் சேலத்தில் நடத்தி முடித்துள்ள கண்காட்சியிலும் குடும்ப நலத் துறையின் சார்பில் அரங்கம் அமைக்கப்பட்டு லட்சக்கணக்கான மக்கள் திட்ட விளக்கம் பெற உதவியது. குடும்ப நலத் துறைக்கென உள்ள அச்சகத்தின் வாயிலாகத் துண்டு வெளியீடுகளும், சுவரொட்டிகளும் பிறவும் வெளியிடப்பட்டு மக்களிடையே வழங்கப்படுகின்றன. 'குடும்ப நலச் செய்திக் கதிர்' என்ற மாத இதழ் ஒன்றும் நல்வாழ்வு மருத்துவ, குடும்ப நலக் கருத்துக்களைக் கொண்டதாக வெளியிடப்படுகிறது. என்னென்ன முறைகள் உண்டோ அத்தனை முறைகள் வாயிலாகவும் திட்ட விளம்பரம் சிறக்கச் செய்யப்பட்டு வருகிறது குடும்ப நல விளம்பரப் பணிகள் முனைப்பாக ஆற்றப்பட வேண்டும். இன்னின்ன வகையில் ஆற்ற வேண்டும் என்ற இந்திய அரசின் அறிவுறுத்தலுக்கிணங்க, அனைத்துலகக் குடும்ப நல முறைமைகளிலிருந்து வழுவாமல் (International Ethics on Family Welfare) தமிழ்நாடு அரசின் ஒப்புதலுடன் இப்பணிகள் சிறந்த முறையில் ஆற்றப்பட்டு வருகின்றன.

ஆரம்ப சுகாதார நிலையங்கள், அதன் கிளை நிலையங்கள், முதல் மருத்துவக் கல்லூரிகளைச் சார்ந்த மருத்துவ மனைகள் ஈறாக இத்திட்ட நிறைவேற்றத்திற்கான மருத்துவ சேவைகள் இலவசமாகக் கிட்ட அரசு ஆவன செய்துள்ளது. நிரந்தர குடும்ப நல சிகிச்சை (Sterilization operation) செய்து கொள்ளும் தந்தையானாலும், தாயானாலும், அவர்களுக்கு அரசு ஈட்டுத் தொகையாக ரூ. 70 வழங்குகிறது. அந்த வகையில் நடப்பு ஆண்டில் 31-8-78 முடிய 2770 தந்தைமார்களும், 34,352 தாய்மார்களும், ஆக மொத்தம் 37,122 பேர்கள் குடும்ப நல நிரந்தர சிகிச்சை ஏற்றுள்ளனர். 9303 தாய்மார்கள் கருத்தடை வளையம் பொருத்திக் கொண்டுள்ளார்கள். 66,922 பேர்கள்வெவ்வேறு கருத்தடை முறைகளைப் பின்பற்றி வருகிறார்கள். 2922 தாய்மார்கள் உண்ணும் கருத்தடை மாத்திரைகளைதொடர்ந்து அருத்தி வருகிறார்கள். 12,769 மாத்திரை மடிப்புகள் (Cyclis distributed) வழங்கப்பட்டுள்ளன. 8876 தாய்மார்கள் கருச்சிதைவு ஏற்றுள்ளனர். தாய் சேய் நலப் பணிகளிலும் தமிழகம் குடும்ப நலத் திட்டத்தின் கீழ் சிறந்த பணியாற்றி வருகிறது. இத்தகைய சாதனைகள் காரணமாகத் தமிழ்நாடு குடும்ப நலத்





# குழந்தைகள் குறைவில்லாது வாழ குடும்ப நலம் உதவுகிறது!

திட்டத்தைப் பொறுத்து இந்தியாவிலேயே மூன்ருவது நிலையில் இருந்து வருகிறது.

இன்னும் முனைப்போடு பணிகள் ஆற்றப்பட வேண்டும், குடும்ப நலத் திட்டம் குறித்து மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கை உணர்வை வளர்த்தாக வேண்டும், என்ற அடிப்படையில், கிராமப் புறங்களிலெல்லாம், 'குடும்ப நலப் புத்தறிவுப் பயிற்சி முகாம்களை' நடத்த வேண்டுமென்றும், கிராம சமுதாயத்தைச் சேர்ந்த தலைவர்களுக்குத் திட்டத்தில் பிடிப்பையும், பயிற்சியையும் உண்டாக்க வேண்டுமென்றும், இந்திய அரசு அறிவுறுத்தியது. அதன்படி மாவட்டக் குடும்ப நலச் செயலகங்களின் மூலம் 15-8-78 முதல் 304 முகாம்கள் நடத்தி முடிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் நடத்தப்பட்டு வருகின்றன. நவம்பர் முதல் அடுத்து 374 முகாம்களும் நடத்தப்பட இருக்கின்றன. இந்த முகாம்களின் வாயிலாகக் கிராம மக்களின் முழுக் கவனமும் குடும்ப நலத் திட்டத்தின்பால் திருப்பப்படுகிறது. திட்டத்திற்கு ஆதரவான கருத்துக்கள் மக்களிடையே உருவாக்கப்படுகின்றன. தவருன கருத்துக்கள் போக்கப்படுகின்றன. கிராம சமுதாயத்தைச் சேர்ந்த தலைவர்களே இம்முகாம்களில் பங்கேற்று, திரும்ப மக்களிடையே எடுத்துச் சொல்லும்போது மக்களுக்கும் நம்பிக்கை பிறக்கிறது.

இளைய சமுதாயத்தினரிடையே, திருமணத்தைத் தள்ளிப் போடுங்கள் எனக் கூறப்படுகிறது. இந்திய அரசு அண்மையில் பெண்களின் திருமண வயதை 18 ஆகவும், ஆண்களின் திருமண வயதை 21 ஆகவும் உயர்த்திச் சட்டம் இயற்றியுள்ளது என்பதை அனைவரும் அறிவர். திருமணத்தைத் தள்ளிப் போடுவதும் திருமணத்திற்குப் பின் உடனடியாகக் குழந்தை பெருமல், இரண்டு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு குழந்தை பெறுவதும், தக்க இடைவெளிக்குப் பின் பெறுவதும், ஒன்றிரண்டு குழந்தைகளோடு சிறு குடும்பம் அமைத்து வாழ்வதும் இளைய சமுதாயம் இந்தியாவிற்குச் செய்யும் அருந்தொண்டாகும்.

நாடு முழுவதும் வரும் அக்டோபர் 16 முதல் குடும்ப நல இருவார விழா எடுக்கப்படுகிறது. சாதி, சமய வேறுபாடு எதுவும் இன்றி அரசு செய்து தந்துள்ள வசதிகளையெல்லாம் பயன்படுத்திக் கொண்டு மக்கள் குடும்ப நலத் திட்டம் ஏற்று அரசுக்கு உதவ வேண்டும்.

**குடும்ப நலத் திட்டம் தாய்-சேய் நலத்திட்டம்;**

**குடும்ப நலத் திட்டம் தந்தை நலத் திட்டம்;**

**குடும்ப நலத் திட்டம் மகளிர் நலத் திட்டம்;**

**குடும்ப நலத் திட்டம் நல் வாழ்வுத் திட்டம்;**

**குடும்ப நலத் திட்டம் குடும்பப் பொருளாதாரம் காக்கும் திட்டம்;**

**குடும்ப நலத் திட்டம் குவலயமே ஏற்றுள்ள திட்டம்;**

**குடும்ப நலத் திட்டம் கருவுற்ற தாய்மார்களைக் காக்கும் திட்டம்;**

**குடும்ப நலத்திட்டம் குடும்பத்திலுள்ளோர் அனைவரது உடல் நலம் காக்கும் திட்டம்;**

**குடும்ப நலத் திட்டம் குழந்தைகள் கண்ணொளி பெறஉதவும் திட்டம்;**

**குடும்ப நலத் திட்டம் குடும்பத்தைச் சிறக்கச் செய்து நாட்டிற்கு வளமூட்டும் திட்டம்.**




ஐஸ்கிரீம் என்பது, கிரீம், பால்' பால்பவுடர், பகுதி நீர் வற்றிய பால், மற்றும் சர்க்கரை வாசனை, இணைப்புப் பொருள்கள் ஆகியவை சேர்ந்த ஒரு கலவையாகும்.

எடை அளவில் ஐஸ்கிரீமில் கீழ்க்கண்ட மூலப் பொருள்கள் இருக்கும்.

8 லிருந்து 14 சதவிகிதம்— கொழுப்பு ( Fat )

8லிருந்து 12 சதவிகிதம்— கொழுப்பு இல்லாத திடப் பொருள்.

12லிருந்து 17 சதவிகிதம் சர்க்கரை மற்றும் சிறிய அளவில் இணைப்புப் பொருள்கள் முட்டை, பழங்கள், கலர், வாசனைத் திரவியங்கள் முதலியன.

நுண்ணுயிர்க் கிருமிகள் ஐஸ்கிரீமில் ஏராளமாக உள்ளன. ஐஸ்கிரீமில் அடங்கியுள்ள தனிப்பட்ட பொருள்களைப் பற்றி ஆராய்வோம்.

கிரீம் :—நன்றாகப் பதப்படுத்தப்பட்ட கிரீமில் ஒரு மில்லி லிட்டருக்கு 5,000 முதல் அதிகப்படியாக 1,00,000த்துக்குள் நுண்ணுயிர்க் கிருமிகள் அடங்கி இருக்கலாம்.

**பால் பவுடர் பகுதிநீர் வற்றிய பால் பொருள்கள் :—**

பால் பவுடரில் நுண்ணுயிர்க் கிருமிகள் ஒரு கிராமுக்கு 50,000க்குக் குறைவாக இருந்தால் நலமானது. இந்தப் பொருள்கள் ஐஸ்கிரீமுக்குத் தேவையான திடத் தன்மையைக் கொடுக்கின்றன.

**சர்க்கரையும், அதைச் சார்ந்த இனிப்பு வகைகளும் :—**

கரும்பிலிருந்து தயாராகும் சீனியையே பெரும்பாலும் இனிப்புப் பொருளாக உபயோகிக்கிறார்கள். இது திரவமாக உபயோகிக்கப்படுகிறது. இதனால் உள்ள பயன்கள் வருமாறு.

(அ) பெரிய அளவிலுள்ள சர்க்கரைத் திரவத்தை சுலபமாக சரியான அளவில் எடுக்கலாம்.

(ஆ) கெடாத தன்மைகளையும் நல்ல பௌதிகத் தன்மைகளையும் கொண்டது.

(இ) பதப்படுத்தப்படும் இயந்திரங்களில் இவைகளைச் சுலபமாகவும் இலகுவாகவும் பயன்படுத்தலாம்.

ஒரு கிராமுக்கு 20 முதல் 200 வரை நுண்ணுயிர்க்கிருமிகள் இருக்கலாம் என்று வரையறை உள்ளது.

**இணைப்புப் பொருள்கள் :—**

இவை ஐஸ்கிரீமுக்கு மிருதுவான வழவழப்புத் தன்மையையும், அமைப்பையும் கொடுக்கின்றன. இவை ஐஸ்கிரீமில் வெண்ணெய் பிரியாமல் தடுத்தும், பெரிய ஐஸ்கட்டிகள் உருவாவதைத் தடுத்தும் உதவுகின்றன. இணைக்கும் பொருள்களை ஐஸ்கிரீம் கலவையில் சுலபமாகக் கரையுமாறு பொடியாக்க வேண்டும். பொடியாக்கிய பிறகு இணைக்கும் பொருளை சர்க்கரை, பால் பவுடர் இவற்றுடன் சிறிது சிறிதாகக் கலந்து, பிறகு கலவையைப் பதப்படுத்த வேண்டும்.

ஜிலேடின் என்ற இணைப்புப் பொருளில் ஒரு கிராமுக்கு 10,000-க்கு மேல் நுண்ணுயிர்க் கிருமிகள் இருக்கக்கூடாது.

**பழங்களும், கொட்டைகளும் :—**

ஐஸ்கிரீம் கலவை நன்றாகப் பதன்படுத்தப்பட்ட பிறகு இவைகளைச் சேர்க்க வேண்டும். புதிய பழவகைகளில் அதிகமாக நுண்ணுயிர்க் கிருமிகள் உள்ளன. பழங்களை டின்களில் அனுப்பும் போது, நன்றாகக் கொதிக்க விடப்பட்ட சர்க்கரைத் திரவங்களில் அனுப்ப வேண்டும். சில பழங்களில் ஸல்பர்-டை-ஆக்ஸைடு, மீதைல் புரோமைடு இவைகளைக் கொண்டு நுண்ணுயிர்கள் குறைக்கப்படுகின்றன.

ஐஸ்கிரீமில் நிறத்தையும் வாசனையையும் அளிக்கக்கூடிய திரவங்களை, கலவை நன்றாகப் பதன்படுத்தப்பட்ட பிறகுதான் அதில் சேர்க்க வேண்டும்.வாசனை கலந்த திரவங்களில் ஆல்கஹால் சேர்க்கப்படுவதால், அவைகளில் கிருமிகளின் எண்ணிக்கை குறைவாக இருக்கும்.

**முட்டையினாலான பொருள்கள் :—**

முட்டை மஞ்சள் புதியதாகவோ, உறைக்கப்பட்டோ பொடி செய்யப்பட்டோ உபயோகிக்கப்படுகின்றன. ஒரு கிராமுக்கு 10,000க்கு மேல் நுண்ணுயிர்க்கிருமிகள் இருத்தல் ஆகாது என்று அகார் முறைப்படி வரையறை உள்ளது.

ஐஸ்கிரீம் கலவையைப் பதப்படுத்தும் முறையில் கீழ்க்காணும் வழிகள் கையாளப்படுகின்றன.

(1) கலவை தயாரித்தல்

(2) பதப்படுத்தும் முறை

(3) பால் கொழுப்புப் பொருளை நுண் துளிகளாகப் பிரித்தல்.

(4) குளிரச் செய்தல்

(5) குளிர் பதனிடுதல்

(6) உறைய விடுதல்

(7) பாக்கிங் செய்தல்

**ஐஸ்கிரீமினால் பரவக் கூடிய வியாதிகள் :—**

ஐஸ்கிரீமை நல்ல சுகாதார முறையில் தயாரித்து விற்பனை செய்யாவிடில் இதன் மூலம் டைபாய்டு ஜுரம், பாரா டைபாய்டு ஜுரம்; டிப்தீரியா, ஸ்கார்லட் ஜுரம் ஆகியவை பரவுகின்றன.




1. பகுத்தறிவின் சிகரம்பெரியார் ஈ.வெ.ரா.
—ஏ.எஸ்.கே.

2. Periyar E. V. R. —D. G. S.

3. Periyarana —Translated by M. Dharmalingam

4. நான் கண்ட பெரியார்
—கோவை அ. அய்யாமுத்து

5. தமிழ்ப் பெரியார்கள்
—வ. ரா.

6. தமிழர் தலைவர்
—சாமி சிதம்பரனார்

7. பெரியார் சிந்தனைகள்
—தொகுப்பாசிரியர் திரு வே. ஆனைமுத்து
(மூன்று தொகுதிகள்)

8. தென்னாட்டு சாக்ரடீஸ்
—ஏ. பி. சனார்த்தனம்

9. பெரியார் ஒரு சகாப்தம்
—பேரறிஞர் அண்ணா

10. கவிஞர் போற்றும் பெரியார்
—தொகுப்பாளர் : புலமைதாசன்.

11. ஈரோட்டுத் தாத்தா (கவிதை)
—நாரா. நாச்சியப்பன்

12. பெரியாரும் கவிஞரும் அண்ணாவும்
—எஸ். சதாசிவம்

13. Philosophy of E. V. R.
—A. Sundara Moorthy

14. Periyar E. V. R. —K.M. Bala Subramaniam

15. இதோ பெரியாரில் பெரியார்
—பட்டுக்கோட்டை அழகிரிசாமி.

16. எதிர்ப்பிலே வளர்ந்த ஈ.வி.ஆர்.
—சாமி சிதம்பரனார்.

17. தமிழகத் தலைவர்கள்
—தொகுப்பு : எம்.என். ராம்சந்தர்
(அமுநாரா)

18. Politics and Social Conflicts in South India
(The Non-brahmin movement—
Tamil Seperation 1916-29.)
—F. Irschick Eugene

19. Periyar— The Man and Revolutionary

20 பெரியார் புகழ்நூறு
தி. நா அறிவொளி

---

ஐஸ்கிரீம் செய்யும் தொழிற்சாலையில் வேலை செய்யும் நபர்களும், ஐஸ்கிரீமைக் கையாளும் தொழிலாளிகளும், சயரோகம் டிப்தீரியா, டைபாய்டு, பாரா டைபாய்டு, ஸெப்டிக் ஸோர் த்ரோட் மற்றும் இதர தொத்து வியாதிகள் இல்லாதவர்களாக இருப்பது மிகவும் முக்கியமானது.

உணவு கலப்படத் தடைச் சட்டத்தின் கீழ் ஐஸ்கிரீமும், அதைச் சார்ந்த உறைந்த பொருள்களும் கீழ்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளன.

| | சதம் |
|---|---|
| இணைப்புப் பொருள்கள் (அதிக அளவு) | 0.5 |
| பால் கொழுப்பு (குறைந்த அளவு) | 10 |
| புரதம் (குறைந்த அளவு) | 3.5 |
| மொத்தத் திடப் பொருள்கள் | 36 |
| பால், பருப்பு ஐஸ்கிரீமில் | 8 |

**டாக்டர் என். ஆர். கோபாலன்**
**சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி,**



# முகப்பு நினைவூட்டும் கவிதை வரிகள்

**மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்**
**நன்கலம் நன்மக்கட் பேறு**

*—திருவள்ளுவர்*

**நன்மக்கட் பேறுபற்றி**
**நானுரைப்ப தொன்றுண்டாம்**
**ஈண்டுக் குழந்தைகள் தாம்**
**எண்மிகுத்துப் போகாமல்**
**வேண்டும் அளவே**
**விளைத்து, மேல் வேண்டாக்கால்**
**சேர்க்கை ஒழித்துக்**
**கருத்தடை யேனும் செய்க!**

*—பாவேந்தர் பாரதிதாசன்*

---


ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.

# ஜாதிகளற்ற சமுதாய அமைப்பே சமதர்மச் சமுதாயத்தின் அடித்தளம்!



உயர்வு, தாழ்வு என்னும் உணர்ச்சியே நமது நாட்டில் வளர்ந்துவரும் ஜாதிச் சண்டை என்னும் நெருப்புக்கு நெய்யாய் இருப்பதால், இவ்வுணர்ச்சி ஒழிந்து அனைத்துயிர் ஒன்றென்று எண்ணும் உண்மை அறிவு மக்களிடம் வளர வேண்டும்.

**—தந்தை பெரியார்.**



இந்த நாட்டிலே, ஜாதி தான் மக்களுக்குள் பேதத்தை ஏற்படுத்தும் முதல் சாதனம். மக்களின் இரத்தத்திலே கலக்கப்பட்டிருக்கும் கடுவிஷம். மனதிலே முடக்கு நோயைப் புகுத்திவிட்டமுறை — எனவே தான் பேதமற்ற சமுதாயத்தை — சமத்துவத்தை — சமதர்மத்தை நாம் நாடவேண்டுமானால் முதலில் ஜாதி தொலைந்தாக வேண்டும்.

**—பேரறிஞர் அண்ணா.**

எங்கும் சமத்துவம் ஓங்க
எல்லாரும் ஓர் குலம்
எல்லாரும் ஓர் நிறை
எனும் இலட்சியம் ஈடேற
தொண்டாற்றுவோம்!

பதிவு எண். M. 8676

